“சில்பாலோக்க வேலைத்திட்டம்”

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

கணக்கீடு

தரம் - 13

திணைக்களம்

சுயகற்றலுக்கான கையேடு

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

கண்காணிப்பும் மேற்பார்வையும்

E.P.T.K ஏக்கநாயக்க
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.R சத்தியேந்திரா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.L.M.சாருடீன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

வழிகாட்டல்

P. விக்னேஸ்வரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

நூலாக்கம் & கணிணி வடிவமைப்பு
K.பிரபாகர் - *SLPS*
மமா/அ/சென்மேரிஸ் கல்லூரி, பொகவந்தலாவ.

மத்தியமாகாணகல்வித்திணைக்களம்

பொருளடக்கம்

தேர்ச்சி இல	தேர்ச்சிகள்	பக்கம்
01	கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் பகுப்பாய்வு செய்வார்.	6
02	வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.	7
03	இரட்டைப்பதிவு முறைக்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்வார்	14
04	முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளில் பதிவு செய்வார்	15
05	நிதிக் கணக்கீட்டின் அடிப்படைகளைப் பகுப்பாய்வு செய்து கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பயன்பாட்டிற்குட்படுத்துவார்.	36
06	தனியாளுடைமை வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார்.	40
07	உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்.	44
08	இலாப நோக்கற்ற அமைப்புக்களின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார்.	56
09	கணக்கறிக்கைகள் பூரணத்துவமற்ற நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார்.	65
10	பங்குடமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்.	68
11	நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் முன்வைக்கும் போதும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பயன்படுத்துவார்.	93
12	வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்.	129

தேர்ச்சி – 01 கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் பகுப்பாய்வு செய்வார்.

கணக்கீடு வரைவிலக்கணங்கள்

அமெரிக்க கணக்கீட்டுச் சங்கம் (American Accounting Association)
தகவல்கள் தேவைப்படும் பிரிவினர்கள் தீர்மானங்களை / முடிவுகளை எடுப்பதற்கு ஏற்றவாறு பொருளாதார தகவல்களை இனங்காணுதல், அளவீடு செய்தல், தொடர்பாடல் செய்யும் செயன்முறையே கணக்கீடாகும்.

அமெரிக்க சான்றுபடுத்திய பொதுக் கணக்காளர் நிறுவனம் (American Institute of Certified Public Accountants)

நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் என்பவற்றை விசேட முறையில் பணமெனும் சாதனத்தைப் பயன்படுத்தி பதிவு செய்வது, வகைப்படுத்துவது, பொழிப்பாக்குவது, பகுப்பாய்வு செய்வது, தொடர்பாடல் செய்வது அச்செயற்பாட்டினால் எழுந்த பெறுபேறுகளை வியாக்கியானம் கூறுவதுமான கலை கணக்கீடு ஆகும்.

கணக்கீடு பொதுவான வரைவிலக்கணம்

அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு கணக்கீட்டு அலகொன்றுக்குரிய பொருளாதார தகவல்களை வழங்கும் முழுமையான செயன்முறையே கணக்கீடு ஆகும்.

நிதிக்கணக்கீட்டின் நோக்கம்

நிறுவனம் பற்றிய தகவலினை நிறுவனத்தின் வெளிவாரியான அக்கறையுடையோர் மற்றும் முகாமையாளர்கள் தீர்மானம் எடுக்க வழங்குதல்

முகாமைக்கணக்கீட்டின் நோக்கம்

நிறுவனம் பற்றிய தகவலினை நிறுவன முகாமை தீர்மானம் எடுக்க வழங்குதல்

கணக்கீட்டு சூழல்

வணிகமொன்றின் கணக்கீட்டுச் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் கணக்கீட்டுச் சூழலாகும்.

கணக்கீட்டுச் செயன்முறை

கணக்கீட்டுச் செயன்முறைகளின் சுருக்கமான படிமுறைகள்

01. வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளின் பெறுமானத்தை ''பணம்'' எனும் சாதனத்தினால் அளவிடுதல்.
02. மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மூல ஏடுகளில் பதிவு செய்தல்.

03. மூல ஏடுகளில் உள்ளடக்கப்பட்டவற்றை பேரேடுகளுக்கு மாற்றம் செய்தல்.
04. பேரேட்டுக் கணக்குகளை சமப்படுத்தி பரீட்சை மீதியினைத் தயாரித்தல்.
05. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

கணக்கீட்டு உள்ளீடுகள்

- கணக்கீட்டுச் செயன்முறையினால் உள்வாங்கப்படும் தகவல்களே கணக்கீட்டு உள்ளீடுகள் எனப்படும்.
- கணக்கீட்டு உள்ளீடுகள் இரு வகைப்படும்.
  1. கொடுக்கல் வாங்கல்கள்
  2. நிகழ்வுகள்

கணக்கீட்டு வெளியீடு

பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியவாறு கணக்கீட்டுச் செயன்முறையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களே கணக்கீட்டு வெளியீடுகள் எனப்படும்.
உதாரணம் - முற்றும் அடங்கிய வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமையாண்மை மாற்றல் கூற்று

தேர்ச்சி – 02 வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார்.

கணக்கீட்டுச் சமன்பாடு

நிறுவனம் ஒன்றின் வளங்களுக்கும் (சொத்துக்களுக்கும்) அந்த வளங்களின் மீது உரிமை கொண்டுள்ள உரிமையாளர்களுக்கும் இடையிலான தொடர்பினை கணித ரீதியிலான சமன்பாடாக விபரிப்பது கணக்கீட்டுச் சமன்பாடு ஆகும்.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

நிதியறிக்கைகளின் மூலகங்கள் / கணக்கீட்டு மூலகங்கள்

01. சொத்துக்கள்
02. பொறுப்புக்கள்
03. உரிமையாண்மை
04. வருமானம்
05. செலவு

சொத்துக்கள்

கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக தோற்றம் பெற்றிருப்பதும், எதிர்கால பொருளாதார நலனொன்று உட்பாய்ச்சப்படுவதும் வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதுமான வளங்கள் சொத்துக்கள் எனப்படும்.

பின்வரும் மூன்று நிபந்தனைகள் இருந்தால் மாத்திரமே சொத்துக்களை இணங்கண்டு (ஏறுபிசைவு செய்து) புத்தகங்களில் காட்டுவதற்கு முடியும்.

01. எதிர்காலத்தில் நிறுவனத்திற்கு பொருளாதார நலன்களை உட்பாய்ச்சக் கூடியதான நிபந்தனையைக் கொண்டிருத்தல்.
02. சொத்தின் கிரயத்தினை நம்பகரமாக அளவிடக்கூடியதாகவிருத்தல்.
03. நிறுவனத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.

பொறுப்புக்கள்

கடந்தகால கொடுக்கல் வாங்கலின் விளைவாக தோற்றம் பெற்றிருக்குமொன்றை தீர்ப்பனவு செய்யும் பொழுது வளங்கள் வெளிச்செல்லக்கூடிய நிகழ்கால கடப்பாடுகள் பொறுப்பு எனப்படும்.

பொறுப்புக்களை கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கு அது பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

01. தற்போதைய (நிகழ்கால) கடப்பாடாக இருத்தல் வேண்டும்.
02. கடப்பாட்டினை தீர்வு செய்வதற்கான பொருளாதார வெளிப்பாய்ச்சல்கள் ஏற்படுவதற்கான சாத்தியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. இந்த வெளிப்பாய்ச்சலினை நம்பகரமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

உரிமையாண்மை

வணிகத்தின் உரிமையாளரால் வணிகத்திற்கு ஈடுபடுத்தப்படும் வளங்கள் மூலதனம் எனக் கருதப்படுவதுடன் இது வணிகத்தின் உரிமையாண்மை எனப்படும்.

வருமானங்கள்

குறித்த நிதியாண்டில் வணிகத்தில் காசு உட்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதியை அதிகரிக்கக் கூடிய அல்லது பொறுப்புக்களைக் குறைக்கக் கூடிய தன்மையைக் கொண்ட, உரிமையாளரின் பங்களிப்பு இன்றி உரிமை அதிகரிப்புக்கு காரணமாக அமையும் பொருளாதார நன்மைகள் அதிகரித்தல் வருமானங்கள் எனப்படும்.

செலவினம்

வணிகமொன்று செயற்பாட்டுக் கருமங்களை நடாத்திச் செல்லும்போது பல்வேறு வகையான செலவுகளை ஏற்கவேண்டியுள்ளன. அவ்வகையில் நிதியாண்டில் வணிகத்திலிருந்து காசு வெளிப்பாய்தல் அல்லது சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல் அலலது பொறுப்பினை அதிகரிக்கக் கூடிய தன்மையுடைய, உரிமையாளருக்கு மேற்கொள்ளப்படுகின்ற வளங்கள் தவிர்ந்த உரிமை குறைவடைவதற்கு காரணமான பொருளாதார நன்மைகள் குறைவடைதல் செலவினம் எனப்படும்.

உரிமையாண்மையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

01. மேலதிக மூலதனமிடல்
02. வருமானங்கள்

உரிமையாண்மையில் குறைவினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

01. பற்று
02. செலவினங்கள்

இலாபம்/நட்டம் = இறுதி தேறியசொத்து – ஆரம்ப தேறியசொத்து + பற்று – மேலதிகமூலதனம்

Profit/Loss = CNA – ONA + D - AC

பயிற்சி வினாப்பத்திரம் - I

01 பின்வருவனற்றுள் சொத்து என்பதாற் கருதப்படுவதைச் சிறப்பாக விளக்கும் கூற்று எது

I. இரு வருடங்களிற்கு வங்கியில் வைப்புச் செய்த நிலையான வைப்பு
II. பௌதிக இருப்பினை கொண்டுள்ளதும் நிதிக் கூற்றுக்களில் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டதுமான உருப்படி
III. எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகளைக் கொண்டுள்ள பொருளாதார வளம்
IV. எதிர்காலத்தில் பணத்தைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டுள்ள பொருளாதார வளம்
V. எதிர்காலப் பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்கும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பொருளாதார வளம்

02 நிறுவனமொன்றின் சில்லறைக் காசாளர், சில்லறைக்காசு முற்பணத்தை பெறும் தினத்தில் ரூ. 1500ஐ மீதியாக வைத்திருந்தார். இக் காலத்தினுள் உரிமையாளருக்கு சம்பள முற்பணமாக கொடுத்த ரூ. 500 உட்பட மொத்தமாக ரூ. 4 500 க்கு கொடுப்பனவு செய்திருந்தார்.

1. சில்லறைக் காசு முற்பண மீதி என்ன? _
2. இத்தினத்தில் மீள் நிரப்பீடு செய்யப்பட வேண்டிய பணத்தொகை என்ன? _ _ _ _ _ _ _ _ _ _.

03 சொத்தொன்றின் இரு குணாதிசயங்களைக் குறிப்பிடுக

01 _

02 _

04 கணக்கீடு ஆனது சமூக விஞ்ஞானமாகக் கருதப்படுவது ஏனெனில், சூழல் காரணிகளில் எழும் மாற்றங்களுக்கேற்ப அது விருத்தியடைந்து செல்வதனாலாகும். (சரி/பிழை) (_ _ _ _ _)

05 பின்வருவனற்றுள் எது சொத்தொன்றின் இன்றியமையாத பண்பாகும்,

1. வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்டிருத்தல்
2. உருவகத்தன்மை
3. எதிர்கால கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் நிகழ்வுகளிலிருந்தும் எழுதல்
4. எதிர்கால பொருளாதார நன்மைகளின் உள்ளடக்கம்
5. பொருளாதார நன்மைகள் மீதான கட்டுப்பாடு எப்போதும் சட்ட உரிமைத்துவத்திலிருந்து தோன்றுகின்றது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

06 கீழே தரப்பட்டுள்ள வியாபார நிறுவனமொன்று பற்றிய தகவல்களில் எது அவ்வியாபாரத்தின் வியாபார கடன்கொடுத்தோரின் அதிகளவு கவனத்தை ஈர்க்கும்?

1. வருடாந்த பங்குலாபங்கள்
2. வருடத்திற்கான இலாபம்
3. கடனைச் செலுத்தித் தீர்க்க வேண்டிய காலத்தில் அதனைச் செலுத்துவதற்கானஇயலுமை
4. வியாபார நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான இயலுமை
5. மீள் மதிப்பீட்டு மேலதிகம்

07 குறித்த ஒரு கணக்காண்டு காலத்தில் பற்றுகளை மேற்கொள்ளாத நிலையிலும் மேலதிக மூலதனத்தை இடாத நிலையிலும் கீழே தரப்பட்டுள்ள எந்நிலைமைகளில் நிறுவனம் இலாபத்தை நிச்சயமாகக் காட்டும்?

1. குறித்த காலத்தில் மொத்த சொத்துக்கள் அதிகரிக்கும்போது
2. குறித்த காலத்தில் மொத்த பொறுப்புக்கள் அதிகரிக்கும்போது
3. குறித்த கால முடிவில் மொத்த சொத்துக்கள் மொத்த பொறுப்பினைவிட அதிகமாக இருக்கும்போது
4. குறித்த கால முடிவில் தொழிற்படு மூலதனம் குறைவடையும் போது
5. மொத்த சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது மொத்தப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை விடக் கூடுதலாக காணப்படும்போது

08 கம்பனியொன்றின் வருடாந்த பொதுக்கூட்டமொன்றின் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகள் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

1. வருடாந்தம் தயாரிக்கப்படுவதனால் இவைகள் பொது நோக்குடைய நிதிக்கூற்றுகள் என குறிப்பிடப்படுகின்றன
2. உள்ளக பாவனைக்காக தயாரிக்கப்படுவதனால் இவைகள் குறித்த நோக்கமுடைய நிதிக்கூற்றுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.
3. இவைகள் கம்பனியின் குறிப்பிட்ட கணக்கீட்டு வழிகாட்டல்கள், சட்டங்கள், கட்டமைப்புகள் ஆகியவைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.
4. பங்குதாரர்களுக்கு மட்டும் சமர்ப்பிக்கப்படுவதனால் இவைகள் குறித்த நோக்குடைய நிதிக்கூற்றுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.
5. அக்கறையுடையோர்களுக்கான பொதுவான தகவல்களை வழங்குவதனால் இவைகள் பொது நோக்குடைய நிதிக்கூற்றுகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

09 கணக்கீட்டின் பிரதான குறிக்கோள்

01. நிறுவனம் ஒன்றின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் கணக்குப் புத்தகங்களில் பதிதல்
02. நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிதல், வகைப்படுத்தல், சுருக்குதல் ஆகியன
03. நிறுவனம் ஒன்றின் நிதிக்கூற்றுகளில் காணப்படும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்
04. முகாமையாளர்களுக்கு நிறுவனம் ஒன்றின் கொடுக்கல் வாங்கல்களின் விபரமான பகுப்பாய்வினை வழங்குதல்
05. நிறுவனம் பற்றிய தகவல்களை அதனைப் பயன்படுத்துவோரின் தீர்மானம் மேற்கொள்ள வழங்குதல்

10 பின்வருவனற்றுள் எது நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் பங்கினை சிறப்பாக விபரிக்கின்றது?

1. இது நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குப் புத்தகங்களில் பதிகின்றது.
2. இது நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களை நிதித் தகவல்களாக மாற்றுகிறது
3. இது நிறுவனத்தின் வருடாந்த கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கிறது.
4. இது நிறுவனத்தின் முகாமையாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு

செய்வதற்கான தகவல்களை வழங்குகிறது

5. இது நிறுவனத்தின் வெளிவாரி அக்கறையுடையோர் மற்றும் முகாமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குகிறது.

11 பின்வரும் கூற்றுக்களில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டு தொழிற்பாட்டைச் சிறப்பாகவிபரிக்கிறது?

1. இது நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் பண அடிப்படையில் அளக்கிறது.
2. இது நிறுவனத்தின் நிதித் தகவல்களை அதன் முகாமையாளர்களின் பயன்பாட்டிற்காக பகுத்தாராய்கிறது
3. இது நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்குப் புத்தகங்களில் பதிவிடுகிறது.
4. இது நிறுவனத்தின் தகவல்களை அது தொடர்பில் அக்கறையுடையோருக்கு தீர்மானம் எடுப்பதற்காக வழங்குகிறது
5. இது நிறுவனத்தின் வளங்களின் பயன்பாடு தொடர்பான தகவல்களை அதன் முகாமையாளர்களுக்கு வழங்குகிறது.

12 பின்வரும் கூற்றுக்களில் எது நிறுவனமொன்றின் நிதிக் கணக்கீட்டின் ஆரம்பத் தொழிற்பாடு தொடர்பில் சரியானது?

1. இது நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் கொடுக்கல் வாங்கல்களை பண அளவில் பதிகிறது.
2. இது நிறுவனத்தின் முகாமையாளர் பயன்படுத்துவதற்கான விசேட நோக்கங்களைக் கொண்ட நிதியறிக்கைகளைத் தயாரிக்கின்றது.
3. இது நிறுவனத்தின் அக்கறையுடையோர் பயன்படுத்துவதற்கான பொது நோக்கங்கள் கொண்ட நிதியறிக்கைககளைத் தயாரிக்கின்றது.
4. இது நிறுவனத்தின் உரிமையாளர்கள் தீர்மானம் எடுப்பதற்கான கடந்தகால மற்றும் எதிர்கால தகவல்களை வழங்குகின்றது.
5. இது நிறுவனத்தின் வருடாந்த கணக்காய்விற்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்குகிறது

13 இலங்கையில் பின்பற்றப்படும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தின் படி பொறுப்பொன்றினது மூன்று குணாதிசயங்களை குறிப்பிடுக.

01 ____

02 ____

03 ____

14 பின்வரும் கூற்றுக்களில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகச் சிறப்பாக
விபரிக்கின்றது?

1. நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பப் பதிவேடுகளில் பதிதல்
2. நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களை நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு பதிதல்
3. கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதி அறிக்கைகளை தயாரித்தல்
4. முகாமையாளர்களின் பாவனைக்காக நிறுவனம் பற்றிய தகவல்களை வழங்குதல்
5. நிறுவனத்தின் அக்கறையுடையோர்களின் தீரமானம் எடுத்தலுக்காக தகவல்களை வழங்குதல்

15 இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் நிதி அறிக்கையிடலுக்காக எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி பின்வருவனவற்றுள் எது நிதித் தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்களில் ஒன்று அல்ல?

(1) ஒப்பீட்டுத் தன்மை
(2) உண்மையான பிரநிதித்துவம்
(3) மெய்மையாக்கும் தன்மை
(4) காலம் தவறாமை
(5) விளங்கிக்கொள்ளும் தன்மை

16 (1) அரசாங்கம் (2) முதலீட்டாளர்கள் (3) கடனை வழங்குவோர் (4)முாகமையளார்கள்

தகவல் அக்கறையுடையோர் (இலக்கத்தைக் குறிப்பிடுக.)

A) நீண்ட தவணைக் கடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தின் இயலுமை : _ _ _ _ _ _ _
B) முதலீட்ட மூலதனத்துடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் இலாபத்தன்மை : _ _ _ _ _ _ _
C) நிறுவனமொன்றினால் உற்பத்திசெயப்படும் பொருளுக்கான கிரயம் : _ _ _ _ _ _ _
D) நிறுவனமொன்றினால் செலுத்தும் வரியின் அளவு : _ _ _ _ _ _ _

17 பின்வரும் கூற்றுக்களில் எது நிறுவனமொன்றின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தினை மிகச் சிறப்பாக விபரிக்கின்றது

6. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களை கணக்குப் புத்தகங்களில் பதிதல்
7. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்களைப் பதிதல்
8. கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்.
9. முகாமையாளர்களின் பாவனைக்காக நிறுவனத்தின் நிதித் தகவல்களை தொடர்பாடல் செய்தல்
10. நிறுவனத்தின் அக்கறையுடைய தரப்பினரின் தீர்மானம் எடுத்தலுக்காக தகவல்களைத் தொடர்பாடல் செய்தல்.

18 பின்வருவம் கூற்றுக்கள் வியாபாரமொன்றின் முகாமைக் கணக்கீட்டின் வகிபாகம் தொடர்பில் சரியா(T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

A) முகாமையாளர்களின் பயன்பாட்டிற்காக பொதுநோக்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் (_ _ _)
B) கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை தயாரித்தல் (_ _ _)
C) நிறுவனத்தின் கடந்தகால எதிர்கால தகவல்களை வழங்குதல் (_ _ _)
D) நிறுவன முகாமையாளர்களின் வேண்டுதலுக்கமைவாக தகவல்கள் உருவாக்குதல் (_ _ _)

பயிற்சி வினாப்பத்திரம் - II

றோஹினி என்பவர் வணிகமொன்றை நடாத்தி வருகிறார் 2020 ஜனவரி 01 இல் இவரது வணிகத்தில்
காணப்பட்ட மீதிகள் வருமாறு

மோட்டார் வாகனம்	ரூபா 360,000	தளபாடப் பொருத்துக்கள்	ரூபா 240,000
சரக்கிருப்பு	ரூபா 300,000	வியாபார வருமதியாளர்	ரூபா 90,000
காசுமீதி	ரூபா 610,000	வியாபார கொடுக்குமதிகள்	ரூபா 160,000
உரிமையாண்மை	ரூபா 1430,000	முற்செலுத்திய சம்பளம்	ரூபா 30,000
அட்டுறு செலவுகள்	ரூபா 40,000		

2020 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள்.பின்வருமாறு.

இல	திகதி	கொடுக்கல் வாங்கல்கள்
1.	01.01.2020	ரூபா 400,000 பெறுமதியான மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது.
2.	08.01.2020	ரூபா 250,000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
3.	12.01.2020	ரூபா 100,000 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டது.
4.	15.01.2020	ரூபா 120,000 கிரயமான சரக்குகள் ரூபா 180,000 இற்கு விற்பனை செய்யப்பட்டது
5.	15.01.2020	ரூபா 180,000 கிரயமான சரக்குகள் ரூபா 260,000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
6.	20.01.2020	08.01.2020 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 50,000 கிரயமானவை விநியோகஸ்தருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.
7.	23.01.2020	வியாபார கொடுக்குமதிக்குச் செலுத்தவேண்டிய தொகையின் ஒரு பகுதியை தீர்ப்பதற்காக ரூபா 85,000 காசோலை வழங்கப்பட்டதுடன் ரூபா 5,000 கழிவாக பெறப்பட்டது.
8.	25.01.2020	அட்டுறு செலவுகளில் உள்ளடக்கப்பட்ட கடந்த மாத மின்சாரக்ககட்டணம் ரூபா 20,000 உம் இம்மாதக் கட்டணமாக ரூபா 10,500 உம் செலுத்தப்பட்டது.
9.	26.01.2020	வியாபார வருமதியாளரிடமிருந்து ரூபா 15,000 கழிவாக கழித்து ரூபா 150,000 பெறப்பட்டு அது வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.
10.	27.01.2020	சொந்தத் தேவைக்காக உரிமையாளர் காசாக ரூபா 35,000ஐப் பற்றியுள்ளார்.
11.	28.01.2020	வியாபாரத்தின் உதவியாளராக நியமிக்கப்பட்ட ஊழியரின் ஜனவரி மாதத்திற்கான சம்பளம் 2019 டிசம்பர் மாதம் செலுத்தப்பட்டதுடன் வியாபாரத்தின் பராமரிப்புச்செலவு ரூபா 55,000 றோஹினியால் செலுத்தப்பட்டது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

12. 31.01.2020 வியாபாரத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் 12% வருடாந்தம் பெறுமானத் தேய்விடப்படும்.

வேண்டப்படுவது :

1) கணக்கீட்டுச் சமன்பாட்டை பயன்படுத்தி (1) தொடக்கம் (12) வரையிலான மேலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை (பெறுமதிகளுடன்) காட்டுவதுடன் ஒவ்வொரு பெறுமதிகளும் அதிகரிக்கின்றதா (+) குறைவடைகின்றதா (-) என்பதையும், அப் பெறுமதியின் முன்னால் குறிப்பிடுக. (பின்வரும் மாதிரியை பயன்படுத்தவும்.)

இல	சொத்துக்கள்					பொறுப்புக்கள்		உரிமையாண்மை
	ஆதனம் பொறி உபகரணம்	சரக்கிருப்பு	வியாபார வருமதிகள்	முற்செலுத் திய சம்பளம்	காசு	வியாபார கொடுக்குமதிகள்	அட்டுறு செலவுகள்	
மீதி								
1								
2								

2) 31.01.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான ரோஹினி நிறுவனத்தின் வருமானக் கூற்று.

3) 31.01.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான காசு பெறுவனவு நாளேடு கொடுப்பனவு நாளேடு

தேர்ச்சி – 03 இரட்டைப்பதிவு முறைக்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்வார்

கணக்கு

கணக்கீட்டு அலகு ஒன்றில் ஏற்படும் நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியே கணக்கு எனப்படும்.

இரட்டைப் பதிவு முறை

கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவானது வணிகத்தின் மீது இரு முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், அத்தாக்கத்தை ஒரே தடவையில் வரவு, செலவு என கணக்குகளில் பதிவு செய்யும் முறையே இரட்டைப் பதிவு முறை எனப்படும்.

இரட்டைப் பதிவு விதியானது கி.பி. 1494இல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பசியோலி (Luca Pacioli) என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இரட்டைப் பதிவுத் தத்துவம்

அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் இரட்டை விளைவை கணக்குகளில் தாக்கல் செய்ய வேண்டிய முறையானது இரட்டைப் பதிவுத் தத்துவத்தின் மூலம்

குறிப்பிடப்படுவதுடன் அவ்விரட்டை விளைவுகள் வரவு செலவு எனும் வகையில் ஒரே தடவையில் பதிவு செய்வதற்கு பின்பற்றப்படும் சட்டதிட்டங்களின் தொகுதி இரட்டைப் பதிவுத் தத்துவம் எனப்படும்.

பேரேடு

கணக்குகள் அனைத்தும் பேணப்படும் இடம் பேரேடு எனப்படும். அது புத்தகமொன்றாகவோ, கோவையொன்றாகவோ, இலத்திரனியல் ஆவணமொன்றாகவோ, அட்டையொன்றாகவோ இருக்கலாம்.

கணக்கு வகைகள் ஐந்து காணப்படுகின்றன. அவற்றின் அதிகரிப்பு குறைவினை பொழிப்பாக பின்வருமாறு காட்டலாம்.

சொத்துக் கணக்கு, செலவுக் கணக்கு		பொறுப்பு, வருமானம் , உரிமை கணக்கு	
அதிகரிப்பு +	குறைதல் -	குறைதல் -	அதிகரிப்பு +

தேர்ச்சி – 4.0 முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளில் பதிவு செய்வார்

மூல ஆவணங்கள்

- கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குஅடிப்படை ஆவணமாகப் பயன்படும்.
- கொடுக்கல் வாங்கல்களை முழுமையான விபரங்களை அறியக்கூடியதாக இருக்கும்.
- வியாபார நிறுவனத்தில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களுக்குரிய எழுத்து மூல ஆதாரமாக அமையும்.
- மூல ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ள அதிகாரிகளுக்கு பொறுப்புக்களைச் சுமத்தமுடியுமாகவிருக்கும்.
- முதன்மை ஏட்டில் பதிவுகளை மேற்கொள்ளப் பயன்படும் ஆவணங்கள்

முதன்மைப் பதிவேடுகள்

வியாபார நிறுவனத்தில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை மூல ஆவணங்களின் ஆதாரத்துடன் முதன் முதலில் கால ஒழுங்கில் பதிவுகளை மேற்கொள்ள உதவும் ஏடுகள் மூல ஏடுகள் ஆகும்.

- ஒத்த தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள் சுருக்கமாக்கப்பட்டு ஒரே புத்தகத்தில் பேணிச் செல்லப்படுவதன் காரணமாக பேரேட்டுக்கு தாக்கல் செய்வது இலகுவாகின்றது.
- மறதி மற்றும் விடுபடுதல் வழு குறைவடைகின்றது.

- கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்தும் போது ஏற்பட்ட வழுக்களை மிக விரைவாக வெளிப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
- வணிகக் கொடுக்கல் வாங்கல்களை சிறந்த கட்டுப்பாட்டுடன் நடத்திச் செல்ல முடிதல்.
- தனியான ஊழியர் குழுவொன்றினால் மூல ஏடுகள் பேணிச் செல்லப்படுவதனால் கணக்கீட்டுச் செயற்பாடுகள் இலகுவாகின்றது. (கணக்குப் பதிவில் தொழிற்பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி ஏற்படல்)
- வாடிக்கையாளர், வழங்குனர் போன்ற பிரிவினரிடையே நிறுவனம் தொடர்பான நம்பிக்கையை உறுதிப்படுத்தப்படல்.

முதன்மை ஏடுகள்	வரைவிலக்கணம்	இரட்டைப்பதிவுகள்
காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு	வணிகம் ஒன்றில் இடம்பெறும் காசு, காசோலை பெறுவனவுகளை முதன் முதலில் பதிவு செய்யும் ஏடு.	காசுக்கணக்கு வரவு உரிய பெறுவனவுக/குசெலவு
காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு	வணிகம் ஒன்றில் இடம்பெறும் காசு, காசோலை (வங்கிக் கணக்கு மூலமான) கொடுப்பனவுகளை முதன் முதலில் பதிவு செய்யும் ஏடு.	உரியகொடுப்பனவுக/கு வரவு காசுக்கணக்கு செலவு
கொள்வனவு நாளேடு	மீள் விற்பனைக்கான பண்டங்களின் கடன் கொள்வனவை பதியும் மூல ஏடு	கொள்வனவு க/கு வரவு க/கொ கட்டுப்பாட்டுக் க/கு செலவு
விற்பனை நாளேடு	மீள் விற்பனைக்கான பண்டங்களின் கடன் விற்பனையை பதியும் மூல ஏடு	க/ப கட்டுப்பாட்டுக் க/கு வரவு விற்பனை க/கு செலவு
உட்திரும்பல் நாளேடு	கடன்விற்பனைப் பண்டங்களை வாடிக்கையாளர் திருப்பி அனுப்புவதனை பதியும் மூல ஏடு	உட்திரும்பல் க/கு வரவு க/ப கட்டுப்பாட்டுக் க/கு செலவு
வெளித்திரும்பல் நாளேடு	கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் வழங்குனருக்கு திருப்பி அனுப்புவதனை பதியும் மூல ஏடு	க/கொ கட்டுப்பாட்டு க/கு வரவு வெளித்திரும்பல் க/கு செலவு
பொதுக் குறிப்பேடு	ஏனைய முதன்மை ஏடுகளில் பதிய முடியாத கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் மூல ஏடு	**பதியப்படும் விடயங்கள்** 1. பாவனைக்கு சொத்து கடன் கொள்வனவு 2. பாவித்த சொத்து கடன் விற்பனை 3. தொடக்கப்பதிவுகள்

		4. மூடும் பதிவுகள் 5. வழுக்களை திருத்தும் பதிவுகள் 6. மாற்றீட்டு பதிவுகள் 7. சீராக்கல் பதிவுகள்

கொள்வனவு நாட்குறிபேடு

திகதி	பட்டியல்.இல	வழங்குனர்	பெறுமானம்	VAT	மொத்தப் பெறுமானம்
			XXX	XXX	XXX
			XXX	XXX	XXX
			XXX	XXX	XXX
	பொதுப் பேரேட்டுக்கு மாற்றியது		**XXX**	**XXX**	**XXX**

விற்பனை நாட்குறிபேடு

திகதி	பட்டியல்.இல	கொள்வனவாளர்	பெறுமானம்	VAT	மொத்தப் பெறுமானம்
			XXX	XXX	XXX
			XXX	XXX	XXX
			XXX	XXX	XXX
	பொதுப் பேரேட்டுக்கு மாற்றியது		**XXX**	**XXX**	**XXX**

பயிற்சி - **MCQ**

01. குகன் நிறுவனம் ரவி நிறுவனத்திற்கு ரூ 20000 இற்கு கடனுக்குவிற்கப்பட்ட பண்டங்கள் ரூ 5000 பண்டங்கள் பழுதுகாரணதாக ரவியினால் திருப்பப்பட்டதுடன் மிகுதிக்கு காசோலை பெறப்பட்டது. இதனை குகன் நிறுவனத்தில் பிரதிபலிக்கும் மூலஆவணங்களின் சரியான தொடர் ஒழுங்கு யாது?

1. பற்றுச்சீட்டு வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
2. பற்றுச்சீட்டு செலவுத்தாள் காசோலைஅடியிதழ்
3. பட்டியல் செலவுத்தாள் பற்றுச்சீட்டு
4. விற்பனைபட்டியல் வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
5. பட்டியல் வரவுத்தாள் கைச்சாத்து

02. பின்வரும் உருப்படிகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

	உருப்படிகள்	**மூலஆவணம்**	**கூறுகள்/அடிப்படைகள்**
A	அறவிடமுடியாதகடன்	_________________	____________
B	அட்டுறு சம்பளம்	_________________	____________
C	உட்திரும்பல்	_________________	____________
D	சில்லறைக்காசு	_________________	____________

03. **ரூ 60,000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு 20% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் 2/3 பகுதி 10% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?**

1. கொள்வனவுக் கணக்கு ரூ ________________
2. பெற்ற காசுக் கழிவு ரூ ________________
3. கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ரூ ________________
4. செலுத்திய காசு ரூ ________________

பயிற்சி- 01

தர்மன் நிறுவனத்தின் 2020 ஜனவரி 01 மீதிகள்

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு	ரூ 37000
கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு	ரூ 39000
காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு	ரூ 100000
சென்மதி பெறுமதிசேர் வரி (VAT)	ரூ 15000

31.01.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தகவல்கள் வருமாறு

05.01 காசு விற்பனை (VAT உட்பட)	ரூ 33000
12.01 காசுக்கொள்வனவு (VAT உட்பட)	ரூ 22000
15.01 பெற்ற தரகு	ரூ 8000
18.01 கந்தனுக்கு விற்பனை (VAT உட்பட)	ரூ 22000
22.01 சாந்தியிடம் கொள்வனவு (VAT உட்பட)	ரூ 16500

25.01 ஆரம்ப கடன்பட்டோரிடமிருந்து வரவேண்டிய தொகை முழுவதும் ரூ2000 கழிவு நீக்கி பெறப்பட்டது.

28.01 ஆரம்பகடன்கொடுநருக்கு செலுத்தவேண்டிய தொகைமுழுவதும் ரூ4000 கழிவுநீக்கிசெலுத்தப்பட்டது.

29.01 செலுத்தப்பட்ட வாடகை	ரூ 3000
31.01 காசு விற்பனை (VAT உட்பட)	ரூ 11000

கொள்வனவு , விற்பனை மீது 10% பெறுமதிசேர் வரி சேர்க்கப்பட்டுள்ளது

தயாரிக்குக.

1. **காசுப் பெறுவனவு நாளேடு**
2. **காசுக்கொடுப்பனவு நாளேடு**
3. **பொதுப்பேரேட்டில் பின்வரும் கணக்குகள்**
   - **அ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு**
   - **ஆ) கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு**
   - **இ) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு**
   - **ஈ) VAT கட்டுப்பாட்டுக் கணக்கு**

பயிற்சி – 02

சுகந்தன் வணிகத்தின் 2017 ஒக்டோபர் மாத கொடுக்கல் வாங்கல்கள்

திகதி	விபரம்	தொகை (000)
02.10.2017	காசுக் கொள்வனவு	220
04.10.2017	காசு விற்பனைகள்	430

06.10.2017	நசீரிடம் கொள்வனவு	300
08.10.2017	நசீருக்கு வெளித்திருப்பம்	50
10.10.2017	மின்சாரக் கட்டணம்	5
13.10.2017	காசுக் கொள்வனவு	170
16.10.2017	சன்ஜேவுக்கு விற்பனை	610
19.10.2017	ரூ 10000 கழிவினைப் பெற்ற பின்னர்	240
20.10.2017	மேலதிக மூலதனம்	250
22.10.2017	சன்ஜே திருப்பிய பொருட்கள்	60
24.10.2017	ரூ 15000 கழிவு அனுமதித்து சன்ஜேயிடம் பெற்றது	260
25.10.2017	பெற்ற வாடகை	30
26.10.2017	விஜயனிடம் கொள்வனவு	140
27.10.2017	ராமுவிற்கு விற்பனை	260
28.10.2017	ராமுவிடம் பெற்ற காசு	160
30.10.2017	சம்பளக் கொடுப்பனவு	25

வேண்டப்படுவது

1. முதன்மை ஏடுகள்
2. பொதுப்பேரேட்டு கணக்குகள்
3. பரீட்சைமீதி
4. கடன்பட்டோர் பேரேடு பட்டியல் மீதிகளுடன்
5. கடன்கொடுநர் பேரேடு பட்டியல் மீதிகளுடன்

பொது நாட்குறிப்பு (General Journal)

விசேட நாட்குறிப்பேட்டில் பதிய முடியாத கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் மூல ஏடு பொதுக்குறிப்பேடு எனப்படும்.

மூல ஆவணம் - நாட்குறிப்பேட்டு கைச்சாத்து

கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சுருக்கமான விளக்கம் விளம்பல் எனப்படும்.

பொது நாட்குறிப்பில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

1. தொடக்கப்பதிவுகள்
2. பாவனைக்கு சொத்து(ஆதனம் பொறி உபகரணம்) கடன் கொள்வனவு
3. பாவித்த சொத்து (ஆதனம் பொறி உபகரணம்) கடன் விற்பனை/அகற்றல் /கைமாற்றல்
4. மூடும் பதிவுகள்
5. வழுக்களை சீராக்கும் பதிவுகள்
6. மாற்றல் பதிவுகள்
7. பேரேட்டுக்கு மாற்றும் பதிவுகள்
8. சீராக்கல் பதிவுகள்
9. ஏனைய பதிவுகள்

பொது நாட்குறிப்பு

திகதி	கைச்.இல	விபரம்	வரவு	செலவு

பயிற்சி -

01. கவி நிறுவன 2020 மே மாத தகவல்கள்

வாகனம் 200000	தளபாடம் 100000	சரக்கிருப்பு 15000
வங்கி 14000	காசு 23000	வங்கிக் கடன் 45000
கடன்பட்டவர்	ரவி 12000	
	கவி 14000	
கடன்கொடுநர்	ராமு 23000	
	சோமு 12000	

மே மாத நடவடிக்கைகள்

06 விற்பனை (10% Vat வரி அடங்கியுள்ளது)			22000
08 ரவிக்கு விற்பனை (10% Vat வரி அடங்கியுள்ளது)		33000	
10 கொள்வனவு (10% Vat வரி அடங்கியுள்ளது)			11000
12 மின் கட்டணம்			3000
18 கடன் கொள்வனவுகள்		ராமு 22000	சோமு 16500
(10% Vat வரி எல்லா கொள்வனவுகளிலும் அடங்கியுள்ளது)			
20 கவிக்கு விற்பனை (10% Vat வரி அடங்கியுள்ளது)			16500
21 ராமுவிற்கு வெளித்திருப்பம் (10% Vat வரி அடங்கியுள்ளது)			3300
22 கவியின் உட்திருப்பம் 2200 (10% Vat வரி அடங்கியுள்ளது)			
25 தொலைபேசி கட்டணம் (காசோலையாக)			3200
26 விற்பனை செலவுகள்			2100
27 வீரா கம்பனியில் தளபாடம் வாங்கியது			40000
28 கவியிடம் பெற்றது	காசு,காசோலை 8000	கழிவு 500	
29 சோமுவிற்கு கொடுப்பனவு காசு	7000	கழிவு 1000	
30 Vat வரிக்கு செலுத்திய காசு		1500	

தயாரிக்க

1. **காசு பெறுவனவு நாட்குறிப்பு**
2. **காசு கொடுப்பனவு நாட்குறிப்பு**
3. **கொள்வனவு நாட்குறிப்பு**
4. **விற்பனை நாட்குறிப்பு**
5. **உட்திரும்பல் நாட்குறிப்பு**
6. **வெளித்திரும்பல் நாட்குறிப்பு**
7. **பொது நாட்குறிப்பு**
8. **பொதுப் பேரேடு**
9. **கடன் பட்டவர் பேரேடு**
10. **கடன் கொடுத்தவர் பேரேடு**
11. **பரீட்சை மீதி**

சில்லறை காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு (Petty Cash Journal)

வணிகமொன்றில் நாளாந்தம் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களில் சிறிய பெறுமதிகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு அவற்றை தனியான மூல ஏடு ஒன்றில் பதிவு செய்ய வேண்டும் அம்மூல ஏடு சில்லறை காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு எனப்படும்.

பராமரிப்பவர் சில்லறைக் காசாளர் எனப்படுவார்

மூல ஆவணம் - சில்லறைக் காசு கைச்சாத்து

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

சில்லறைக் காசு வசக்கட்டு

சில்லறைக் காசு கொடுப்பனவு தொடர்பாக பிரதம காசாளரினால் சில்லறை காசாளருக்கு வழங்கப்படும் தொகை சில்லறைக் காசு வசக்கட்டு / காசுக் கட்டுநிதி எனப்படும்.

கட்டுநிதி மீளநிரப்பல்

கட்டுநிதி தொகை முடிவடைவதற்கு அண்மிக்கும் பொழுது செலவிடப்பட்ட தொகை பிரதம காசாளரினால் சில்லறைக் காசாளருக்கு வழங்கப்படும் இதனை கட்டு நிதி மீள நிரப்பல் என அழைக்கலாம்.

சில்லறை காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு

திகதி	விபரம்	கைச்சாத்து இல	பெறுமானம்	பகுப்பாய்வு நிரல்					பேரேட்டுப் பக்கம்
				எழுதுகருவி	அஞ்சல்	பயணம்	நானவித செலவு	ஏனையவை	

பயிற்சி - 01

அமலா நிறுவன சில்லறைக் காசு தொடர்பான தகவல்கள்

1. 2017.10.01 சில்லறைக் காசு மீதி 850
2. சில்லறைக் காசாளருக்கு மீள்நிரப்பிய தொகை ரூ _ _ _ _ _ ஆகும். (நிறுவனம் சில்லறைக் காசு கட்டுநிதியாக ரூ 3000இனை பராமரித்து வருகின்றது)
3. ஒக்டோபர் மாத சிறு செலவுகள்

திகதி	விபரம்	தொகை
02.10.2017	காகிதம் பேனா	200
04.10.2017	பிரயாணம்	250
07.10.2017	பதிவுத் தபால்	150
10.10.2017	உபசரிப்பு	120
13.10.2017	சிறிவர்தனவிற்கு கொடுத்தது	350
16.10.2017	விநியோகச் செலவுகள்	230
19.10.2017	எழுதுகருவிகள்	110
21.10.2017	முத்திரை, கடிதவுரை	140
25.10.2017	உபசரிப்பு	160
30.10.2017	உரிமையாளர் பற்று	400
31.10.2017	கட்டுநிதி மீள் நிரப்பியது	?

வேண்டப்படுவது 2017.10.31 இற்கு

1. சில்லறை காசு கொடுப்பனவு நாட்குறிப்பு (எழுதுகருவி, பிரயாணம், அஞ்சல், ஏனையவை)
2. சில்லறை காசுக் கணக்கு
3. ஏனைய அவசியமான பேரேடுகள்

4.4 வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று

சீராக்கிய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
மீதி	X X X	நிலையான கட்ட. கொடு/வு	X X X
நேரடி வைப்பு	X X X	வங்கிக் கட்டணம்	X X X
வழங்கி மறுத்த காசோலை	X X X	காசோலை புத்தகக் கட்டணம்	X X X
குறைத்து பதிந்த வைப்புகள்	X X X	வைப்பிலிட்டு மறுத்த கா/லை	X X X
		பதியப்படாத வழங்கிய கா/லை	X X X
		மீ.கீ.கொ.சென்றது	X X X
	X X X		X X X
மீ.கீ.கொ.வந்தது	X X X		

வங்கி இணக்கக் கூற்று

விபரம்	தொகை	தொகை
சீராக்கிய காசுக் கட்டுப். க/கு மீதி		X X X
(+) சமர்ப்பிக்கப்படாத காசோலை	X X X	
வங்கித் தவறு	X X X	X X X
(-) வசூலிக்கப்படாத காசோலை	X X X	
வங்கித் தவறு	X X X	(X X X)
வங்கிக் கூற்றின் படி மீதி		**X X X**

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01. நிறுவனமொன்றின் 31.03.2015இலுள்ளவாறான வங்கிக் கணக்கு மீதியானது அதன் வங்கிக் கூற்றில் காணப்பட்ட மீதியை விட அதிகமாகக் காணப்பட்டது. (நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் அல்லது அதன் வங்கிக் கூற்றில் எதுவித வழுக்களும் இல்லை எனக் கருதுக) இவ்வேறுபாட்டுக்கான இரண்டு சாத்தியமான காரணங்களைக் குறிப்பிடுக.

    1. _________________ _________________________

    2. _________________ _________________________

02. நிறுவனமொன்றின் வங்கிக் கணக்கு மீதியானது 31.03.2014இல் ரூ 680,000 ஆகும். எனினும் இம் மீதி இத்தினத்திலுள்ள வங்கிக் கூற்றுடன் உடன்படவில்லை இவ் வேறுபாட்டிற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
    1. நிலையான கட்டளை கொடுப்பனவு ரூ 10,000 புத்தகங்களில் பதியப்படவில்லை
    2. வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ 40,000 காசோலை வசூலிக்கப்படவில்லை

    (அ) 31.03.2014இல் வங்கிக் கூற்று மீதி யாது? _____ _________

    (ஆ) 31.03.2014இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும் வங்கிமீதியாது? ____ ___

03. கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2010.03.31 நிறுவனத்தின் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட வேண்டிய வங்கி மீதி யாது?

2010.03.31 இல் வங்கிக் கூற்று மீதியின் படி வங்கி மேலதிகப்பற்று ரூ (10,000)
2010.03.31 இல் வைப்பிலிட்டு வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 45,000
2010.03.31 இல் வழங்கப்பட்டு கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாதவைகள் ரூ 30,000
கடன்பட்டவரின் நேரடி வைப்புக்கள் ரூ 15,000

1) ரூ 5000 2) ரூ (20,000) 3) ரூ 25,000 4) ரூ (25,000) 5) ரூ (40,000)

04. 2008.12.31 இல் நிறுவனமொன்றின் வங்கிக் கணக்கு மீதி கீழே தரப்பட்டுள்ள மூன்று காரணங்களால் அதன் வங்கிக் கூற்று மீதியுடன் உடன்படவில்லை.

(அ) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்
(ஆ) வசூலிக்கப்படாத காசோலைகள்
(இ) மறுக்கப்பட்ட காசோலைகள்

2008 டிசம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்கக் கூற்றில் மேலே குறிப்பிடப்பட்டவற்றில் எந்த விடயம்/ விடயங்கள் இடம்பெற முடியும்.

1. அ மாத்திரம்
2. அ, ஆ மாத்திரம்
3. அ, இ மாத்திரம்
4. ஆ.இ மாத்திரம்
5. அ, ஆ. இ ஆகிய எல்லாம்.

05. வங்கிக் கூற்று மீதியின் படி காசுக் கணக்கு மீதி வேறுபடும்போது சீராக்கிய காசக் கணக்கில் செய்ய வேண்டிய விடயமல்லாத இரு விடயங்கள் தருக.

1. _________________ __________________________
2. _________________ ______________________

6ம் 7ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
ரஞ்சித் வியாபார நிலையத்தின் காசுக்கணக்கு 2006.03.31இல் வரவு மீதியாக ரூ 9,600 ஐக் காட்டியது. இத்திகதியில் வங்கிக் கூற்றில் காணப்பட்ட மீதி வங்கிக் கணக்கு மீதியுடன் உடன்படவில்லை. வேறுபாடுகள் பின்வருமாறு (2006)

1. வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 7,000
2. சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 4,000
3. வங்கிக் கட்டணம் ரூ 100
4. நேரடி வைப்பு ரூ 2,000

06. 2006.03.31இல் காசுக் கணக்கின் சரியான மீதி
1. 8500 2) 10700 3) 11500 4) 7700 5) 5500

07. 2006.03.31இல் வங்கிக் கூற்றில் காணப்படும் மீதி
1) 14500 2) 10700 3) 11500 4) 8500 5) 4700

08. 31.03.2013 தரவுகள்

01.03.2013இற்கான வங்கிக் கூற்றின் படியான வங்கி மீதி ரூ 24,500
சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 7,600
வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 8,500
நேரடிவைப்பு ரூ 3000 காசேட்டில் இரு தடவைகள் பதியப்பட்டது.
காசேட்டில் இடம்பெறாத வங்கி அறவீடு ரூ 3,000
நிலையான கட்டளை ரூ 2,000

01.03.2013இல் காசுக் கணக்கின் ஆரம்ப மீதி யாது?
1) 33400 2) 36400 3) 31600 4) 25400 5) 32100

09. தனு வியாபாரத்தின் 2013 டிசம்பர் மாதத்திற்கான தகவல்கள்
டிசம்பர் 31 இல் வங்கிக் கூற்றின் படி மேலதிகப் பற்று ரூ 15,000
வைப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 9000
சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 10000
வங்கிக் கணக்கில் பதியாத நிலையான கட்டளை கொடுப்பனவு ரூ 6000
வங்கிக் கணக்கில் பதியாத வைப்பு செய்து மறுக்கப்பட்டவை ரூ 8000
சீராக்கிய காசுக் கணக்கின் மேலதிகப்பற்று மீதி
1) 18000 2) 2000 3) 16000 4) 1000 5) 14000

10. வங்கிக் கூற்றின் படி வங்கி மீதி ரூ 11200 , மாற்றப்படாத காசோலைகள் ரூ 3500 , மறுக்கப்பட்ட காசோலைகள் ரூ 2500 , வங்கி வசூலித்த பங்குலாபம் ரூ 4500,
திருத்திய காசுக் கணக்கு மீதி யாது? ________________

11. லசித் என்பவரின் வியாபாரத்தில் 2015.01.31இல் வங்கிக்கூற்றுக்கு ஏற்ப ரூ30,000 சாதக மீதியாகக் காட்டியது காசுக்கணக்கு வேறுபட்டமைக்கு காரணங்கள்
தீர்வையாகாத காசோலைகள் ரூ 12000, சமர்ப்பிக்கப்படாதவைகள் ரூ 600
வங்கி தவறுதலாக செலவு வைத்த வேறு வாடிக்கையாளரின் வைப்பு ரூ 2000
வங்கிக் கட்டணங்கள் ரூ 1000 எனின்
1. மீளாய்வுக்கு முன் காசுக் கணக்கின் மீதி __________
2. நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படும் வங்கிக் கணக்கு மீதி __________

12. தோமியன் நிறுவனத்தின் 2012 நவம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வங்கிக் கூற்று ரூ 20,000 மீதியைக் காட்டியது. டிசம்பர் மாத வங்கிக் கூற்றில் வரவு வைக்கப்பட்ட மொத்தம் ரூ 60,000, செலவு வைக்கப்பட்ட மொத்தம் ரூ 70,000 ஆகும். 31.12.2012இல் நிதிநிலைமைக் கூற்றில் காசுமீதி ரூ 25,000 ஆக காணப்பட்டது. டிசம்பரில் மாற்றப்படாத காசேலைகள் ரூ 15000 எனின் வசூலிக்கப்படாதவைகள் பெறுமதி யாது?
1. ரூ30,000 2. ரூ25,000 3. ரூ20,000 4. ரூ15,000 5. ரூ10,000

13. 2020 மார்ச் மாத வங்கிக்கூற்றுவங்கி மீதி ரூ 45000 செலவு மீதியை காட்டியதுன், காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 47000 வேறுபட்டது காரணங்கள்
கைத்தேறாத வைப்புக்கள் ரூ 9000, நேரடிவைப்பு ரூ 5000,
நிலையியற்கட்டளை காப்புறுதி ரூ 4000 காசோலைப்புத்தக கட்டனம் ரூ 2000
வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலை ரூ 3000
வினாக்களுக்கு விடை தருக
அ) மார்ச் மாத மாற்றப்படாத காசோலை யாது?
____
ஆ) திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?
____

14. லால் நிறுவனத்தின் 2014.02.28இல் காணப்பட்ட காசுக் கணக்கின் மீதி ரூ 80,000 ஆக இருந்தது. வங்கிக் கூற்றின் படி வேறு தொகையைக் காட்டியது காரணங்கள்
சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 15,000 வசூலிக்கப்படாத காசேலைகள் ரூ 9,000 ஆகும்.
மார்ச் மாத கொடுக்கல் வாங்கல்கள்
பிறப்பிக்கப்பட்ட காசோலை ரூ 100,000, காசோலை வைப்பு ரூ 120,000, வங்கி அறவீடு ரூ 10,000 2014.03.31இல் காசேட்டு வங்கிமீதியும் வங்கிக்கூற்று மீதியும் சமப்பட்டிருக்கவில்லை. இதற்கு காரணம் கடந்தமாத வசூலிக்கப்படாத காசேலையும், நிகழ்காலத்திலான சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 20,000மும் ஆகும்.

1. 2014.03.31இல் நிதி நிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தவேண்டிய வங்கி மீதி யாது?
   1. 90,000 2. 86,000 3. 101,000 4. 130,000 5. 110,000

2. 2014.03.31இல் காணப்பட்ட வங்கிக் கூற்று மீதி யாது?
   1. 90,000 2. 86,000 3. 130,000 4. 110,000 5. 101,000

பயிற்சி – வினாப்பத்திரம் - II

(01) வரையறுத்த மாதங்கி கம்பனியின் 2012 டிசம்பர் மாத வங்கிக் கூற்று

i.

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
Dec 01	மீதி			150000
Dec 02	காசோலைகள்		80000	230000
Dec 05	காசு		200000	430000
Dec 18	காசோலைகள் 534551	60000		370000
	534553	190000		180000
Dec 24	பங்குலாபம்		20000	200000
Dec 25	காசோலை		40000	240000
Dec 26	நிலையான கட்டளை	40000		200000
Dce 27	காசோலை		30000	230000
Dec 31	திரும்பிவந்த காசோலை	30000		200000

ii. 2012 நவம்பர் மாதத்தில் வழங்கிய காசோலைகள் இல 534551, 534552 ஆகிய இலக்கங்களைக் கொண்ட முறையே ரூ 60,000, ரூ 80,000 ஆன காசோலைகள் நவம்பர் இறுதிவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

iii. பங்குலாபத்தையும் நிலையான கட்டளையையும், மறுக்கப்பட்டகாசோலைகளையும் பதிய முன் 31.12.2012இல் வங்கிக் கணக்கு மீதி ரூ 120,000 ஆகும்.

iv. டிசம்பர் மாதம் வழங்கப்பட்ட காசோலைகளுள் இல 534555 ரூ 70,000 டிசம்பர் 31 வரை சமர்ப்பிக்கப்படவில்லை.

v. ரூ 20,000 காசோலை டிசம்பர் வைப்பு செய்யப்பட்டபோதிலும் இது வரை வசூலிக்கப்படவில்லை.

வேண்டப்படுவது.

1. 2012.12.31இல் திருத்திய வங்கிக் கணக்கு
2. டிசம்பர் மாத வங்கி இணக்கக்கூற்று

(02) மாலா எனும் வியாபாரியின் 2013.10.31இல் வங்கிக் கணக்கு

திகதி	விபரம்	தொகை "000"	திகதி	விபரம்	தொகை "000"
2013.10.01	மீதி	70	2013.10.04	கொள்வனவு 4433	15
2013.10.07	காசு வைப்பு	30	2013.10.10	மின்கட்டணம் 4434	5
2013.10.15	காசோலை வைப்பு 8889	25	2013.10.18	தொலைபேசி 4435	8
2013.10.22	காசோலை வைப்பு 9890	35	2013.10.24	மாதவன் 4436	26
2013.10.28	மாஹிர் 2845	24	2013.10.30	சம்பளம் 4437	20
			2013.10.31	மீதி.சென்றது	110
		184			**184**
2013.10.31	மீதி வந்தது	110			

2013.10.31இல் வங்கி இணக்கக்கூற்று

விபரம்	தொகை "000"	தொகை "000"
வங்கிக்கணக்கு மீதி		110
மாற்றப்படாத காசோலை 4436	26	
4437	20	
நேரடி வைப்பு	14	60
		170
வசூலிக்கப்படாதவைகள் 9890	35	
2845	24	
காசோலை புத்தகம்	1	
நிலையான கட்டளை	6	
வங்கிக் கட்டணம்	3	(69)
வங்கிக்கூற்று மீதி		**101**

வேண்டப்படுவது.

1. 2013.10.01தொடக்கம்2013.10.31 வரையான காலப்பகுதிக்கான வங்கிக் கூற்று
2. 2013.10.31இற்கான சீராக்கிய வங்கிக் கணக்கு

03. நந்தன் என்பவரினால் நடாத்திச் செல்லப்படுகின்ற தனியுரிமை வணிகத்தின் சில்லறைச் செலவுகள் தவிர்ந்த ஏனைய சகல கொடுப்பனவுகளும் வங்கி கணக்கின் மூலம் (காசோலை மூலம்) மேற்கொள்ளப்படுவதுடன் சகல காசுப் பெறுவனவுகளும் நேரடியாக வங்கிக் கணக்குக்கு அல்லது காசோலை மூலம் பெறப்பட்டுள்ளது.
வங்கிக் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான ஏனைய தகவல்கள் வருமாறு 2018 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்:-

பெறுவனவுகள்	**ரூபா.000**	**கொடுப்பனவுகள்**	**ரூபா.000**
காசு விற்பனைகள்	750	காசுக் கொள்வனவுகள்	220
காரியாலய உபகரணவிற்பனை	300	கடன்கொடுநர். சுகு	190
கடன்பட்டோர் - சுதன்	330	செலவுகளுக்கான கொடுப்பனவு	130
காசு விற்பனை	180	கடன்கொடுத்தோர் - சரத்	260
கடன்பட்டோர் - மதன்	235	காசுக் கொள்வனவுகள்	200

2018 மார்ச் மாதத்திற்கு கிடைத்த வங்கிக் கூற்றின் பொழிப்பு		(ரூபா.000)
தேறிய காசோலைகள், காசு வைப்பு	-	1200
வழங்கிய காசோலைக்கான கொடுப்பனவுகள்	-	950
கடன்பட்டோர் நேரடி வைப்பு	-	130
வங்கி அறவிட்ட கட்டணம்	-	40
நிலையிற் கட்டளையின் கீழ் செலுத்திய காப்புறுதி தவணைக் கட்டணம்	-	30
வைப்புச் செய்யப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள்	-	200

2018.03.01 இல் வணிகத்தின் வங்கி கணக்கின் மீதி ரூ 38 000 ஆக இருந்ததுடன் அது அத்திகதியில் உள்ள வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கியது.
சுதன் என்ற கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவு ரூபா 3000 ஆக இருந்ததுடன் சுகு என்ற கடன் கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவு ரூபா 4000 ஆகக் காணப்பட்டது.
வேண்டப்படுவது.

01. மேலே உள்ள தரவுகளின் உதவியுடன் 2018 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கினூடாக
பெறுவனவு, கொடுப்பனவு, நாட்குறிப்பேடுகளை வெவ்வேறாகக் காட்டுக.
02. 2018.03.31 இல் நிறுவனத்தின் சீராக்கிய காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கு மற்றும் வங்கிக்கணக்கிணக்கக்கூற்று.

4.8 கட்டுப்பாட்டுக் கணக்குகள்

- பொதுப் பேரேட்டில் இரட்டைப் பதிவு முறைக்கு ஏற்ப கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் அறிக்கைப்படுத்தப்படும். இதனால் பொதுப் பேரேட்டில் பரீட்சை மீதி தயாரிக்கப்படும்
- துணைப் பேரேட்டில் (கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பேரேடுகள்) ஒற்றைப் பதிவு முறைக்கு அமைய கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளைப் பதிவு செய்தல் வேண்டும். இதனால் இங்கு பட்டியல் ஒன்றைத் தயாரிக்க முடியும்.

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
மீதி.கீ.கொ.வந்தது	XXX	மீதி.கீ.கொ.வந்தது	XXX
கடன் விற்பனை	XXX	உட்திரும்பல்	XXX
இரத்து செய்த கொடு.கழிவு	XXX	கொடுத்த கழிவு	XXX
அறவிட்ட வட்டி	XXX	காசு	XXX
மறுக்கப்பட்ட காசோலை	XXX	அ.மு.கடன்	XXX
மீளப் பெற்ற அ.மு.கடன்	XXX	எதிரீடு	XXX
மீ.கீ.கொ.சென்றது	XXX	மீ.கீ.கொ.சென்றது	XXX
	XXX		**XXX**
மீ.கீ.கொ.வந்தது	XXX	மீ.கீ.கொ.வந்தது	XXX

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
மீதி.கீ.கொ.வந்தது	XXX	மீதி.கீ.கொ.வந்தது	XXX
காசு, காசோலை	XXX	கொள்வனவு	XXX
பெற்ற கழிவு	XXX	மறுக்கப்பட்ட காசோலை	XXX
வெளித்திருப்பம்	XXX	இரத்துச் செய்யப்பட்ட பெ.கழிவு	XXX
எதிரீடு	XXX		XXX
மீ.கீ.கொ.சென்றது	XXX	மீ.கீ.கொ.சென்றது	XXX
	XXX		**XXX**
மீ.கீ.கொ.வந்தது	XXX	மீ.கீ.கொ.வந்தது	XXX

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01. வரையறுத்த மதி கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்கொடுநர் கட்டுப்பாட்டுகணக்கு மீதி ரூ 56000

A – கொள்வனவு நாளேடு ரூ 2500 ஆல் கூட்டின் கூட்டப்பட்டது.

B – விதித்த வட்டி ரூ 1800 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 180 என பதியப்பட்டது.

C – கொள்வனவுத் திரும்பல் ரூ 10000 கொள்வனவுத்திரும்பல் நாளேட்டில் ரூ 1000 என பதியப்பட்டது

D – மறுக்கப்பட்ட காசோலைரூ 3000 கடன்கொடுநர் பேரேட்டில் பிழையான பக்கத்தில் பதிவிடப்பட்டது

அ) திருத்தப்பட்ட கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி

_ _

ஆ) திருத்தமுன் கடன்கொடுநர் பேரேட்டுப்பட்டியல் மீதி

_ _

பயிற்சி – வினாப்பத்திரம் - II

பயிற்சி - 01

அஸ்வின் கம்பனியின் 2020 மார்ச் மாதம் முடிவடைந்த காலாண்டுக்கான கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரம் வருமாறு

1. காசுப் பெறுவனவு நாளேட்டின் சுருக்கம் வருமாறு.

காசு விற்பனைகள்	2,800,000
கடன்பட்டோரிடம் பெற்றது	865,000
ஏனைய வருமானங்கள்	210,000
ஏனைய பெறுவனவுகள்	175,000
	4,050,000

2. மேலதிகத் தகவல்கள் வருமாறு

- ✓ மொத்த விற்பனைகளில் 70% காசு விற்பனைகளாகும்.
- ✓ இக்காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 120,000 கிரயமான பொருட்கள் வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்பட்டன.
- ✓ காலாண்டினுள் ரூபா 25,000 அறவிடமுடியாத கடனாக பதிவழிக்கப்பட்டது.
- ✓ நிறுவனத்தின கொள்கை கிரயத்துடன் 20% இலாபம் சேர்த்து பொருட்களை விற்பனை செய்வதாகும்.
- ✓ 01.01.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 225,000 ஆக காணப்பட்டது.
- ✓ வியாபார வருமதிகளில் 10% இனை ஐயக்கடனாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

வேண்டப்படுவது – 2020 மார்ச் மாத கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

பயிற்சி - 02

31.03.2020 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மொத்த மீதி ரூபா 260,800 ஆகக் காணப்பட்டது இம் மீதி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வாளரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- ✓ கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 25,000 பெறுமதியான வரவு மீதியொன்று செலவு மீதியாக பட்டியலிடப்பட்டிருந்தது.
- ✓ கடன்கொடுத்தோர் பேரேட்டிலிருந்து ரூபா 72,500 ஐ கடன்பட்டோர் பேரேட்டிற்கு மாற்றியது தொடர்பாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை.
- ✓ 31.03.2020 இல் கடன்பட்டோர் ஒருவரின் ரூபா 7,200 மீதியானது அறவிடமுடியா நட்டக் கடனாக பதிவழிக்கப்பட்டது ஆனால் இது தொடர்பாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை.
- ✓ விற்பனைத் திரும்பல் நாளேட்டின் மீதியானது ரூபா 22,500இனால் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
- ✓ கடன்பட்டோர் மீதிகள் பட்டோலையிலிருந்து வரவு மீதியொன்றான ரூபா 11,500 உம் செலவு மீதியொன்றான ரூபா 8,500 உம் தவறிவிடப்பட்டிருந்தது.
- ✓ கடன்பட்டோர் ஒருவரின் நேரடி வைப்பான ரூபா 9,800 தொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது

1. 31.03.2020 இல் முடிவடைந்த காலாண்டிற்கான திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு?
2. திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு?
3. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் பட்டியல் மீதியினை இணக்கம் செய்யும் கூற்று?

பயிற்சி – 02

1. 2020 மார்ச் மாதத்தினுள் கடன் கொடுத்தோர் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு

கடன்கொடுத்தோர்	2020.03.01 மீதி	கொள்வனவு	வெளித் திரும்பல்	கொடுப்பனவுகள்	பெற்ற கழிவுகள்
அஜித்	25 000	160 000	-	130 000	6000
விஜே	44 000	300 000	4 000	300 000	-
லைலா	12 000	120 000	-	120 000	2 000
எட்வட்	--	50 000	-	16 000	-
மொத்தம்	**81 000**	**630 000**	**4 000**	**566 000**	**8 000**

- ➢ 2020 மார்ச் 01 ஆம் திகதியன்று கடன் கொடுத்தோர் பேரேட்டு மீதியின் கூட்டுத்தொகையானது கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியிருந்தது.
- ➢ 20204 மார்ச் 31 ஆம் திகதியன்று கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணங்கவில்லை.
- ➢ இவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அஜித்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 3 000 கழிவானது கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர்ந்த வேறு எவ்விதப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.
2. விஜேக்கு அனுப்பப்பட்ட ரூபா. 4 000 பெறுமதியான வரவுத்தாள் அவரது கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
3. ரூபா. 20 000 பெறுமதியான உடன் காசு விற்பனை கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.
4. 2020 மார்ச் 28 ஆம் திகதியில் மூர்த்தியிடமிருந்து கடனுக்குப் பெற்ற பொருட்களுக்குரிய ரூபா. 12000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியலானது கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

5. கொள்வனவு நாளேட்டின் மொததம் ரூபா. 603000 ஆக கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(I) மேற்குறிப்பிட்ட தகவல்களைச் சீராக்க முன்னர் 2020 மார்ச் மாதத்திற்கான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(II) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதியுடன் கடன் கொடுத்தோர் பேரேட்டு மீதியின் கூட்டுத்தொகையினை இணங்கற் செய்வதற்கான கூற்று

(III) 2020.03.31 ஆம் திகதியன்று நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படவேண்டிய கடன்கொடுத்தோர் மீதி

4.10 வழுக்களைத் திருத்துதல்

கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும்போது இடம்பெறும் வழுக்களை பிரதானமாக இரு வகைப்படுத்தலாம்.

1. பரீட்சை மீதி வெளிக்காட்டாத வழு
2. பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழு

பரீட்சை மீதி வெளிக்காட்டாத வழுக்கள்

1. ஏதாவது கொடுக்கல் வாங்கலுக்குரிய பதிவுகளை மூல ஏட்டில் பதியாது விடுதல்.
2. கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு மாறாக கொடுக்கல் வாங்கலின் பதிவுகள் இடம்பெறல்
3. கொடுக்கல் வாங்கல்கல் ஒன்றின் பெறுமதியை கூட்டியோ அல்லது குறைத்தோ கணக்குகளில் பதிவு செய்தல்.
4. ஈடு செய்யும் வழுக்கள்
5. இரட்டிப்பு வழுக்கள்

மேற்கூறிய வழுக்கள் பரீட்சை மீதியின் இணக்கத்தினை பாதிக்காத காரணத்தினால் தொங்கல் கணக்கு பரீட்சை மீதியில் உருவாகாது. மாறாக பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழுக்கள் காரணமாக பரீட்சை மீதி இணங்காமையினால் அதனை தற்காலிகமாக இணங்க வைப்பதற்கு தொங்கல் கணக்கு உருவாக்கப்படுகின்றது. அவைகளாவன.

பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழுக்கள்

01. கொடுக்கல் வாங்கல் ஒன்றின் பெறுமதி இரு கணக்குகளிலும் இரு வேறுபட்ட பெறுமதிகள் பதிவு செய்யப்படுதல்.
02. கொடுக்கல் வாங்கல் ஒன்றின் ஒரு பதிவு விடுபடுதல்.
03. மூல ஏடுகள், பேரேடுகளை சமப்படுத்தும்போது அல்லது கூட்டும் போது ஏற்படும் வழுக்கள்
04. கொடுக்கல் வாங்கல் ஒன்றின் இரட்டைப்பதிவும் இரு கணக்குகளில் ஒரே பக்கத்தில் பதிவு செய்யப்படுதல்.
05. பரீட்சை மீதியினைத் தயாரிக்கும் போது ஏற்படுகின்ற வழுக்கள்

- கணக்கேடுகளில் ஏற்பட்ட வழுக்களுடன் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அவைகளும் வழுக்களுடையதாக மாறுகின்றன.

- வருமானம், செலவினக் கணக்குகளில் ஏற்படுகின்ற வழுக்கள் இலாபத்தினைப் பாதிப்பதனால் அக்கணக்குகளில் ஏற்பட்ட வழுக்களை திருத்துவதன் ஊடாக இலாப சீராக்கல் கூற்றினைத் தயாரித்து இலாபத்தினைத் திருத்துதல் வேண்டும்.

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01. கொள்வனவுத்திரும்பல் ரூ 480 பிழையாக விற்பனைத் திரும்பல் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்நதது. ஆனால் தனிநபர் கணக்கில் சரியாக பதியப்பட்டிருந்தது. இவ்வழு பரீட்சை மீதியை எவ்வாறு பாதிக்கும்.
    - **I.** செலவுப் பக்கம் வரவுப் பக்கத்தை விட ரூ 480 கூடுதலாகக் காணப்படும்.
    - **II.** வரவுப் பக்கம் செலவுப் பக்கத்தை விட ரூ 480 கூடுதலாகக் காணப்படும்.
    - **III.** செலவுப் பக்கம் வரவுப் பக்கத்தை விட ரூ 960 கூடுதலாகக் காணப்படும்.
    - **IV.** வரவுப் பக்கம் செலவுப் பக்கத்தை விட ரூ 960 கூடுதலாகக் காணப்படும்.
    - **V.** இரு பக்கங்களும் சமனடையும்.

02. ரூபா 17500 வரவுத்தாள் ஒன்று உரிய முதன்மை ஏட்டில் சரியாகப் பதியப்பட்டபோதிலும் நபர் கணக்கில் ரூ 15700 என பதியப்பட்டுள்ளது. எனின் இத்தவறினால்
    - **I.** ரூ 1800 வரவுத் தொங்கல் ஏற்பட்டிருக்கும்.
    - **II.** ரூ 1800 செலவுத் தொங்கல் ஏற்பட்டிருக்கும்.
    - **III.** ரூ 3600 வரவுத் தொங்கல் ஏற்பட்டிருக்கும்.
    - **IV.** ரூ 3600 செலவுத் தொங்கல் ஏற்பட்டிருக்கும்.
    - **V.** தொங்கல் ஏற்படாது.

03. தொங்கல் கணக்கில் ரூ 700 வரவு மீதியாகக் காணப்பட்டது இதற்கு காரணமாய் அமைவது
    - **I.** விற்பனை நாளேட்டில் விடுபட்ட விற்பனை ரூ 700
    - **II.** விற்பனை ரூபா 700 விற்பனைக் கணக்கில் இரு தடவை பதியப்பட்டது.
    - **III.** பெற்ற வாடகை ரூ 700 காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டது.
    - **IV.** சென்மதி மின்சாரம் ரூ 700 இற்கான பதிவுகள் காணப்படவில்லை
    - **V.** பெற்ற கழிவு ரூ 350 அனுமதித்தகழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

பின்வரும் தகவல்களைக் கொண்டு 4,5 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

❖ நிறுவனமொன்றின் 2013.03.31இல் பரீட்சை மீதி சமப்பட்டிருக்கவில்லை இதற்காக தொங்கல் கணக்கு உருவாக்கப்பட்டதுடன் தேறிய இலாபமாக ரூபா 225,000 மும் பெறப்பட்டது.

- ✓ கடன் கொள்வனவு ரூ 10000 கொள்வனவுக் கணக்கில் ரூ 1000 என வரவு வைக்கப்பட்டது.
- ✓ கடன்படுநரிடம் பெற்ற ரூபா 20000 காசு பெறுவனவு நாட்குறிப்பில் காசு விற்பனை பகுப்பாய்வு நிரலில் பதியப்பட்டிருந்தது.
- ✓ பெற்ற கழிவு ரூ 5000 கொள்வனவுக் கணக்கு வரவு கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு என பதியப்பட்டிருந்தது.

04. மேற்படி பிழைகளைத்திருத்த முன்னரான தொங்கல்கணக்கு மீதி

    1.ரூ 30000 வரவு 2.ரூ 29000 வரவு 3.ரூ 9000 வரவு
    4.ரூ 4000 வரவு 5.ரூ 5000 செலவு

05. மேற்படி பிழைகளைத் திருத்திய பின்னரான தேறிய இலாபம்

1. ரூ 225000 2. ரூ196000 3. ரூ 201000 4. ரூ244000 5. ரூ 206000

06. வரையறுத்த ஜூனியஸ் கம்பனியின் 31.10.2014இல் உள்ளவாறான பரீட்சை மீதி சமப்படவில்லை.

வேறுபாடு தொங்கல் கணக்கில் பதிவிடப்பட்டு பின்னர் கண்டறியப்பட்ட வழுக்கள்

- ✓ வாடகைக்காக பெற்ற காசு ரூ 20000 காசுப்புத்தக்கத்தில் மாத்திரம் பதிவ-ிடப்பட்டிருந்தது.
- ✓ கடன்படுநரிடமிருந்து பெற்ற ரூ 35000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காசுக் கொடுப்பனவாகப் பதியப்பட்டிருந்தது.
- ✓ கொள்வனவு நாளேடு ரூ 15000இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.
- ✓ அனுமதித்த கழிவு ரூ 8000 பெற்ற கழிவாகப் பதியப்பட்டிருந்தது.

1. மேற்படி பிழைகளைத்திருத்த முன்னரான தொங்கல்கணக்கு மீதி
   1.ரூ 89000 செலவு 2.ரூ 97000 செலவு 3.ரூ 62000 செலவு
   4.ரூ 74000 வரவு 5.ரூ 74000 செலவு

2. மேற்படி பிழைகளைத் திருத்துவதனால் தேறிய இலாபத்தில் ஏற்படக்கூடிய சரியான தாக்கம்
   1. ரூ 19000 இனால் குறையும் 2. ரூ74000இனால் அதிகரிக்கும்
   3. ரூ 21000 இனால் குறையும் 4. ரூ27000இனால் அதிகரிக்கும்
   5. ரூ 19000 இனால் அதிகரிக்கும்

07. வரையறுத்த சோகிரடீஸ் கம்பனியில் 2020 மாாச் மாதத்தில் இடம்பெற்ற வழுக்கள்

A – விற்பனைத்திரும்பல் ரூ 2000 விற்பனை நாளேடுட்டில் ரூ 20000 என பதியப்பட்டது

B – பெற்றவாடகை ரூ 500 கொடுத்தவாடகை கணக்கில் 5000 என வரவிடப்பட்டது

C – 2020 மார்ச் 1 இல் பொறிக் கொள்வனவு ரூ 50000 கொள்வனவு கணக்கில் ரூ 5000 என பதியப்பட்டது. பொறிக்கு 12% தேய்விடப்படுகின்றது

D - ஆரம்ப இருப்பு ரூ 1500 கூட்டி மதிப்பிடப்பட்டது.

கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

1) மேற்படி பிழைதவறுகளால் தொங்கல் கணக்கு மீதி யாது?

_ _

_ _

2) மேற்படி பிழைதவறுகளால் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?

_ _

_ _

3) மேற்படி பிழை தவறுகளை திருத்துவதால் தேறிய சொத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?

_ _

_ _

4) A, D யை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவை தருக.

_ _

_ _

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

_ _

_ _

_ _

பயிற்சி – வினாப்பத்திரம் - II

01. வரையறுத்த ஜெயதீபன் கம்பனியின் பரீட்சை மீதி 31/3/2020 இல் சமப்படவில்லை வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு பின்னர் பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி நிறுவனத்தின் 31/3/2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறியலாபம் 46000 ஆகும்.

அ) ஆரம்பஇருப்பு ரூ 1000 ஆல் கூட்டிமதிப்பிடப்பட்டது.

ஆ) பேரேட்டில் காணப்பட்ட விளம்பரக் கணக்கு மீதி ரூ 32000 பரீட்சைமீதிக்கு எடுத்துவரவில்லை.

இ) 1.10.2019 இல் இடம்பெற்ற பொறிக்கொள்வனவு ரூ 40000 பொறிபழுதுபார்த்தல்கணக்கிற்கு வரவிடப்பட்டது. பொறிக்கு 20% தேய்விடப்படுகின்றது.

ஈ) உரிமையாளரின் சொந்த ஆயுட்காப்புறுதிக்கு செலுத்திய ரூ 2000 நிறுவன காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

உ) வங்கிக்கடனுக்கு செலுத்திய ரூ 11000 தவனைக்கட்டனம் முழுவதும் வங்கிக் கடன் கணக்கிற்கு வரவிடப்பட்டது எனினும் இதில் ரூ 1000 வட்டி உள்ளடங்கியுள்ளது.

ஊ) அறவிடமுடியாக்கடன் ரூ 4000 அறவிடமுடியாக் கடன் கணக்கிலும் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் வரவிடப்பட்டது.

எ) எதிர்மாற்றல் ரூ 3000 ஏடுகளில் எப்பதிவுக்கும் உட்படுத்தப்படவில்லை.

ஏ) கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது
1) பிழைகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்.
2) தொங்கல் கணக்கு
3) தேறியலாப சீராக்கல் கூற்று

02. மாதவன் நிறுவன பரீட்சை மீதி ரூ 21250 செலவுத் தொங்கலாகக் காட்டியது. தேறிய இலாபமாக ரூ 187500 என கணிக்கப்பட்டது. கண்டறியப்பட்ட வழுக்கள்.

1. விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ 87350 விற்பனைக் கணக்கில் 83750 ஆக பதியப்பட்டிருந்தது. ஆனால் க.பட். கட்டுக்காட்டுக் கணக்கில் சரியாக பதிடப்பட்டிருந்தது.
2. பெற்ற கழிவு ரூ 6000 தவறுதலாக கொடுத்தகழிவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
3. சில்லறை வருமான ரூ 2125 பரீட்சை மீதியின் தவறான பக்கத்தில் பதிடப்பட்டிருந்தது.
4. வாகன திருத்தச் செலவு ரூ 1400 திருத்தச் செலவுக் கணக்கில் இரு தடைவ்கள் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது -

1. தொங்கல் கணக்கு 2. இலாபசீராக்கல் கூற்று

03. 2010.06.30இல் நரேன் நிறுவன பரீட்சை மீதி இணங்காமையால் வேறுபாடு தொங்கல் கணக்கில் இடப்பட்டது. வழுக்கள் வருமாறு

1. குமாருக்கு விற்பனை 20000 இதற்கான வியாபார கழிவு 2000 விற்பனை நாளேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

2. ரூ 5000 கொடுத்த கழிவு பெற்ற கழிவுக்கணக்கில் செலவில் ரூ 500 என பதிடப்பட்டிருந்தது.
3. சில்லறைக் காசேட்டில் கூலி நிரலின் பகுப்பாய்வு நிரல் ரூ 2000 கூலிக் கணக்கில் ரூ 200 என பதியப்பட்டிருந்தது.
4. ரூ 25000 அலுவலக பாவனைக்கான எழுது கருவிகள் கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
5. ரூ 30000 இற்கான சம்பளம் காசுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
   I. வழுக்களைத் திருத்தும் குறிப்பேட்டுப் பதிவுகள்
   II. தொங்கற் கணக்கு

04. குமரன் நிறுவனத்தின் 31.12.2013இல் முடிவடைந்த வருட தேறிய இலாபமாக ரூ 90000இனைக் காட்டியது கணக்காய்வில் கண்டறியப்பட்ட வழுக்கள்
1. கடன் கொள்வனவு ரூ12000 கொள்வனவு நாளேட்டில் விடுபட்டிருந்தது.
2. விற்பனைத் திரும்பல் ரூ 600 தவறுதலாக விற்பனைத் திரும்பல் நாளேட்டில் ரூ60 ஆக பதியப்பட்டிருந்தது.
3. 01.01.2013 இல் சம்பள நிலுவை ரூ 7000 கணக்குகளுக்கு எடுத்துவரப்படவில்லை.
4. 28.12.2013இல் கொள்வனவு செய்யப்பட்டு இன்னும் நிறுவனத்தை வந்தடையாத பொருட்கள் ரூ 15000
5. இவ்வாண்டு செலுத்திய தொலைபேசிக் கட்டணம் ரூ 60000 ஆகும். SLT நிறுவனம் தொலைபேசிக் கட்டணக் குறைப்பு செய்தமையால் செலுத்திய தொலைபேசிக் கட்டணத்தில் மேலதிகமாக ரூ 20000 அடங்கும். இச் சீராக்கம் ஏடுகளில் இடம்பெறவில்லை.
   1. தவறுகளைத் திருத்தும் பதிவு 2. இலாபசீராக்கல் கூற்று

05. சுந்தரம் நிறுவனத்தின் 2020.06.30இல் பரீட்சைமீதி

விபரம்	வரவு	செலவு
மோட்டார்(கிரயம்)	750000	
நபர் கணக்குகள்	160000	100000
மோட்டார் தேய்வு ஏற்பாடு		225000
கொள்வனவு, விற்பனை	125000	400000
VAT		10000
வியாபார இருப்பு	100000	
காசு	75000	
மூலதனம்		500000
தொங்கல் கணக்கு	25000	
	1235000	**1235000**

2020.06.30 இல் காணப்பட்ட நிலுவைச் சமன்பாடு வித்தியாசத்திற்கு தொங்கல் கணக்கு உருவாக்கப்பட்டது. கணக்குப் பரிசீலனையில் மேற்கொள்ளப்பட்ட வழுக்கள்.
1. கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு காசுப் பெறுவனவு நாளேட்டில் காசு விற்பனை பகுப்பாய்வு நிரலில் பதிடப்பட்டிருந்தது.
2. கடன்கொள்வனவு கொள்வனவு நாளேட்டில் விடுபட்டிருந்தது. ஆனால் கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
3. காசுக் கொள்வனவு ரூ 330000 ஆகும் (இதனுள் 10% Vat உள்ளடங்கும்) இத்தொகை முழுவதும் காசுக் கணக்கிலும் கொள்வனவுக் கணக்கிலும் பதிவிடப்பட்டிருந்தது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

4. கடன் விற்பனை ரூ 77000 (இதனுள் 10% Vat உள்ளடங்கும்) இத்தொகை கடன்படுநர் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
5. 2020.06.30 இல் முடிவடைந்த காலத்திற்கான மோட்டார் தேய்வு ரூ40000 திரண்ட தேய்வுக்கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
6. அறவிடமுடியாக் கடன் ரூ 20000 கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிடப்பட்டிருந்தது.
7. 2020.06.30 இல் பொருள் பற்று ரூ 18000 கொள்வனவுக் கணக்கில் மாத்திரம் பதிடப்பட்டிருந்தது.
8. வாடகைக்கு செலுத்திய காசு ரூ 9000 காசேட்டில் பதியப்பட்டபோதிலும் காசுக் கணக்கில் பதிவிடப்படவில்லை.

வேண்டப்படுவது-

1. வழுக்களைத் திருத்தும் குறிப்பேட்டுப் பதிவுகள்
2. தொங்கற் கணக்கு
3. 2020.06.30 இல் வழுக்கள் திருத்திய பின்னரான நிதிநிலைமைக்கூற்று.

06. ஜெமினி நிறுவனத்தின் கணக்குப்பதிவாளர் பரீட்சைமீதியைத் தயாரிக்கும்போது ஏற்பட்ட வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதிவிடப்பட்டு பின்னர் தேறிய இலாபமாக ரூபா 75000 பெறப்பட்டது. கண்டறியப்பட்ட வழுக்கள்.

1. விற்பனை நாளேடு ரூ 3000 ஆல் கூட்டிப்பதியப்பட்டிருந்தது.
2. விமாலுக்கு விடப்பட்ட கழிவு ரூ 1500 விமால் கணக்கில் பதிவிடப்படவில்லை.
3. வாடகைக்கணக்குமீதி 12000 பரீட்சைமீதியில் விடுபட்டிருந்தது.
4. மோட்டார் திருத்தச் செலவு 8000 மோட்டார் கணக்கில் வரவிடப்பட்டிருந்தது. (கிரயத்தில் 10% தேய்விடப்படும்)
5. கடன்பட்டவர் பெரேராவிடம் பெற்றகாசு காசுப் பெறுவனவு நாட்குறிப்பில் விடுபட்டிருந்தது.

வேண்டப்படுவது -

1. தவறுகளைத் திருத்தும் பதிவு 2. இலாபசீராக்கல் கூற்று

07. வரையறுத்த பாரதி நிறுவனமானது 31.12.2020இல் தயாரிக்கப்பட்ட முற்றும் அடங்கிய வருமானக் கூற்று ரூ 180000 இனைக் காட்டியது. நிதிநிலைமைக்கூற்றில் தொங்கற் கணக்கு மீதியும் காணப்பட்டது. கண்டறியப்பட்ட வழுக்கள்

1. கொள்வனவு நாளேடு ரூ 1500 மிகையாக கூட்டப்பட்டிருந்தது.
2. காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரல் ரூ 300 உரியகணக்குகளில் விடுபட்டிருந்தது.
3. மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் ரூ 200 காசு பெறுவனவு நாட்குறிப்பில் மாத்திரம் பதிவிப்பட்டிருந்தது.
4. உமாவின் உட்திருப்பம் வெளித்திரும்பலாக மூல ஏட்டில் பதிவிடப்பட்டிருந்தது.
5. 01.07.2020இல் கட்டிட திருத்தம் ரூ 40000 கட்டிடக்கணக்கில் பதிவிடப்படி (தேய்வு 10%)

பின்வரும் கணக்குகளைத் தயாரிக்க.

I. வழுக்களைத் திருத்தும் குறிப்பேட்டுப் பதிவுகள்
II. தொங்கற் கணக்கு
III. இலாப சீராக்கல் கூற்று

08. கமலம் வணிகத்தின் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு வருமானக்கூற்று இலாபமானது ரூ. 640,000 ஆக இருந்தது. பின்னர் கணக்கீட்டு பதிவுகளிலிருந்து பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டு வரப்பட்டது.

1. நிறுவனத்தினால் விற்பனை செய்க அல்லது திருப்பி அனுப்புக எனும் அடிப்படையில் ரூ. 80,000 கிரயமுள்ள பொருட்கள் ரூ. 100,000 பட்டியல்விலையிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது. கடன்விற்பனையாக கருதி பதிவு செய்யப்பட்ட இப்பொருட்களில் 60% மான பொருட்கள் 2020 மார்ச் 31 இல் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. எனினும் இவை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை
2. வங்கிக்கடனுக்காக செலுத்திய வட்டி ரூ. 55,000 ஆனது வட்டி வருமானக்கணக்கில் ரூ. 5500 என செலவு வைக்ககப்பபட்டுள்ளது.
3. காசுக்கு தளபாடக் கொள்வனவு ரூ.50,000 காசு கொள்வனவாக பதியப்பட்டுள்ளது. தளபாடங்களுக்கு நேர்கோட்டு முறையில் 20% தேய்விடப்படுகின்றது
4. 2020 மார்ச் மாதத்திற்கான மின்சாரக்கட்டணம் ரூ.8000ஆனது 31.03.2020 வரை செலுத்தப்படவோ பதியப்படவோ இல்லை.
5. 31.03.2020 இல் கடன்படுனர் ஒருவரினால் வங்கிக்கு நேரடியாக வைப்புச்செய்ப்பட்ட ரூ. 21,000 காசோலை - வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அறவிடமுடியாத கடனாக பதியப்பட்டிருந்தது
6. கமலத்தின் ஆயுட்காப்புறுதிக் கட்டடணக்கொடுப்பனவு ரூ. 12,000 வணிகத்தின் காப்புறுதிக் கொடுப்பனவாக பதியப்பட்டுள்ளது.
7. காசுகொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலின் கூட்டுத் தொகை ரூ.16000 பேரேட்டு கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.
8. சம்பளத்திற்காக வரையப்பட்ட காசோலை ரூ. 35500 காசுகொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் ரூ. 30500 என பதியப்பட்டிருந்தது

வேண்டப்படுவது

(1) வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் (விளம்பல்உட்பட)

(2) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான திருத்திய வரைபு இலாபத்தினைக் காட்டுவதற்கானகூற்று

5.0 கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

கணக்கீட்டு எண்ணக்கருக்கள்	எண்ணக்கருக்கள் விளக்கம்	நிதிக் கூற்றுகளில் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்கள்
அலகுசார் /தொழில் முழுமை கூறு	நிறுவனம் அதன் உரிமையாளரிடமிருந்து வேறுப்படுத்தி சுயாதீன தனி அலகாக கருதுதல்.	✓ நிதிக்கூற்றுகளில் நிறுவனப் பெயரை இடுதல். ✓ பற்று தேறியலாபம் என்பன சீராக்கம்.
பண அளவீட்டு எண்ணக்கரு	பணத்தால் அளவிடக்கூடிய விடயங்கள் மாத்திரம் நிதிக்கூற்றுகளில் காட்டப்படுதல்.	✓ பணத்தால் அளவிடமுடியாத விடயங்களை கைவிடுதல். ✓ நிதிக்கூற்றுகளில் பெறுமதியை ரூபாவில் காட்டுதல்.
கால அளவீட்டு எண்ணக்கரு	குறிப்பிட்ட காலத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை நிதிக்கூற்றுகளில் காட்டுதல்.	✓ நிதிக்கூற்றுகள் காலப்பகுதிக்கென அடையாளம் காட்டுதல்

தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு	வணிகச் செயற்பாடு எதிர்ப்பார்க்கும் எதிர்காலப் பகுதிக்குத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுதல்.	✓ சொத்துக்கள் பொறுப்புக்கள் நடைமுறை நடைமுறையல்லா சொத்துக்கள் பொறுப்புக்களாக வெளிப்படுத்தல். ✓ ஆதனப் பொறி உபகரணங்களுக்கு வருடாந்தம் தேய்விடல்.
அட்டுறு எண்ணக்கரு	குறித்த காலத்துக்கான வருமானங்கள் செலவினங்கள் பெறவேண்டிய கொடுக்கவேண்டிய வருமானம் செலவாகக் கருதல்.	✓ அட்டுறு செலவினம் வருமானம் ✓ முற்பண செலவினம் வருமானம் ✓ கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் காட்டப்படுதல்.
தேறல் எண்ணக்கரு	உழைக்கப்படும் போதே வருமானமாக இனங்காணல்.	✓ கடன்விற்பனைகளை விற்பனை வருமானமாகக் காட்டுதல். ✓ விற்பனைக்கான உடன்படிக்கைகளை (முற்பண விற்பனை வருமானம்) வருமானமாகக் காட்டக்கூடாது. ✓ விற்பனை அன்றேல் திருப்புக.
இணைதல் எண்ணக்கரு	வருமானத்திற்கெதிராக அனைத்து செலவுகளையும் இனங்காட்டி இலாபம் கணிப்பிடல்.	✓ இருப்புக்களின் ஒரு பகுதியை விற்பனை கிரயமாகவும் மற்றயதை சொத்தாகவும் வெளிப்படுத்தல். ✓ வருமதியாளர் மதிப்புக் குறைப்பு நட்டம் ✓ பெறுமானத்தேய்வு
வரலாற்றுக் கிரய எண்ணக்கரு	கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற போது எந்தப் பெறுமதி காணப்பட்டதோ அப் பெறுமதியினையே தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளில் காட்டுதல். (விலை மாற்றம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை)	✓ ஆதனம் பொறி உபகரணங்களை கிரயத்தில் அறிக்கைப்படுத்தல். ✓ ஆதனம் பொறி உபகரணம் தொடர்பாக பிற்காலத்தில் ஏற்படுகின்ற செலவுகளை கிரயத்தில் உள்ளடக்குதல்.
பாதுகாப்பு / முன்னெச்சரிக்கை எண்ணக்கரு	எதிர்க்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டங்களுக்காக முன்னதாக இலாபத்தில் ஒதுக்கி வைத்தல்.	✓ இருப்பின் கிரயம் , நிகரத்தேறத்தக்க பெறுமதி என்பவற்றுள் எது குறைவோ அதனை இருப்பாக வெளிப்படுத்தல். ✓ ஐயகடன் ஏற்பாடு. ✓ பெறுமானத்தேய்வு ஏற்பாடு.
முக்கியத்துவம் / பொருண்மை எண்ணக்கரு	கொடுக்கல் வாங்கல்களொன்றின் பெறுமதியின் அடிப்படையில்	✓ எழுதுகருவிகள் , கடதாசி இணைக்கும் கருவி போன்ற

	சொத்தாக அல்லது செலவாக வெளிப்படுத்தல்.	செலவுகளை செலவாகக் காட்டல்.
தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு	சட்டத்தினை விட பொருளாதார நலன் செலவுகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.	✓ குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்தினை நிறுவன சொத்தாக வெளிப்படுத்தல்.
கொள்கைமாறா எண்ணக்கரு	நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்படுகின்ற அடிப்படைகள் மரபுகள் , கொள்கைகள் மாற்றாது பயன்படுத்தல்.	✓ தொடர்ச்சியாக இருப்பு மதிப்பீட்டுக்கு (FIFO or WAC) ஒரே கிரய வாய்ப்பாட்டினைப் பின்பற்றல்.
வெளிப்படுத்தல்கள்	நிதிக்கூற்றுகளில் சில முக்கியமான தகவல்களை குறிப்பு வடிவில் வெளிப்படுத்தலாகும்.	✓ ஆதனம் பொறி உபகரண அசைவு கூற்று. ✓ இருப்பு வகைப்படுத்தல்.

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01.பொருத்தமான எண்ணக்கருவினைத் தருக.

இல	நிதிக் கூற்று விளைவுகள்	கணக்கீட்டு எண்ணக்கரு
01	நடைமுறைச் சொத்து, நடைமுறையல்லாச் சொத்து என வகைப்படுத்தல்	
02	கடன்படுநர், கடன் கொடுநர் மீதிகள் பதிதல்	
03	விற்பனைக் கிரயம் கணித்தல்	
04	ஐயக்கடன் ஏற்பாடு செய்தல்	

02. கணக்கீட்டு சமன்பாட்டினை உருவாக்குவதற்கான அடிப்படை எண்ணக்கரு யாது?

1. பண அளவீட்டு எண்ணக்கரு
2. அலகுசார் எண்ணக்கரு
3. தேறல் எண்ணக்கரு
4. இணைதல் எண்ணக்கரு
5. செயற்படு அமைப்பு எண்ணக்கரு

03. (A)➔ கந்தா நிறுவனத்தின் (B)➔ 2015.03.31இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

விபரம்	**ரூபா**	**ரூபா**
மூலதனம்	10000	
பற்று	(200)(C)	9800
நடைமுறைப் பொறுப்பு		
கடன்கொடுநர்		500 (D)
		10300

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

	பிரயோகிக்கப்பட்டுள்ள எண்ணக்கரு
A	
B	
C	
D	

04. நிதிக்கூற்றுக்களின் எண்ணக்கருசார் சட்டகத்துக்கு அமைய நிதிக் கூற்றுக்களின் இரண்டு அடிப்படை

எடுகோள்கள் எவை?

1. அலகுசார், அட்டுறு 2. அலகுசார், பாதுகாப்பு
3. அலகுசார், காலஅளவீடு 4. அலகுசார், தொடர்ந்து இயங்குதல்.
5. அலகுசார் , பணஅளவீடு

05. நிலத்தின் மீள் மதிப்பீட்டு விலை அதன் கிரயத்திலும் மூன்று மடங்கு அதிகமாக புத்தகங்களில் காட்டப்பட்டது. இதனைப் பிரதிபலிக்கும் பண்புசார் சிறப்பியல்பும், மீறப்பட்டுள்ள எண்ணக்கருவும் முறையே

1. ஒப்பிடும் தன்மை, தொடர்ந்து செல்லல் 2. பொருத்தப்பாடு வரலாற்றுக்கிரயம்
3. நம்பகத்தன்மை, நிலுவை எண்ணக்கரு 4. கணக்கீட்டு யதார்த்தம், பண அளவீடு
5. விளங்கிக்கொள்ளும் தன்மை, கால அளவு எண்ணக்கரு

06. குறித்த ஓர் நிறுவனம் மீள் விற்பனைப் பண்டங்களில் 60% விற்றுள்ளது விற்பனைக் கிரயத்தினை செலவாகவும் மிகுதி 40% சொத்தாகவும் இனங்காண்பதற்கு அடிப்படையான எண்ணக்கரு

1. முன்னெச்சரிக்கை 2. பொருண்மை 3. இணைதல்
4. வரலாற்றுக்கிரயம் 5. தொடர்ந்து செல்லல்

07. குறித்த காலப்பகுதிக்கான ஐயக்கடன் குறை வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டிருந்தது. இதற்கான எண்ணக்கரு

1. பொருண்மை 2. தொழில் முழுமைக்கூறு 3. அட்டுறு
4. இணைதல் 5. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

08. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் ஏனைய பகுதியினரின் சுதந்திரத்தை பேணும் வகையில் பதிவிடுவதற்கு அனுமதிக்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

1. பாதுகாப்பு 2. வரலாற்றுக்கிரயம் 3. அலகுசார்
4. அட்டுறு 5. இணைதல்

09. கணக்கீட்டு வேலைச்சட்டகத்தினால் வரையறுக்காத விடயம் எது?

1. நிதிக் கூற்றின் நோக்கம்
2. நிதிக் கூற்றின் தர ரீதியான பண்பு
3. நிதிக் கூற்றின் மூலங்கள்
4. நிதிக் கூற்றின் கட்டமைப்பு
5. நிதிக் கூற்றின் மூலங்களை அளத்தல்

10. உரிமையாளர் பங்களிப்பு இன்றி உரிமையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் பெறுமானம்

1. மேலதிக முதல் 2 . நட்டம் 3. வருமானம் 4. செலவு
5. சொத்து

இடைவெளிகளை நிரப்புக.

11. எதிர்கால விற்பனைக் கட்டளைக்காக பெற்ற காசுத் தொகையினை வருமானக் கூற்றில் பதியாது புறக்கணிக்க ஏதுவாக அமையும் எண்ணக்கரு ______________________________ ஆகும்.

12. ஐயக்கடன் ஏற்பாடு செய்வதால் திருப்தி செய்யப்படும் இரு எண்ணக்கருக்கள் 1.__________________________ 2.______________________ ஆகும்.

13. உழைக்கப்பட்ட வருமானங்கள் காசாகப் பெறப்படும் வரை காத்திருக்காது நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் பதிவு செய்தல் அவசியம் எனக் கூறும் எண்ணக்கரு _________________________ ஆகும்.

14. கடதாசி இணைக்கும் கருவியினை கொள்வனவு செய்யும் போது அவை செலவாக பதிதல் வேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கரு ______________________________ ஆகும்.

15. கணக்கீட்டில் அளவுசாராத் தகவல்களை பதிய முடியாது என்பதனை வலியுறுத்தும் எண்ணக்கரு

_____________________________ ஆகும்.

16. கணக்கீட்டு சமன்பாட்டிற்கு அடிப்படையான இரு எண்ணக்கருக்கள் 1.__________________________ 2.____________________ ஆகும்.

17. குத்தகை ஆதனத்தினை நிதி நிலைமைக் கூற்றில் சொத்தொன்றாகக் காட்டுவதற்கான எண்ணக்கரு ______________________________________ ஆகும்.

18. நிதிக் கூற்றுக்களில் தகவல்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் பதியப்படும் போது மீறப்படும் பண்பு சார் சிறப்பியல்பு ____________________________ஆகும்.

6.0 தனியாள் வணிகத்தின் வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01,02 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துக. நிறுவனமொன்றின் 31.03.2020 இல் காணப்பட்ட சரக்கியிருப்புக்களின் கிரயம் ரூபா 100,000 இவ் இருப்புக்களை எதிர்காலத்தில் விற்பனை செய்யலாம் என மதிப்பீடு செய்த விற்பனை விலை ரூபா 120,000 மற்றும் விற்பனை செய்கின்ற சந்தர்ப்பத்தில் எதிர்பார்த்த விற்பனை செலவு ரூபா 30,000

01. 31.03.2020 இல் வருமானக் கூற்றிலும் நிதிநிலைமைக் கூற்றிலும் காட்டப்படும் இருப்பின் பெறுமதிகள் எவை?

	வருமானக் கூற்றில் (ரூபா 000)	நிதிநிலைமைக் கூற்றில் (ரூபா 000)
(1)	100,000	120,000

(2)	120,000	100,000
(3)	90,000	100,000
(4)	100,000	90,000
(5)	90,000	90,000

02. மேலே தரப்பட்ட விடயங்களை சீராக்குவதனால் மொத்த இலாபம் தேறியலாபம் மற்றும் நடைமுறைச் சொத்தில் ஏற்படுத்திய தேறிய தாக்கம் என்ன?

	மொத்த இலாபம் (ரூபா000)	**தேறியலாபம் (ரூபா000)**	**நடைமுறைச்சொத்து (ரூபா 000)**
(1)	100,000 அதிகரிப்பு	90,000 அதிகரிப்பு	90,000 அதிகரிப்பு
(2)	100,000 அதிகரிப்பு	10,000 குறைவு	90,000 அதிகரிப்பு
(3)	120,000 அதிகரிப்பு	110,000 அதிகரிப்பு	110,000 அதிகரிப்பு
(4)	100,000 அதிகரிப்பு	100,000 அதிகரிப்பு	100,000 அதிகரிப்பு
(5)	100,000 அதிகரிப்பு	10,000 அதிகரிப்பு	100,000 அதிகரிப்பு

03. மாதவன் நிறுவனத்தின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காக கிடைத்த சில தகவல்கள் ரூபா (000)

செலுத்திய சம்பளம் 200
செலுத்திய வாடகை 50

- 31.03.2020 இல் செலுத்த வேண்டிய ஊழியர் சம்பளம் ரூபா 50,000
- மாதம் ஒன்றுக்கான வாடகைக் கட்டணம் ரூபா 5,000 ஆகும். 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் வருமானக் கூற்றில் காட்டப்படும் மொத்தச் செலவும் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும் மொத்த நடைமுறைப் பொறுப்பும் எவை?

	வருமானக் கூற்றில் (ரூபா 000)	நடைமுறைப் பொறுப்பு (ரூபா 000)
(1)	310,000	60,000
(2)	250,000	60,000
(3)	305,000	55,000
(4)	305,000	55,000
(5)	310,000	55,000

04, 05 வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக. நிறுவனமொன்றில் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காக கிடைத்த சில தகவல்கள்

- ✓ ஊழியருக்கு செலுத்திய தேறிய சம்பளம் ரூபா 270,000
- ✓ ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் பங்களிப்பு 10% மும் தொழில் வழங்குனரின் பங்களிப்பு 15% மும் பங்களிப்பு செய்தல் வேண்டும்.
- ✓ ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு ஊழியரின் பங்களிப்பு 3% அமைதல் வேண்டும்.
- ✓ குறித்த மாதத்திற்கான ஊழியர் தொடர்பான விடயங்கள் அனைத்தும் எதிர்வரும் மாதத்தின் முதல் வாரத்தில் செலுத்தப்படுகின்றது.

04. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் வருமானக் கூற்றில் காட்டப்படும் ஊழியர் தொடர்பான செலவுகள் மற்றும் நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாக ஊழியர் தொடர்பாக காட்டப்படும் மொத்தப் பொறுப்புக்கள்.

	வருமானக் கூற்றில் ஊழியர் தொடர்பான மொத்தச் செலவுகள் (ரூ000)	நிதிநிலைமைக் கூற்றில் ஊழியர் தொடர்பான மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் (ரூ000)
(1)	300,000	75,000
(2)	354,000	354,000
(3)	354,000	324,000
(4)	270,000	84,000
(5)	354,000	84,000

05. ஊழியர் சேமலாப நிதியத்தினை பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளில் சரியானது?

		ரூபா	ரூபா
(1)	ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் கணக்கு வரவு	45,000	
	சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு செலவு		45,000
(2)	ஊழியர் சம்பளக் கணக்கு வரவு	30,000	
	ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் கணக்கு வரவு	45,000	
	சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு செலவு		75,000
(3)	ஊழியர் சம்பளக் கணக்கு வரவு	45,000	
	ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் கணக்கு வரவு	30,000	
	சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு செலவு		75,000
(4)	ஊழியர் சம்பளக் கணக்கு வரவு	300,000	
	ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் கணக்கு வரவு	45,000	
	சென்மதி சம்பளக் கணக்கு செலவு		270,000
	சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு செலவு		75,000
(5)	ஊழியர் சம்பளக் கணக்கு வரவு	270,000	
	ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் கணக்கு வரவு	75,000	
	சென்மதி சம்பளக் கணக்கு செலவு		270,000
	சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு செலவு		75,000

பயிற்சி – வினாப்பத்திரம் - II

01 சில்வர்லைன் நிறுவனத்திலிருந்து 31-12-2000 இல் பிரித்தெடுத்த பரீட்சைமீதி

விபரம்	வரவு	செலவு
மூலதனம்		500000
காணிகட்டிடம் (தேறியது)	260000	
சரக்கிருப்பு 1-1-2000	60000	
பொறி இயந்திரம் (தேறியது)	380000	
தளபாடப் பொருத்தி (தேறியது)	165000	
அலுவலக உபகரணம்	100000	
கொள்வனவும் விற்பனையும்	500000	902650
கழிவுகள்	15000	16000
கடன் பட்டோரும் கடன் கொடுத்தோரும்	70000	68000
அறவிட முடியாத கடன்கள்	7000	
உட்காவுகை	12600	
சம்பளம்	36000	
விளம்பரம்	3400	
பொறி திருத்தம்	5500	
வாடகை	7500	
காகிதாதிகள்	10000	
மாலா – கடன்		150000
10% முதலீடு	100000	
வருமதி உண்டியல்	25000	
வெளித்திருப்பம்		15000
உரிமையாளர் வருமான வரி	8000	
முதலீட்டு வருமானம்		7000
சென்மதி உண்டியல்		41000
அலுவலகச் செலவு	9000	
வங்கிச் செலவு	9600	

சில்லறைச் செலவு	5400	
சில்லறை வருமானம்		12500
விற்பனைச் செலவு	7800	
மின்சாரம்	7200	
களஞ்சிய வாடகை	6000	
பெற்ற தரகு		15000
வங்கி மீ வரையல்		143000
1.1.2000 நிலுவை மின்சாரம்		5000
1.1.2000 முற்பண காப்புறுதி	5000	
காசு	60150	
	1875150	**1875150**

மேலதிக தகவல்கள்

01 31.12.2000 இல் சரக்கிருப்பின் கொள்விலை 78160 ரூபா என மதிப்பிடப்பட்டது ஆனால் இதன் சந்தை விலை 78155 ரூபா என மதிப்பிடப்பட்டது.

02 5000 கொள்விலையான சரக்கு கொள்விலையுடன் 15% இலாபமிட்டு விற்பனையின்றேல் திருப்புக அடிப்படையில் விற்பனையாக பதியப்பட்டு அனுப்பப்பட்டது இதில் 60% மாத்திரமே விற்பனை செய்யப்பட்டது.

03. கடன் பட்ட ஒருவர் 28.12.2000 அன்று 4800 ரூபாவை வங்கிக்கு நேரடியாக அனுப்பிவைத்தார் இவருக்கு 200 ரூபா கழிவு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது. இவைகள் தொடர்பான பதிவு ஏடுகளில் இடம்பெறவில்லை.

04. கடன் பட்டோரில் 1000 ரூபா மதிப்புக் குறைப்பு நட்டமாகப் பதிவு செய்க. எஞ்சிய கடன்பட்டோருள் 10% எதிர்பார்க்கை நட்டப் படிகளாக ஏற்பாடு செய்க

05. விளம்பர செலவு 1.1.1999 இலிருந்து 5 வருடங்களுக்கு பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டது.

06. சம்பளம் என்பது ஊழியருக்கு காசாக செலுத்திய தேறிய சம்பளம் ஆகும். இதில் EPF தொழிலாளர், தொழில் கொள்வோர் முறையே 10% , 15% பங்களிப்புகளும் ETF தொழில் கொள்வோர் 3% பங்களிப்புகளும் கணக்கேடுகளில் பதிவிடப்படவில்லை.

07. பின்வருமாறு நிலையான சொத்துக்களுக்கு தேய்விடுக.
கட்டடம் மாறாப்பாக முறையில் 4%
பொறி இயந்திரம் ஒடுங்குபாக முறையில் 10%
தளபாடம் மாறாப்பாக முறையில் 8% 3
1.12.1999 கழித்த திரண்ட பெறுமானத் தேய்வுகள் தளபாடம் 12000 ரூபா
இயந்திரம் 10000 ரூபா கட்டடம் 4000 ரூபா (காணியின் கொள்விலை 64000 ரூபா)

08. 31.12.2000 மின்சார நிலுவை 1000 முற்பண காப்புறுதி 1500

09. உரிமையாளர் பற்று பொருள் 5000 ரூபா காசுப்பற்று 3000 ரூபா

10. 1.6.2000 இல் 5000 கொள்விலையான பண்டங்கள் தீயினால் முற்றாக அழிவடைந்தது இதில் 80% காப்புறுதி நிறுவனம் தருவதாக ஒப்புக்கொண்டது. இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

வேண்டப்படுவது

01. 31.12.2000 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
02. 31.12.2000 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

7.0 உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்று

உற்பத்திக் கிரயக் கூற்றினைத் தயாரிப்பதன் முக்கியத்துவம்

01. மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிக்கலாம்
02. உற்பதிக் கிரயங்களைக் கட்டுப்படுத்தலாம்.
03. உற்பத்தித் தீர்மானங்களை மேற்கொள்ளலாம்.
04. விலையிடல் தீர்மானம் மேற்கொள்ளலாம்.

உற்பத்திக் கிரயத்தின் கூறுகள்

01. முதற் கிரயம்

பொருள் ஒன்றின் உற்பத்தியின் போது ஏற்படும் நேர்பொருள் கிரயம், நேர்க் கூலிக் கிரயம், ஏனைய நேர் செலவுகள் என்பவற்றின் மொத்தம் "மூலக்கிரயம்" எனப்படும்.

02. உற்பத்தி மேந்தலைக் கிரயம்

உற்பத்தி அலகுக்கேற்ப தெளிவாக இனங்காணமுடியாத உற்பத்தி தொடர்பான அனைத்து பொதுவான செலவீனங்கள். உ-ம் . தொழிற்சாலை வாடகை, தொழிற்சாலை மின்சாரம்

மூலக்கிரயத்தின் வகைகள்	விளக்கம்	உதாரணம்
நேர் பொருள்	உற்பத்திக்கு நேரடியாக ஏற்படுவதும் உற்பத்தி அலகுகளுடன் தெளிவாக வேறுபடுத்தி இனங்காணக்கூடிய பொருட் கிரயங்களை குறிக்கும்.	வெதுப்பகம் (பேக்கரி) - கோதுமை மா மட்பாண்ட உற்பத்தி - களிமண் ஆடை உற்பத்தி - துணிவகைகள் அச்சகம் - கடதாசி , மை தளபாட உற்பத்தி - மரப்பலகை
நேர் கூலி	உற்பத்தி அலகுகளுடன் தெளிவாக இனங்காணக் கூடியதும், உற்பத்திகளில் நேரடியாக பங்களிப்பு செய்யும் உழைப்புக்காக செலுத்தப்படும் கூலிகள் ஆகும்.	வெதுப்பகம் - பாண் தயாரிப்பவர் கூலி தளபாடஉற்பத்தி - மரவேலை செய்பவர் கூலி அச்சகம் - புத்தகம் அச்சிடுபவர் கூலி சப்பாத்துஉற்பத்தி-சப்பாத்துத் தைப்பவர் கூலி ஆடைஉற்பத்தி -தையல்பொறிஇயக்குபவர்கூலி
ஏனைய நேர் செலவு	உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் நேர் பொருள் கிரயம், நேர் கூலிக் கிரயம் தவிர்ந்த நேரடியாக ஏற்பட்ட வேறு செலவுகள் ஏனைய நேர் கிரயம் எனப்படும்.	**ஆடை தைக்கும் நிறுவனம்** விசேட ஆடைவடிவமைப்பாளர் கட்டணம் **அச்சகம்** புத்தகம் ஆக்கியோனுக்கான எழுத்துரிமை, பதிப்புரிமை கட்டணம

உற்பத்தி மேந்தலைகள்	விளக்கம்	உதாரணம்
நேரில் பொருள்	உற்பத்தியின் போது பயன்படுத்தும் உற்பத்தி அலகொன்றுடன் நேரடியாக இனங்காண முடியாத பொருளுக்காக ஏற்படும் செலவுகளைக் குறிக்கும்.	தளபாட உற்பத்தி - மணல்கடதாசி, ஆணி தானியங்கள்அரைக்கும்ஆலை - எண்ணெய் அச்சகம் - நூல் , ஒட்டும் பசை ஆடை உற்பத்தி - பொத்தான், தையல் நூல்,

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நேரில் கூலி	உற்பத்தி நடவடிக்கையுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாத ஊழியருக்கான கொடுப்பனவுகள் ஆகும்.	தளபாட உற்பத்தி - மேற்பார்வையாளர் சம்பளம் ஆடை உற்பத்தி - முகாமையாளர் சம்பளம் அச்சகம் - பாதுகாப்பு ஊழியர்கள் சம்பளம்
ஏனைய நேரில் செலவு	உற்பத்தி அலகொன்றுடன் திட்டவட்டமாக இனங்கான முடியாத நேரில் பொருள் கிரயமும், நேரில் கூலிக் கிரயமும் தவிர்ந்த ஏனைய செலவுகள் “ஏனைய நேரில் செலவுகள்” எனப்படும்.	தொழிற்சாலை வாடகை தொழிற்சாலை பராமரிப்பு தொழிற்சாலை காப்புறுதி தொழிற்சாலை மின்சாரம் இயந்திர தேய்வு

அலகுக்கிரயம் / ஒரு அலகுக்கான உற்பத்திக்கிரயம்

மொத்த உற்பத்திக் கிரயத்தை உற்பத்தி செய்த மொத்த அலகுகளால் பிரிக்கும் போது பெறப்படுகின்ற தொகையாகும்.

ஒரு அலகுக்கான கிரயம் = $\dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்தி செய்த மொத்த அலகுகள்}}$

அலகுக்கான விற்பனை விலை

உற்பத்திப் பொருளைச் சந்தையில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட விலையே அலகுக்கான விற்பனை விலையாகும். இது உற்பத்திக் கிரயத்துடன் இலாப எல்லையைக் கூட்டி விலையை தீர்மானிக்கும் போது “கிரய அடிப்படையிலான விலையிடல்” என அழைக்கப்படும்.

அலகு விற்பனை விலை = அலகுக்கிரயம் + இலாப எல்லை (அலகு)

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01. அனோஜன் உற்பத்தி நிறுவனத்தின் 2013-03-31 முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்

நேர்கூலிக்கிரயம்	30 000
இயந்திர தேய்வு	7 500
இயந்திர பாராமரிப்பு	8 500
பழுதடைந்த மூலப்பொருள்	2 000
உற்பத்திக்கிரயம்	75 000
எரிபொருள் கருவிகளின் குறைவு	9 000
நடைமுறைவேலை அதிகரிப்பு (மூலக்கிரயத்தில்)	9 000
மூலப்பொருள் இருப்பு குறைவு	6 000

கொள்வனவு செய்த மூலப்பொருட்களும் மூலக்கிரயமும் முறையே

(1) 25 000 , 50 000 2) 23 000 , 41 000 (3) 21 000 , 41 000
(4) 31 000 , 50 000 5) 31 000 , 59 000

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

02. பின்வரும் சமன்பாடுகளில் எது உற்பத்திக் கிரயத்தினை தீர்மானிக்கின்றது.

1. மூலக்கிரயம் + மேந்தலைக்கிரயம்
2. மூலப்பொருள் கிரயம் +நிலையான உற்பத்தி மேந்தலைக்கிரயம்
3. நேர்கிரயங்கள் +மாறும் உற்பத்தி மேந்தலைக்கிரயங்கள்
4. மூலக்கிரயம் +மேந்தலைக்கிரயம் - உற்பத்தியல்லா மேந்தலைக்கிரயம்
5. நேர்மூலப்பொருள் கிரயம் +மூலக்கிரயம் - மாறும்உற்பத்திமேந்தலைக்கிரயம்

03. நிறுவன கணக்கீட்டு உதவியாளரால் பிழையாககணிக்கப்பட்ட உற்பத்திகிரய தகவல்கள் (000)

மூலப்பொருள் கொள்வனவு	900
மாற்றல் கிரயம்	206
மூலப்பொருள் அதிகரிப்பு	50
குறைவேலை இருப்பு குறைவு	(20)
முடிவுப்பொருள் அதிகரிப்பு	30
உற்பத்திக்கிரயம்	1166

மேலுள்ள உற்பத்திக் கிரயத்தினை கணிக்கும்போது பின்வருவன கவனத்திற்கொள்ள வேண்டும்.
மாற்றல் கிரயத்தில் கட்டளையிடல் கிரயம் ரூ 16000 உள்ளடங்கியுள்ளது.
இக்காலப்பகுதி முடிவுப்பொருள் இருப்பில் 10000 அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

1. மேலதிக தகவல்கள் கருத்திற்கொள்ள முன்னர் உற்பத்திக்கிரயம்
   1). 1166000 2). 1136000 3). 1076000 4). 1156000 5). 1160000

2. மேலதிக தகவல்கள் திருத்தம் செய்த பின்னர் விற்பனைக்கிரயம்
   1). 1040000 2). 1056000 3). 1052000 4). 1126000 5). 1160000

04. 31.03.2012 தகவல்கள்
பயன்படுத்திய நேர்பொருள் 20000 , நேர் கூலி 6000, முதற்கிரயம் 24000, தொழிற்சாலை மேந்தலைகள் 10000, குறைவேலை (01.04.2012) 5000 குறைவேலை (31.03.2012) 8000 எனின் உற்பத்திக்கிரயம் யாது?
1) 34000 2) 63000 3) 57000 4) 37000 5) 31000

05. உற்பத்திக்கு தயாரான மூலப்பொருட்கிரயம் 160000
பயன்படுத்தப்படாத மூலப்பொருள்கிரயம் 30000
நேர்கூலி , நேர் செலவு முறையே 15000 , 5000
உற்பத்தக் கிரயத்தில் 25% தொழிற்சாலை மேந்தலையாகும்.
பின்வருவனவற்றைக் காண்க

1. நுகரப்பட்ட மூலப்பொருள் ____________________
2. முதற்கிரயம் ____________________
3. தொழிற்சாலை மேந்தலை ____________________
4. உற்பத்திக்கிரயம் ____________________

06. உற்பத்திக்கிரயம் 140000 , ஆரம்பமூலப்பொருள்இருப்பு 18000, நேர்க்கூலி 42000, நேர்செலவு 6000, இறுதி மூலப்பொருள் இருப்பு 20000, பழுதடைந்த மூலப்பொருள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

இருப்பு 3000, குறைவேலை இருப்பு அதிகரிப்பு 4000, உற்பத்திக்கிரயத்தில் 70 சதவீதம் மூலக்கிரயம் எனின் மூலப்பொருள் கொள்வனவு யாது?

1. 51000 2) 55000 3) 56000 4) 59000 5) 52000

07. 30 ஜுன் 2013 உற்பத்தி நிறுவன தகவல்கள் (ஆயிரம் ரூபாய்களில்)

குறைவேலை அதிகரிப்பு (முதற்கிரயம்)	400
முடிவு சரக்கிருப்பு குறைவு	150
பயன்படுத்திய நேர் மூலப்பொருள்	200
நேர்கூலி	250
தொழிற்சாலை மேந்தலை	300

30 ஜுன் 2013 முதற்கிரயமும், விற்பனைக்கிரயமும் முறையே

1) 450 000, 600 000
2) 850 000, 950 000
3) 450 000, 900 000
4) 850 000, 1000 000
5) 50 000, 500 000

08. ஆடை உற்பத்தியில் தையல் நூல் எக்கிரயமாக கொள்ளப்படும்.

1) நேர் மூலப்பொருள்
2) நேர் கூலி
3) மூலக்கிரயம்
4) உற்பத்தி மேந்தலை
5) உற்பத்தி அல்லா மேந்தலை

09. உற்பத்தி செலவுகளை வகைப்படுத்துவற்குரிய அடிப்படை யாது?

_ _

10. 31.03.2013 இல் தரவுகள்

பயன்படுத்திய நேர்பொருள்	20000
குறைவேலை 01.04.2011	5000
குறைவேலை 31.03.2013	8000
முதற்கிரயம்	24000
தொழிற்சாலை மேந்தலை	10000
நேர்க்கூலி	6000

உற்பத்திக்கிரயம் யாது

1) 34000 2) 63000 3) 57000 4) 37000 5) 31000

11. உற்பத்திக் கிரய தகவல்கள்

நேர்மூலப்பொருட்கிரயம்	25000
நேர் கூலி	5000
நேர் செலவு	7000
மொத்த மேந்தலை	15000
மொத்த உற்பத்தி அலகுகள்	1000

இலாப வீதம் கிரயத்தில் 15%

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

1) அலகுக் கிரயம் யாது? ________________

2) 1000 அலகுகளுக்கான விற்பனை வருமானம் யாது? ________________

12. உற்பத்தி நிறுவன தகவல்கள்

உற்பத்திக்கு கிடைப்பனவாக உள்ள மூலப்பொருள் கிரயம்	ரூ 20000
நேர் கூலிக்கிரயம்	30000
உற்பத்திக்கிரயம்	100000
விற்பனை விநியோக செலவுகள்	23000

ஆரம்பமூலப்பொருள் இருப்பிலும் இறுதி மூலப்பொருள் இருப்பு 3000 குறைவாகும். சராசரி மூலப்பொருள் இருப்பு 4000, மூலப்பொருள் இருப்பு அழிவு 2000

1. உற்பத்தி மேந்தலைக்கிரயம் ________________________
2. மூலப்பொருள் கொள்வனவு பெறுமதி ________________________
3. பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் ________________________
4. மூலக்கிரயம் ________________________

பயிற்சி – வினாப்பத்திரம் - II

01. பின்வரும் தகல்கள் உற்பத்தி நிறுவனமொன்று 2012 பெப்ரவரி மாதம் தொடர்பானவை

மூலப்பொருள் கொள்வனவு	300000
நேர் ஊழியர்	170000
நேர் செலவு	30000
உற்பத்தி மேந்தலைகள்	300000

சரக்கிருப்பு	**29.02.2012**	**31.01.2012**
மூலப்பொருள்	50000	100000
குறைவேலை	150000	100000
முடிவுப்பொருள்	100000	180000

- குறைவேலைகள் உற்பத்திக் கிரயத்தில் சீராக்கம் செய்யப்படும்.
- உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனைக் கிரயத்தில் 25% இலாபம் வைக்கப்படும்.

01. 2012 பெப்ரவரிமாதத்திற்கான மூலக்கிரயம்,உற்பத்திக்கிரயம் ஆகியன எவ்வளவு?
02. இம் மாதத்தில் உழைக்கப்பட்ட மொத்தஇலாபம் எவ்வளவு?

02. 2010 மார்ச் 31இல் அருந்ததி வியாபார நிலையத்தின் நிதிநிலைமைக்கூற்று

இயந்திரம்	580000	உரிமையாண்மை	700000
இருப்புக்கள்	45000	கடன்கொடுத்தோர்	30000
மூலப்பொருட்கள்	25000	செலுத்தவேண்டிய நேர்கூலி	20000
நடைமுறைவேலை	10000		
முடிவுப்பொருள்	75000		
கடன்பட்டோர்	15000		
காசு	**750000**		**750000**

2010 ஜுன் 30இல் முடிவடைந்த காலாண்டுக்கான மேலதிக தகவல்கள்

1. நாளேட்டின் மொத்தம்

விற்பனை நாளேடு	1 000 000
மூலப்பொருள் கொள்வனவு நாளேடு	600 000
கொள்வனவு திரும்பல் நாளேடு	10 000

2. காசுப் பெறுவனவு கொடுப்பனவு விபரம்

காசு பெறுவனவு

காசு விற்பனை	120 000
கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு	950 000
	1 070 000

காசு கொடுப்பனவு

நேர் கூலி	150 000
உற்பத்தி மேந்தலைகள்	105 000
விற்பனை நிர்வாகச் செலவுகள்	140 000
கடன்கொடுநருக்கான கொடுப்பனவு	610 000
புத்தாண்டு முற்பணம்	25 000
	1 030 000

3. பதியப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகள்

கணக்கு	**வரவு**	**செலவு**
பெறுமானத் தேய்வு	20000	
பெறுமானத் தேய்வு ஏற்பாடு		20000
(பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டது)		
நேர்க்கூலி	30000	
செலுத்தவேண்டிய நேர்க்கூலி		30000
(நேர்க்கூலி நிலுவை)		

4. 2010 ஜுன் 30 சரக்கிருப்புகள்

மூலப்பொருட்கள்	20000
நடைமுறை வேலை	35000
முடிவுப்பொருள்	30000

5. 2010 மார்ச் 31இல் இயந்திரத்தின் கிரயம் 800 000 ஆகும்

வேண்டப்படுவது

1. நாளேடுகளின் மொத்தங்களை பேரேடுகளுக்கு மாற்றுவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்
2. 2010 ஜுன் 30ல் உள்ளவாறான பரீட்சைமீதி
3. 2010 ஜுன் 30ல் முடிவடைந்த காலாண்டுக்கான உற்பத்திக் கணக்கு
4. 2010 ஜுன் 30ல் முடிவடைந்த காலாண்டுக்கான வருமானக்கூற்று

03. பொருளொன்றை உற்பத்தி செய்வது தொடர்பில் கம்பனி ஒன்றிற்கு ஏற்பட்ட செலவுகள்

பயன்படுத்திய நேர்பொருள்	150000
விற்பனைச் செலவுகள்	5000
நேரில் உற்பத்திக் கூலிகள்	7000
நிர்வாகச் செலவு	10000
தொழிற்சாலை உபகரணத் தேய்வு	70000
நேர் ஊழியக் கிரயம்	40000
தொழிற்சாலை ஊழியத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு	20000
பயன்படுத்திய நேரில் பொருட்கள்	45000

மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

04. உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்பான தகவல்கள்

உற்பத்திக்கு கிடைப்பனவாக உள்ள மூலப்பொருட்களின் கிரயம்	20000
நேர் ஊழியக் கிரயம்	10000
மொத்த உற்பத்திக் கிரயம்	100000
விற்பனை விநியோகச் செலவுகள்	23000
ஆரம்ப மூலப்பொருள்	5000
இறுதி மூலப்பொருள்	2000

1. கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் யாது
2. உற்பத்தி மேந்தலைகள் எவ்வளவு?

05. அமல் கம்பனி ஒரு உற்பத்தி நிறுவனமாகும். 2008 ஜனவரி மாத தகவல்கள்

மூலப்பொருட்களின் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு (2008.1.1 இலிருந்து 2008.1.31 வரை)	20000
நடைமுறைவேலை குறைவு (2008.1.1 இலிருந்து 2008.1.31 வரை)	30000
கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள்	100000
நேர்கூலி	40000
இயந்திரத் தேய்வு	10000
எரிபொருளும் சக்தியும்	25000
இயந்திர பாராமரிப்பு	35000

நடைமுறை வேலை உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்படும்.

01. 2008 ஜனவரி மாத மூலக்கிரயம்
02. 2008 ஜனவரி மாத வியாபாரக் கணக்கிற்கு மாற்றவேண்டிய தொகை

06.

சரக்கிருப்பு	31.12.2006	31.12.2007
மூலப்பொருள்	50000	60000
குறைவேலை(மூலச்செலவில்)	90000	70000

2007ம் ஆண்டு செலவுகள்

மூலப்பொருள் கொள்வனவு	660000
திருப்பியனுப்பிய மூலப்பொருள்	20000
உட்சுமைக்கூலி	10000
நேர்கூலி	200000
நேர்செலவு	60000

1. 2007ம் ஆண்டில் மூலப்பொருள் பாவனை யாது?
2. 2007ம் ஆண்டில் மூலச்செலவு யாது?

07. உற்பத்தியாளரான செகான் என்பவரின் 2013.03.31ம் திகதியில் பரீட்சைமீதியில் கீழ்காணுபவை உட்படுத்தப்பட்டுள்ளன.

2012.04.01 மூலப்பொருள் இருப்பு		19300
மூலப்பொருள் கொள்வனவு		297050
நடைமுறை வேலை 2012.04.01	மூலப்பொருள்	3050
	கூலி	1950
கூலிகள்		143700
உட்சுமைக்கூலி		18500

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தொழிற்சாலை வாடகை இறை	23270
மேலதிக தகவல்கள்	
2013.03.31 நடைமுறை வேலை மூலப்பொருள்	4830
கூலி	100
மூலப்பொருள் இருப்பு	9070
மூலப்பொருள் செலவு ஒரு அலகிற்கு	ரூ 3.60
மூலச்செலவு ஒரு அலகிற்கு	ரூ 5.00

கூலிகளில் நேர்க்கூலி கழித்து மிகுதியான நேரில் கூலிகளில் 60% தொழிற்சாலைக்குரியதாகும்.

வேண்டப்படுவது 2013.03.31இற்கு

1. பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம்
2. உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள்
3. நேர்க்கூலி (4) மூலக்கிரயம் (5) உற்பத்திக் கிரயம்

08. அருள் உற்பத்திக் கம்பனியின் ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்

i.	2011.03.31இல் காணப்பட்ட மீதிகள்	
	இயந்திரம் முன்கொண்டுவரும் தொகை	600000
	இருப்புகள் மூலப்பொருள்	50000
	முடிவுப்பொருள்	25000
	நடைமுறைவேலை	20000
ii.	மூலப்பொருள் கொள்வனவு நாளேட்டின் மொத்தம்	500000
	மூலப்பொருள் கொள்வனவு திரும்பல் நாளேட்டின் மொத்தம்	50000
iii.	காசுக்கொடுப்பனவு	
	நேர்கூலி	100000
	மின்சக்தி	30000
	ஏனைய உற்பத்தி மேந்தலைகள்	110000
iv.	2012.03.31 மீதிகள்	
	இயந்திரம் முன்கொண்டுவரும் தொகை	540000
	முடிவுப்பொருள்	50000
	மூலப்பொருட்கள்	35000
	நடைமுறை வேலை	25000
	செலுத்தவேண்டிய நேர்கூலி	40000
	செலுத்தவேண்டிய மின்சாரம்	5000

வேண்டப்படுவது - 2012.03.31 இல் உற்பத்திகிரய கணிப்பீட்டுக் கூற்று

09. கணணி மேசைகளை உற்பத்தி செய்யும் மங்களா தளபாட கம்பனியின் புத்தகங்களில் இருந்து 31.03.2013இல் பெற்ற தகவல்கள்

01.04.2012 மீதிகள் பலகைகள்	84000
முடிவடைந்த மேசைகள் (20)	175200
குறைவேலைகள்	40000
பலகை கொள்வனவு	240000
உட்சுமை கூலி	4000
மேசை அமைத்தல் கூலி	32000
தொழிற்சாலை வாடகை	8800

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

விற்பனைகள்	480000
தொழிற்சாலை மின்சாரம்	8000
தொழிற்சாலை மேற்பார்வை	12000
சிறுகருவிகள் செலவு	5200
இயந்திர தேய்வு	5000

மேலதிக தகவல்கள்

1. தொழிற்சாலையிலிருந்து இரு மேசைகள் களவாடப்பட்டிருந்ததுடன் இக்காலத்தில் 7000 பெறுமதியான பலகைகள் சேதமடைந்திருந்தன. இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
2. 31.03.2013 மீதிகள் பலகைகள் 104000
   குறைவேலைகள் 28000
3. 31.03.2013 இல் மேசைகளின் இருப்பு 30 ஆகும்.
4. இக்காலத்தில் 48 மேசைகள் விற்கப்பட்டிருந்தன இதில் ஆரம்ப இருப்பு மேசைகளும் அடங்கும்.

   வேண்டப்படுவது 31.03.2013 இற்கு
   - i. மொத்த உற்பத்திக்கிரயம்
   - ii. ஒரு அலகுக்கான கிரயம்
   - iii. விற்பனையால் கிடைத்த மொத்த இலாபம்

10. மோகன் உற்பத்தி நிறுவன தகவல்கள்

01.04.2011 மீதிகள்

மூலப்பொருள் (20000kg)	400000
குறைவேலை (முதற்கிரயம்)	60000
முடிவுப்பொருள் கிரயத்தில் (50000 அலகுகள்)	500000

2011/2012 தகவல்கள்

இறக்குமதி செய்த மூலப்பொருட்கள் (400000 kg)	800000
ஆண்டுகாலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள்	600000
உற்பத்தி நோக்கத்திற்கு விநியோகிக்கப்பட்ட மூலப்பொருட்கள்	180000kg
நேர்கூலி	650000
விற்பனை அலகு ஒன்று 15 ரூபா வீதம்	750000
தொழிற்சாலை மேந்தலை	350000

31.03.2012 மீதிகள்

மூலப்பொருள்	40000kg
குறைவேலை (முதற்கிரயம்)	50000
முடிவுப்பொருட்கள்	100000 அலகுகள்

1. உற்பத்திக்கிரயம் யாது?
2. மூலப்பொருள் இழப்புப் பெறுமதி யாது?

11. இந்திரன் உற்பத்தி நிறுவனத்தின் மட்பாண்ட உற்பத்தி தொடர்பான 31.12.2011 தகவல்கள்

1.1.2011 இருப்பு மூலப்பொருள்	24000
குறைவேலை	12000
முடிவுற்றபொருள்	17500
நேர்மூலப்பொருள் கொள்வனவு	185000

மேலதிக தகவல்கள்

1. 31.12.2011 இருப்பு
   மூலப்பொருள் 21000
   குறைவேலை 10000
   முடிவுற்றபொருள் 23000
   நேரில் பொருள் 12000
2. இயந்திரங்களுக்கு கிரயத்தில் 10% தேய்விடவும்
3. குறைவேலை தொழிற்சாலைக் கிரயத்தில் மதிப்பிடவும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நேரில் மூலப்பொருள் கொள்வனவு	32000
உற்பத்திக்கூலி	45000
இயந்திர உபகரண கிரயம்	160000
வலுவும் மின்சாரமும்	14500
காப்புறுதி – தொழிற்சாலை	8500
அலுவலகம்	2500
இயந்திர பராமரிப்பு	6000
விற்பனை	575000

31.12.2011இற்கான உற்பத்திக்கிரயக்கூற்று, வியாபாரக்கணக்கினை தயாரிக்க

12. ஜேக்கப் உற்பத்தி நிறுவன தகவல்கள்

இருப்பு	01.01.2001	31.12.2001
மூலப்பொருள்	26000	20000
குறைவேலை	7000	5000
முடிவுற்றபொருள்	45000	?

உற்பத்தி அலகு ஒன்றிற்கான மொத்தக் கிரயம்	ரூபா 50
உற்பத்தி அலகு ஒன்றிற்கான மூலப்பொருள்	ரூபா 30
இவ்வாண்டு உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள்	6000
இவ்வாண்டு விற்பனை செய்யப்பட்ட அலகுகள்	5000
01.01.2001 இல் ஆரம்ப முடிவுப்பொருள் இருப்பு அலகுகள்	1000
ஓர் அலகு விற்பனை விலை	ரூ 80
தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம்	12000
தொழிற்சாலை வாடகை	25000
தொழிற்சாலை காப்புறுதி	8500
எரிபொருள் மின்வலு	14500
மூலப்பொருள் கொள்வனவு திருப்பம்	7000
மூலப்பொருள் உட்காவுகை	3000

1. உற்பத்திக் கிரயக்கூற்று
2. வியாபாரக் கணக்கினை தயாரிக்க

13. நிறுவனம் ஒன்றின் 31.12.2012 முடிவுற்ற ஆண்டுக்கான தகவல்கள்

இருப்பு 01.01.2012 இல்	6000 அலகுகள்
உற்பத்தி	18000 அலகுகள்
விற்பனை	20000 அலகுகள்

நிறுவனத்தின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான சராசரி உற்பத்தி 4000 அலகுகள்

அலகுக்கான நியமக்கிரயம்

நேர் மூலப்பொருள் ரூ 6 , நேர் கூலி ரூ 15, மாறும் உற்பத்தி மேந்தலை ரூ 5

எதிர்பார்க்கும் அலகு விற்பனைவிலை ரூ 40, விற்பனைத்தரகு விற்பனையில் 5%

நிலையான உற்பத்தி மேந்தலை ரூ 75000 ஆகும்.

1) இருப்புக்களின் மொத்தக் கிரயம் யாது?
2) இருப்புக்களின் நிகர தேறிய பெறுமதி யாது?
3) கணக்குகளில் காட்டப்படும் இருப்பு பெறுமதி யாது?

14. தரிசன உற்பத்தி வியாபாரிகளின் 2006.12.31இல் திரட்டப்பட்ட தகவல்கள்

இருப்பு (2006.01.01)

முடிவுப்பொருள் (களஞ்சியத்தில்)	15000
முடிவுப்பொருள் (தொழிற்சாலை)	15000
மூலப்பொருட்கள்	24000
நடைமுறை வேலை	16000
மூலப்பொருள் கொள்வனவு	200000
நேர் கூலி சாதாரணம்	50000
மேலதிக நேரக்கூலி	10000
நேரில் கூலிகள்	15000
சக்தி வலு	35000
தரக்கட்டுப்பாட்டு செலவு	35000
பொறி பராமரிப்பு செலவு	22000
பொறி தேய்வு	28000
விற்பனை	450000

மேலதிக தவல்கள்

1. 2006 டிசம்பரில் தொழிற்சாலையில் களவாடப்பட்ட பொருட்களின் பெறுமதியை அறியமுடியவில்லை.
2. 2006 ஆண்டுகாலத்தில் 386000 கிரயமான பொருட்கள் மாத்திரம் வியாபாரப்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.
3. இருப்பு (2006.12.31)

முடிவுப்பொருள் (களஞ்சியத்தில்)	18000
முடிவுப்பொருள் (தொழிற்சாலை)	22000
மூலப்பொருட்கள்	15000
நடைமுறை வேலை	8000

வேண்டப்படுவது – உற்பத்திக் கிரயக்கூற்று

15. Fashion Wood Work (Pvt) Ltd இன் 2013.03.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தகவல்கள்

1. 2012.04.01 இருப்புக்கள் (000)

அரிமரம்	130
நடைமுறைவேலை	30
கதிரைகள் (100 கதிரைகள்)	100

2. 2013.03.31 வருடகால நடவடிக்கைகள்

அரிமரம் கொள்வனவு	750000
உட்சுமைக்கூலி	20000
தச்சன் கூலி	100000
மேற்பார்வையாளர் சம்பளம்	28000
இயந்திர தேய்வு	14000
தொழிற்சாலை மின்சாரம்	16000
ஏனைய மேந்தலை செலவுகள்	24000
நிர்வாக ஊழியர் சம்பளம்	26000

3. 2013.03.31 வருடகாலத்தில் 960 கதிரைகள் விற்பனை செய்யப்பட்டன.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

4. கதிரைகள் ஒவ்வொன்றும் உற்பத்திக் கிரயத்தில் 30% இலாபத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.
5. 2013.03.31 காணப்பட்ட கதிரைகளின் இருப்பு நிகழாண்டு உற்பத்தி ஆகும்.

வேண்டப்படுவது.

1. 2013.03.31 இற்கான உற்பத்தி கிரய கணிப்பீடு
2. 2013.03.31 வருடகாலத்தில் உற்பத்தி செய்த கதிரைகளின் எண்ணிக்கை
3. 2013.03.31 இல் உற்பத்திசெய்யப்பட்ட கதிரைஒன்றின் உற்பத்திக்கிரயம்
4. 2013.03.31 வருடகால வருமானக்கூற்று

16. ரஸ்மி கூரைத்தகடுகள் உற்பத்தி நிறுவனத்தின் 31.12.2001 இல் 25000 கூரைத்தகடுகள் தயாரிக்கப்பட்டது. அலகு ஒன்றிற்கான மொத்த உற்பத்திக்கிரயம் ரூ 300, இதில் மூன்றிலொரு பங்கு உற்பத்தி மேந்தலைகளாகும். முதற்கிரயத்தில் 40% நேர் கூலிகள் 60% நேர் பொருள் ஆகும்.

மேலதிக தகவல்கள்

இருப்பு	01.01.2001	31.12.2001
மூலப்பொருள்	450000	550000
குறைவேலை (முதற்கிரயம்)	180000	240000
நேரில்மூலப்பொருள்	50000	75000

நேர்பொருள் கொள்வனவு	3000 0000
நேரில் பொருள் கொள்வனவு	5000 000
நேர்பொருள் மீதான தீர்வை	136000
செலுத்திய நேர் கூலிகள்	2000 000
வாடகை	150000
வலு	450000
சம்பளம்	425000
இயந்திர தேய்வு	650000
தொழிலாளர் காப்புறுதி	25000
மேற்பார்வையாளர் சம்பளங்கள்	175000
உற்பத்தி முகாமையாளர் சம்பளம்	150000

31.12.2001 இற்கான உற்பத்திக் கணக்கை தயாரிக்க

17. caravan Co (Pvt) Ltd., இன் Shirt உற்பத்திக்கான 2007.03.31 இற்கான மீதிகள்

01.04.2006இல் துணி இருப்பு	25500
01.04.2006இல் குறைவேலை	7500
தனியுரிமைக்கட்டணம்	?
துணி கொள்வனவு	105000
மின்சக்தி எரிபொருள்	5500
பொறி தேய்வு	10000
நேர்கூலி	30000
தொழிற்சாலை காவலாளி சம்பளம்	5000
தொழிற்சாலை வாடகை	3500
ஏனைய நேரில் செலவு	2500
மேற்பார்வையாளர் சம்பளம்	10000

31.03.2007இல் துணி இருப்பு 48000
31.03.2007இல் குறைவேலை 10000

- ✓ வாடகையில் 500 ரூபா அட்டுறுவாகும். உற்பத்தி செய்யப்படும்
- ✓ ஒவ்வொரு சேர்ட்டுக்கும் 50 ரூபா தனியுரிமைக்கட்டணம் செலுத்தப்படும்.
- ✓ மொத்த உற்பத்திக் கிரயத்தில் 80% முதற்கிரயமாகும்.

1) 31.03.2007இற்கான உற்பத்திக் கணக்கு
2) Shirt ஒன்றிற்கான உற்பத்திக் கிரயம் யாது?

8.0 இலாப நோக்கற்ற வணிகங்களின் நிதிக்கூற்றுக்கள்

அங்கத்தவரின் நலன்புரியினையும் சமூக முன்னேற்றத்தினையும் நோக்காகக் கொள்ளும் அமைப்புக்கள் இலாப நோக்கற்ற அமைப்புக்கள் எனப்படும்.

உதாரணம் - விளையாட்டுக் கழகங்கள், சமயம் சார்ந்த அமைப்புக்கள்

இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் கணக்கு வைத்தலின் முக்கியத்துவம்

இலாப நோக்கமற்ற அமைப்புக்களானவை இலாப நோக்கத்தை நோக்காகக் கொண்டு செயற்படாவிடினும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டுவதற்காக கொருளாதார நடவடிக்கைகளுக்காக நிதி திரட்டுவதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இதற்காக அதன் உறுப்பினர்களிடமிருந்து அங்கத்துவக் கட்டணத்தைப் பெறுகின்றன. இவ்வாறு பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அதில் அக்கறை கொண்ட அங்கத்தவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் தகவல் வழங்க வேண்டிய தேவைப்பாடு எழுகின்றது. இதனால் இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் கணக்கு வைத்தலானது முக்கியத்துவமாகின்றது.

இலாப நோக்கமற்ற அமைப்பொன்றில் தயாரிக்கப்படும் ஏடுகள்.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமானச் செலவுக் கணக்கு / கூற்று
3. நிதிநிலைமைக் கூற்று
4. அங்கத்தவர் சந்தாக் கணக்கு
5. மேலதிக வருமானம் பெறும் வகையில் ஈடுபடும் போது அதன் பெறுபேறுகளை அறிவதற்காக தயாரிக்கப்படும் வருமானக் கூற்று.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

- இலாப நோக்கமற்ற அமைப்புக்களானவை குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதிக்கான காசுப் பெறுவனவுகளையும், காசுக் கொடுப்பனவுகளையும் அறிந்து கொள்வதற்காக தயாரித்துக் கொள்ளப்படுபவை கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஆகும்.
- கொள்ளல் கொடுத்தல் கணக்கினை காசுக் கணக்கு எனவும் அழைப்பர்.
- கொள்ளல் கொடுத்தல் கணக்கானது காசு மீதியினை அறிந்து கொள்வதற்காக தயார் செய்து கொள்ளப்படுகின்றது.
- இக்கணக்கானது காசு அடிப்படையில் தயார் செய்து கொள்ளப்படுகின்றது.
- இக் கணக்கின் இறுதி விளைவு (காசு/வங்கி மீதி) நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும்.

வருமான செலவுக் கணக்கு / கூற்று

- நிதியாண்டுக்கான வருமானங்கள், செலவினங்களை உள்ளடக்கி தயாரிக்கப்படும் கணக்கறிக்கை
- அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படும்
- வருமான மிகை / வருமான குறையினை கண்டறியவதற்கு தயாரிக்கப்படும்.
- வருமான மிகை / வருமான குறையானது திரண்ட நிதிக்கு மாற்றப்படும்.

திரண்ட நிதி

வருமான மிகை காரணமாக உருவாகும் நிதி திரண்டநிதி ஆகும். வருமான மிகை ஏற்படின் திரண்ட நிதி அதிகரிக்கும் மாற்றாக குறை ஏற்படின் திரண்ட நிதி குறைவடையும்.

திரண்ட நிதியைக் கணிப்பிடும் முறைகள்

<u>முறை – I</u>

திரண்ட நிதி = மொத்த சொத்துக்கள் - மொத்தப் பொறுப்புக்கள்

<u>முறை – II</u>

விபரம்	தொகை
ஆரம்பத் திரண்ட நிதி	XXX
வருமானமிகை / குறை	+ / - XXX
ஆயுள் சந்தா (இறந்தவர்களின் முற்பணம்)	XXX
நன்கொடை (நோக்கம் நிறைவேறிய தொகை)	XXX
இறுதித் திரண்ட நிதி	XXX

நிதி நிலைமைக் கூற்று

குறிப்பிடப்பட்ட இலாப நோக்கமற்ற அமைப்பானது குறிப்பிட்ட நிதியாண்டின் இறுதியில் தமது அமைப்பில் காணப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்களின் திரண்டநிதி என்பவற்றின் பெறுமதியை அறிந்து கொள்வதற்காக தயார் செய்து கொள்ளப்படுவது நிதிநிலைமைக் கூற்று ஆகும்.

பிற வருமானங்களை ஈட்டுவதற்கான புறச் செயற்பாடுகள்

- இலாப நோக்கமற்ற அமைப்புக்கள் தமது அமைப்புக்கான மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்காக ஈடுபட்டுக் கொள்பவை புறச் செயற்பாடுகள் ஆகும்.
- உதாரணம்: கலை விழாக்கள் நடாத்துதல்
  விளையாட்டுப்போட்டி நடாத்துதல்
- இச் செயற்பாட்டினால் எழும் பெறுபேறை வேறுபடுத்தி அறிந்து கொள்ள வருமானக் கூற்று தயாரிக்கப்படும்

அங்கத்தவர் சந்தா

குறிப்பிட்ட இலாப நோக்கமற்ற அமைப்பானது தமது குறிப்பிட்ட நிதியாண்டு காலப் பகுதிக்கான பிரதான வருமானமூலமாக அவ் அமைப்பிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து திரட்டிக் கொள்ளப்படும் பெறுமதி சந்தா ஆகும்.

சந்தா வகைகள் - 1. சாதாரண சந்தா

2. ஆயுட் சந்தா

அங்கத்தவர் சந்தா கணக்கு மாதிரி

விபரம்	தொகை	விபரம்	தொகை
மீதி.கீ.கொ.வ (ஆரம்ப வருமதி)	X X X	மீதி.கீ.கொ.வ (ஆரம்ப முற்பணம்)	X X X
வருமானசெலவு க/கு மாற்றியது	X X X	கொள்ளல் கொடுத்தல்	X X X
		பதிவழித்த சந்தா	X X X
மீதி.கீ.கொ.செ (இறுதி முற்பணம்)	X X X	மீதி.கீ.கொ.செ (இறுதி வருமதி)	X X X
	X X X		**X X X**
மீதி.கீ.கொ.வ (இறுதி வருமதி)	X X X	மீதி.கீ.கொ.வ (இறுதி முற்பணம்)	X X X

பயிற்சி - 01

குறிப்பிட்ட நிதி வருடத்தில் பெறப்பட்ட சந்தா 120000 ரூபா
ஆரம்ப சந்தா வருமதி 6000 ரூபா
ஆரம்ப சந்தா முற்பணம் 32000 ரூபா
இறுதி சந்தா வருமதி 13000 ரூபா
இறுதி சந்தா முற்பணம் 7000 ரூபா இத் தகவலடிப்படையில் வருடாந்த சந்தாவை மதிப்பிடுக.

பயிற்சி - 02

31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
கொள்ளல் கொடுத்தல் கணக்கில் சந்தாப் பெறுவனவு 140000 ரூபா
நிதியாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காணப்பட்ட சந்தா நிலுவை, சந்தா முற்பணம் பின்வருமாறு

	31.03.20196	31.03.2020
சந்தா நிலுவை	7000 ரூபா	2000 ரூபா
சந்தா முற்பணம்	5000 ரூபா	5000 ரூபா

வருட சந்தாவின் பெறுமதியை கணிப்பிடுக.

பயிற்சி - 03

31.03.2020, 31.02.2019 இல் சந்தா நிலுவை, சந்தா முற்பண விபரங்கள் பின்வருமாறு

	31.03.2020	31.03.2019
சந்தா வருமதி	6000 ரூபா	6600 ரூபா
சந்தா முற்பணம்	3500 ரூபா	2700 ரூபா

எனின் வருடத்திற்குரிய சந்தா 200000 ரூபா எனின் காசாகப் பெற்ற சந்தாவைக் கணிப்பிடுக

பயிற்சி - 04

31.03.2017 இல் கொள்ளல் கொடுத்தல் கணக்கு சந்தாப் பெறுவனவு 480000 ரூபா
மேலதிக தகவல்.
1. 01.04.2016 இல் 40 அங்கத்தவர்கள் 05 மாத சந்தாவை செலுத்தத் தவறியிருந்தனர்.

2. 01.04.2016 இல் 30 அங்கத்தவர்கள் 10 மாத சந்தாவை முற்பணமாக செலுத்தியிருந்தனர்.
3. 31.03.2017 இல் 15 அங்கத்தவர்கள் 20 மாத சந்தாவை செலுத்தத் தவறியிருந்தனர்.
4. 31.03.2017 இல் 25 அங்கத்தவர்கள் 15 மாத சந்தாவை முற்பணமாக செலுத்தியிருந்தனர். குறிப்பிட்ட அங்கத்தவர் ஒருவரது மாத சந்தாப்பணம் 500 ரூபா ஆகும். வருட சந்தாத் தொகையை மதிப்பிடுக.

ஆயுட் சந்தா

- குறிப்பிட்ட அமைப்பானது குறிப்பிட்ட நிதியாண்டு காலப்பகுதியில் அங்கத்தவர் அவ் அமைப்பில் அங்கத்தவராக இருக்க விரும்பும் ஆயுட்காலம் வரைக்குமான சந்தாப்பணத்தினை நிதியாண்டு காலப்பகுதியில் மொத்தமாக பெற்றுக் கொள்ளப்படுவது ஆயுட்கால சந்தாவாகும்.
- இங்கு பெறப்பட்டுள்ள ஆயுட்கால சந்தா பணத் தொகையில் வருடத்திற்கென அமைப்பினால் தீர்மானிக்கப்படும் தொகை வருமானமாகக் கருதப்படும் மிகுதி எஞ்சிய தொகையானது நிதிநிலைமைக் கூற்றில் பொறுப்பாகக் காட்டப்படும்.
- ஆயுட் சந்தாவிற்கான கணக்குப் பதிவுகள்

ஆயுட்கால சந்தாப் பணத்தை பெற்றுக் கொள்ளும் போது

கொள்ளல் கொடுத்தல் கணக்கு வரவு
ஆயுட்கால சந்தாக் கணக்கு செலவு

ஆயுட்கால சந்தாவிலிருந்து நிகழாண்டிற்குரிய சந்தாப் பணத்தை எடுத்துக் கொள்ளும் போது

ஆயுட்கால சந்தாக் கணக்கு வரவு
வருமான செலவு கணக்கு செலவு

(ஆயுட் சந்தா கணக்கின் மிகுதி திரண்ட நிதியின் கீழ் காட்டப்படும்)

பயிற்சி - 05

கழகத்தில் ஆயுட்கால சந்தாவிற்குரிய அங்கத்தவர் எண்ணிக்கை 20 பேர்.
ஒரு அங்கத்தவருக்கான ஆயுட்கால சந்தாத் தொகை 4000 ரூபா
ஆயுட்கால சந்தா பதிவளிப்புச் செய்யப்படும் கால எல்லை 10 வருடம்
ஆயுட்கால சந்தா முழுவதும் பெறப்பட்ட காலம் 01.04.2081 ஆகும்.

01. 31.03.2020 இல் முடிவடைந்த காலத்திற்குரிய சந்தாவாக கழிக்கப்படும் தொகை யாது?
02. 31.03.2020 இல் திரண்ட நிதியின் கீழ் பொறுப்பாக பதியப்படும் சந்தாத் தொகை யாது?

நன்கொடைகள்

குறிப்பிட்ட அமைப்பானது பிரதி உபகாரம் எதனையும் எதிர்பாராமல் சமூக நோக்கின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படும் செலுத்திக் கொள்ளப்படும் பெறுமதி தொகை நன்கொடையாகும்.

நன்கொடைகள் பின்வருமாறு இரு வகைப்படுத்தி கணக்கு வைப்புகள் இடம்பெறும்

01. பொது நன்கொடை

- குறிப்பிட்ட அமைப்பின் அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக பெற்றுக் கொள்ளப்படும் தொகை பொது நன்கொடையாகும்.
- முழுத் தொகையும் பெற்றுக் கொண்ட வருடத்தில் வருமானமாகக் காட்டப்படும்
- **நாட்குறிப்புப் பதிவு பின்வருமாறு அமையும்**

கொள்ளல் கொடுத்தல் கணக்கு வரவு
நன்கொடை / வருமானச் செலவு கணக்கு செலவு

02. விஷேட நன்கொடை

குறிப்பிட்ட நிலையான நடவடிக்கை ஒன்றிற்காக கிடைக்கப் பெறும் நன்கொடை விஷேட நன்கொடை எனப்படும். இவை முகாமைத் தீர்மானத்துக்கு அமைய பகுதி பகுதியாக குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு வருமானமாகக் காட்டப்படும். மிகுதித் தொகை (வருமானமாகக் காட்டப்படாதது) திரண்ட நிதியின் கீழ் காட்டப்படும்.
உதாரணம் - மோட்டார் வண்டி நன்கொடை

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நோக்கம் ஒன்றிற்காக பணம் நன்கொடையாகப் பெறப்படின் நோக்கம் நிறைவேறும் வரையில் அத்தொகை பொறுப்பாக திரண்ட நிதியின் கீழ் காட்டப்பட்டு நோக்கம் நிறைவேறியவுடன் திரண்டநிதியுடன் குறிப்பிட்ட தொகை சேர்க்கப்படும்
உதாரணம்-கட்டிடம் அமைப்பதற்கான நன்கொடை, நூல்கள் கொள்வனவுக்கான நன்கொடை

பயிற்சி – வினாப்பத்திரம் - I

01. ஓவியா விளையாட்டுக் கழகத்தில் வருடாந்தம் ரூ 200 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 120 சாதாரண அங்கத்தவாகளும் 10 ஆயுள் அங்கத்தவர்களும் கடந்த ஆண்டில் காணப்பட்டனர். 31.3.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்காக

பெற்ற சந்தா	2018/2019	1200	
	2019/2020	20000	
	2020/2021	1000	22200

- இல் உள்ள ஆயுள்அங்கத்தவர் சந்தா ரூ 14000 முற்பன சந்தா 2000
- ஆயுள் அங்கத்துவ சந்தாஅவர்கள் சேர்ந்த தினத்திலிருந்து 10 வருட சமபரப்பில் பதிவளிக்கப்படும் ஆயுள் அங்கத்தவர்கள் இவர்கள் 1.4.2016 இல் இணைந்து கொண்டவர்கள். 31.3.2020 வருமதிசந்தா 18/19 இற்குரிய ரூ 1000 சந்தாவையும் உள்டக்கியுள்ளது. எனின்

கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

03. 31.3.2020 இல் முவடைந்த நிதியாண்டுக்கான சந்தா தொடர்பான வருமானம் யாது?

_ _

_ _

04. 1.4.2019 வருட ஆரம்பத்திலும் 31.3.2020 வருட இறுதியிலும் வருமதி சந்தா முறையே யாது?

____

____

02.) சாயி விளையாட்டுக்கழகத்தில் வருடாந்தம் ரூ 500 சந்தாக்கட்டனமாக செலுத்தும் ஒருபகுதி அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டில் 90 அங்கத்தவர்கள் சந்தா செலுத்தியிருந்தனர் இவர்களில் 10 பேர் சென்றாண்டுக்குரிய சந்தாவையும் 5 பேர் அடுத்தாண்டுக்குரிய சந்தாவையும் செலுத்தினர். எஞ்சியோர் நடப்பாண்டு சந்தாவையும் செலுத்தினர்.

இக் கழகத்திலுள்ள 18 பேர் 19/20 சந்தாவை சென்றாண்டு செலுத்தினர். மேலும் 7 பேர் 19/20 நிதியாண்டுச் சந்தாவை 31.3.2020 வரை செலுத்தவில்லை எனின்

கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. 2019/20 நிதியாண்டிலுள்ள அங்கத்தவர் எண்ணிக்கை

____

2. 2019/20 நிதியாண்டுக்கான சந்தா வருமானம் யாது?

____

3. 2019/20 நிதியாண்டுக்காக 19/20 பெற்ற சந்தா யாது?

____

03. கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையிலானவேறுபாடுகள் 3 தருக.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு	வருமான செலவுக் கணக்கு
காசு மீதியினைக் கண்டறிந்து கொள்வது நோக்கமாக அமையும்	அமைப்பில் மேலதிகம் அல்லது பற்றாக்குறையை அறிந்து கொள்வது நோக்கமாக அமையும்
காசு அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்	அட்டுறு முறையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்
காசு அல்லாத விடயங்கள் பதியப்பட மாட்டாது. உ.தா : பெறுமானத் தேய்வு	காசு அல்லாத விடயங்களும் பதியப்படும்
மூலதனச் செலவினங்களை உள்ளடக்கும்	மூலதனச் செலவினங்களை உள்ளடக்காது.
ஆரம்ப மீதியுடன் ஆரம்பமாகும்	ஆரம்ப மீதியுடன் ஆரம்பிக்காது.

04. சந்தாக் கணிப்பிடப்படும் முறைகள் எவை?.

____

____

05. Star விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் 1.4.2019 இல் காணப்படும் கணக்குகளின் மீதிகள்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நிகழ்வுகள்	திரண்டநிதி க.கு	கட்டிட நிதி க.கு	கொள்ளல் கொடுத்தல்	கட்டிட கணக்கு
1.4.2019 இல் மீதி	250000	200000	350000	400000
A கட்டிட நிதிக்கு ரூ 150000 பெறப்பட்டது.	------	------	------	- ----
B ரூ 300000 பெறுமதியில் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது.	------	------	------	—-----

மேற்படி நிகழ்வுகள் கணக்குகளின் மீதிகளில் ஏற்படும் தாக்கத்தை பொருத்தமான வெற்றிடத்தில் நிரப்புக

07. சூர்யா விளையாட்டுக் கழகத்தின் சந்தா தொடர்பான விபரங்கள்
இதனைக் கொண்டு **1ம், 2ம் வினாக்களுக்கு விடை தருக**.

1.1.2011 இல் சந்தா வருமதி ரூ 5000 , முற்பணம் ரூ 3000

காசாகப் பெற்ற சந்தா	2010இற்கு	ரூ 3000
	2011இற்கு	ரூ 64000
	2012இற்கு	ரூ 6000

2011இற்காக மட்டும் பெறவேண்டிய சந்தா ரூ 12000

1. 2011இலவருமான செலவுக்கணக்கிற்கு மாற்ற வேண்டிய சந்தா எவ்வளவு?
   1. ரூ 77000 2. ரூ 81000 3. 78000
   4. ரூ 79000 5. ரூ 72000

2. 31.12.2011இல் வருமதி சந்தா மீதி
   1. ரூ 6000 2. ரூ 12000 3. 17000
   4. ரூ 14000 5. ரூ 15000

08. சக்தி கழகத்தின் 2012ம் வருட விபரங்கள்

காசாகப் பெற்ற சந்தா	2011இற்கு	ரூ 4000
	2012இற்கு	ரூ 60000
	2013இற்கு	ரூ 8000

டிசம்பர் 31இல்		**2011**	**2012**
நிலுவைகள்	2011இற்கு	6000	-------
	2012இற்கு	--------	9000
முற்பணம்		5000	

2012.1.1இல் நிலுவை சந்தாப்பணத்தில் ரூ 1000 அறவிட முடியாது எனக் கருதப்பட்டதுடன் அதனை பதிவளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

1. 2012இல் வருமானச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய சந்தா
   1. ரூ 73000 2. ரூ 74000 3. 88000
   4. ரூ 82000 5. ரூ 81000

2. 31.122012இல் வருமதி சந்தா
   1. ரூ 10000 2. ரூ 8000 3. 14000
   4. ரூ 5000 5. ரூ 11000

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பயிற்சி – வினாப்பத்திரம் - II

01. ''பிரைட்'' நிறுவனத்தின் ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்

1. அங்கத்தவர் ஒருவருக்கான வருட சந்தா ரூ 500, நிறுவனத்தில் 100 அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். மேலதிக நிதித் தேவைக்காக உணவுச்சாலை ஒன்றை நடத்தி வருகின்றது.
2. 2014.12.31 முடிவடைந்த வருட பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

விபரம்	ரூபா'000'	விபரம்	ரூபா'000'
1.1.2014 மீதி	75	அலுவலக உபகரணம்	80
உணவு விற்பனை	160	விளையாட்டு உபகரணம்	90
நன்கொடைகள்	30	உணவுசா.ஊழியர் சம்பளம்	15
சந்தா	60	உணவு கொள்வனவு	40
விளையாட்டு விழா	20	உணவுசா.ஏனைய செலவு	20
		விளையாட்டு விழா செலவு	22
		நலன்புரி செலவுகள்	18
		31.12.2014 மீதி	60
	345		**345**

3. 31.12.2014 அங்கத்துவ கட்டண நிலுவை

வருடம்	அங்கத்தவர் எண்ணிக்கை
2013ம் ஆண்டுக்காக	5
2012, 2013ம் ஆண்டுக்காக	3
2011, 2012, 2013ம் ஆண்டுக்காக	2

4. 2014ம் ஆண்டு பெற்ற அங்கத்துவ கட்டண விபரம்

வருடம்	அங்கத்தவர் எண்ணிக்கை
2013ம் ஆண்டுக்காக	5
2014ம் ஆண்டுக்காக	96
2012, 2013ம் ஆண்டுக்காக	3
2015ம் ஆண்டுக்காக	13

5. அங்கத்தவர் ஒருவர் தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கு மேலாக கட்டணம் செலுத்தவில்லையாயின் நான்காவது வருடத்தில் அங்கத்துவம் நீக்கப்படுவதுடன் அவை பதிவழிக்கப்படும்.
6. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்

	1.1.2014மீதி	31.12.2014மீதி
உணவு இருப்பு	30	10
விளையாட்டுஉபகரணம் (தேறியது)	110	190
அலுவலக உபகரணம் (தேறியது)	160	225

2014ம் ஆண்டுக்கான பின்வரும் கணக்குகளைத் தயாரிக்க

1. சந்தாக் கணக்கு
2. வருமான செலவுக் கணக்கு
3. உணவுச்சாலையின் வருமானக் கூற்று
4. நிதி நிலமைக் கூற்று

பகுதிப்பாடசாலை கல்வித் திணைக்களம்

02. தியாகி விளையாட்டுக் கழகத்தில் ஏடுகளில் 1.4.2019 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று

நடைமுறையல்லாச் சொத்து		
ஆதனம்பொறி உபகரணம் (மு.கொ.பெ)		300000
நிலையான வைப்பு		200000
		500000
நடைமுறைச்சொத்து		
எழுதுபொருள் இருப்பு	3000	
வருமதி சந்தா	12000	
காசு	190000	205000
		705000
உரிமையாண்மை		
திரண்ட நிதி	400000	
கட்டிட நிதி	200000	
ஆயுள் அங்கத்தவ சந்தா	100000	700000
நடைமுறைப் பொறுப்பு		
முற்பண சந்தா	2000	
சென்மதி மின்சாரம்	3000	5000
		705000

மேலதிக தகவல்கள்

1) 1.4.2019 இல் ரூ 100000 பெறுமதியான விளையாட்டு உபகரணம் நன்கொடையாக பெறப்பட்டது இது ஐந்து ஆண்டுக்குரிய வருமானமாக பகிர்ந்தளிக்கப்படும்.
2) ஆதனம்பொறி உபகரணங்களுக்கு 20% தேய்விடுக.
3) சென்றாண்டு கட்டிட நிதிக்காக பெறப்பட்ட காசானது ரூ 200000 இது 31.3.2019 இல் ஒரு வருட10% நிலையான வைப்பிலிடப்பட்டது.
4) ஆயுள் அங்கத்தவ சந்தா சேர்த்துகொள்ளப்பட்ட தினத்திலிருந்து 25 வருடங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். ஆயுள் அங்கத்தவர்கள் 1.4.2014 சேர்ந்தனர்.
5) ஆண்டு ஒன்றிற்கு ரூ 1000 சந்தாக் கட்டணமாக செலுத்தும் 100 சாதாரண அங்கத்தவர்கள் சென்றாண்டு இறுதிவரை காணப்படுகின்றனர்.
6) 1.4.2020 இல் மேலும் 20 அங்கத்தவர்கள் புதிதாக இணைந்தனர் இவர்கள் அனுமதிக்கட்டனமாக ஒரு அங்கத்தவர் ரூ 2000 செலுத்தவேண்டும் இவை முழுவதும் இவ்வாண்டு வருமானமாக கருதப்படும்.
7) 31.3.2020 முடிவடைந்த ஆண்டுக்கு காசுப் பெறுவனவுகள்

பெற்ற சந்தா	?
விளையாட்டுப்போட்டி வருமானம்	ரூ 15000
அனுமதிக்கட்டணம்	ரூ 32000
முதிர்ச்சியின்போது நிலையான வைப்பு வட்டியுடன்	?

8) காசுக் கொடுப்பனவுகள்

விளையாட்டுப்போட்டிச் செலவு	ரூ 12000
எழுதுபொருள்	ரூ 6000
மின்சாரம்	ரூ 8000
கட்டிடச் செலவு	ரூ 180000

9) நிலையான வைப்பு முதிர்ச்சியின்போது 31.3.2020 பெறப்பட்ட பணத்தை பயன்படுத்தி கட்டிட பணிகள் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டது.
10) இக் கழகத்திலுள்ள 10 அங்கத்தவர் தமது 20/21 நிதியாண்டுக்குரிய சந்தாவை இவ்வாண்டு செலுத்தியிருந்ததுடன். மேலும் 5 அங்கத்தவர்கள் இவ்வாண்டுச் சந்தாவை செலுத்தாதிருந்ததுடன்
சென்றாண்டு சந்தா செலுத்தாத அங்கத்தவர் அனைவரும் இவ்வாண்டில் தமது சந்தாவை செலுத்திருந்தனர்.
11) 31.3.2020 இல் சென்மதி மின்சாரம் ரூ 2000 பயன்படுத்தாத எழுதுபொருள் ரூ 1000

வேண்டப்படுவது
1) வருமான செலவுக் கணக்கு
2) கொள்ளல் கொடுத்தல் கணக்கு
3) 31.3.2020 திரண்ட நிதி
4) 31.3.2020 ஆயுள் அங்கத்தவ நிதி
5) சந்தா கணக்கு
6) 31.3.2020 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று

9.0 நிறைவில் பதிவுகள்

கொடுக்கல் வாங்கல் ஒன்றின் இருவிளைவுகளில், ஒரு விளைவை மாத்திரம் முறையற்ற பதிவேடுகளில் ஒரு தடவை மாத்திரம் பதிவு செய்தல் என நிறைவில் பதிவினை சுருக்கமாக அறிமுகம் செய்யலாம்.

நிறுவனங்கள் நிறைவில் பதிவு முறையினை பின்பற்றுவதற்கான காரணங்கள்

01. முறையான கணக்குப் பதிவினால் ஏற்படும் ஆளனி ஊதியம், ஏட்டு செலவுகளைக் குறைப்பதற்கு
02. சிறிய நிறுவனங்களுக்கு அக்கறை செலுத்தும் தரப்பினர் குறைந்தளவே காணப்படுவதனால் முறையான கணக்குபதிவு பற்றி அக்கறை காட்டுவதில்லை.
03. முறையான கணக்குப் பதிவு பற்றி சில நிறுவன அமைப்புகளுக்கு சட்டத்தினால் வலியுறுத்தப்படவில்லை.
04. தொழில் முயற்சியாளர்களுக்கு இரட்டைப்பதிவு, கணக்கீட்டு நடைமுறைகள், விதிகள் பற்றிய அறிவின்மை
05. முறையான கணக்குப் பதிவுகளுக்கு அதிக நேர விரயம் ஏற்படல்

நிறைவில் பதிவு முறையில் பிரதிகூலங்கள்

1) செயற்பாட்டுப் பெறுபேற்றினை சரியாக அறிந்து கொள்ள முடியாமை
2) நிதி நிலைமை தொடர்பாக சரியான விளக்கத்தினைப் பெற முடியாமை
3) தீர்மானம் எடுக்கத் தேவையான தகவலைப் பெற முடியாமை

நிறைவில் பதிவுகளை இரட்டைப் பதிவு முறைக்கு மாற்றுதல்

நிறைவில் பதிவுகளை இரட்டைப் பதிவு முறைக்கு மாற்றும் போது பின்வரும் கணக்குகளையும் ஏடுகளையும் தயார் செய்து அதனூடாக நிதிக்கூற்றுக்களுக்குத் தேவையான பின்வரும் தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

1. ஆரம்ப நிதி நிலைமைக்கூற்று	- ஆரம்ப மூலதனத்தைக் கணிப்பிடல்
2. காசுக் கட்டுப்பாட்டுக்கணக்கு	- காசு மீதி
	- காசு விற்பனைகள்
	- கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு
	- காசுக் கொள்வனவுகள்
	- கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு
	- பதிவு செய்யப்படாமல் தவறவிடப்பட்ட வருமானம் அல்லது செலவு
	- காசு மோசடித் தொகை.
3. சொத்து அசைவுக்கூற்று	- பெறுமானத் தேய்வுக் கணிப்பீடு
4. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு	- கடன் விற்பனைகள்
	- கடன்பட்டோர் செலுத்திய காசு
	- கடன்பட்டோரின் ஆரம்ப/ இறுதி மீதி
5. கடன்கொடுத்தோர் கட்டுப். கணக்கு	- கடன்கொள்வனவுகள்
	- கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு
	- கடன்கொடுத்தோரின் ஆரம்ப/ இறுதி மீதி
6. இலாபம் அல்லது நட்டக்கூற்று	- வியாபாரக்கூற்று
	- ஆரம்ப/ இறுதி இருப்புக்கள்
	- கொள்வனவுகள்/ விற்பனைகள்/ விற்பனைக் கிரயம்
	- இலாப நட்டக்கூற்று
	- மொத்த இலாபம் / மொத்த நட்டம்
7. நிதி நிலைமைக்கூற்று	- சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை

ஆகியவற்றினை

வகைப்படுத்தி நிதி நிலைமையை வெளிப்படுத்துதல்

பயிற்சி – வினாப்பத்திரம் - II

(01) சரன் என்பவரின் வணிகப்புத்தகங்களிலிருந்து 2012.03.31இல் கிடைக்கப்பெற்ற தகவல்கள்

i.

விபரம்	01.04.2011(000)	31.03.2012(000)
கட்டிடம்(கிரயம்)	800	800
வாகனம் ((முன்கொண்டுவந்த பெறுமதி)	600	575
அலுவலக உபகரணம் (கிரயம்)	300	350
கட்டிட தேய்வு ஏற்பாடு	160	200
அலுவலக உபகரண தேய்வு ஏற்பாடு	60	80
காசு	35	10
முற்பண விளம்பரம்	01	02
கடன்கொடுநர்	50	165
அட்டுறு வாடகை	02	03

ii. 2012.03.31இல் முடிவடைந்த வருட வங்கிக்கணக்கின் சுருக்கம்

விபரம்	தொகை (000)	விபரம்	தொகை (000)
01.04.2011 மீதி	100	கடன்கொடுநர்	680
வைப்புக்கள்	1000	சம்பளம்	35

		தொலைபேசி	15
		வங்கிக்கட்டணம்	8
		2011.04.01 உபகரணம்	50
		காசோலை புத்த.கட்டணம்	1
		2012.03.31 மிதி	311
	1100		**1100**

iii. நிறுவனம் பண்டங்களை கடனுக்கு விற்பனை செய்கின்றது. இதன்படி 2011.03.31இல் முடிவடைந்த காலத்தில் கடன் விற்பனை மீது கிடைக்கப்பெற்ற ரூ 60000 நிகழ்காலத்தில் கிடைக்கப்பெற்றதுடன் 2012.03.31இல் விற்பனை தொடர்பில் ரூ 75000 தீர்க்கப்படாது எஞ்சியுள்ளது.

iv. கிடைக்கப்பெற்ற காசு முழுவதும் கடன்பட்டோரிடமிருந்து பெற்றவையாகும். இக்காசுத் தொகையில் வாடகைக்கு ரூ 15000, மின்கட்டணத்திற்கு ரூ 5000, விளம்பரத்திற்கு ரூ 10000 மும் செலுத்தப்பட்டு மிகுதி வங்கியிலிடப்பட்டது.

v. 2012.03.31 இல் காணப்பட்ட கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்க.

vi. காசுக்கணக்கின் குறைவு உரிமையாளர் பற்றாகக் கருதவும்.

vii. 2012.03.31 இல் காணப்பட்ட இருப்பு கிரயத்தில் 100000 ஆகும். ஆனால் 2011.03.31 இருப்பு தொடர்பாக பதிவு ஏதும் நிறுவனத்தில் இல்லை.

viii. விற்பனைகள் யாவும் கிரயத்தில் 25% இலாபம் வைக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது.

1. 2011.04.01இல் காணப்பட்ட மூலதனத்தின் பெறுமதி
2. 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
3. 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலைமைக் கூற்று

(02) நிரோஜன் வியாபாரிகள் முறையான கணக்குப்புத்தகங்களைப் பேணவில்லை இவரின் வணிகத்திலிருந்து பெற்ற தகவல்கள்.

2012.03.31 நிதி நிலைமைக்கூற்று

விபரம்	தொகை (000)	தொகை (000)
NCA		
மோட்டார் கீழ்கொணர்ந்த பெறுமதி		300
அலுவலகஉபகரணம் கீழ்கொணர்ந்த பெறுமதி		125
CA		**425**
இருப்புகள்	50	
கடன்படுநர்	100	
காசு	75	225
		650
உரிமை		450
NCL 10% வங்கிக்கடன்		150
CL கடன் கொடுநர்		50
		650

1. நடைமுறையல்லா சொத்துக்களுக்குகீழ்கொணரும்பெறுமதியில்10% தேய்விடுக.
2. 2013.03.31இல்முடிவடைந்தகாலப்பகுதிக்கான காசுப்பெறுவனவு,கொடுப்பனவுகள்

	(ஆயிரம் ரூபாய்களில்)
கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு	500
கடன்கொடுநருக்கு செலுத்தியது	200
சம்பளம்	20
வங்கிக்கடன் தவணைப்பணம் வட்டி உள்ளடங்கலாக	45
தொலைபேசி	10
வாடகை	12
மின்சாரம்	8
மோட்டார் விற்பனை	300
மோட்டார் கொள்வனவு	400

3. எல்லா கொள்வனவு, விற்பனைகளும் கடனுக்கு மேற்கொள்ளப்பட்டது.
4. 2013.03.31இல் வாகனம் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டதுடன் அதே திகதியில் புதிய வாகனம் வாங்கப்பட்டது.
5. 2013.03.31 மீதிகள் (ஆயிரம் ரூபாய்களில்)

கடன்படுநர்	70
கடன்கொடுநர்	60
வியாபர இருப்புக்கள்	45
சென்மதி சம்பளம்	4
முற்பண மின்சாரம்	2

6. 2013.03.31இல் காணப்படும் கடன்படுநருக்கு 10% ஐயக்கடன் ஒதுக்குக.

வேண்டப்படுவது.

1. 2013.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
2. 2013.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிநிலைமைக் கூற்று

10.0 பங்குடமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்கள்

இலாபம் பெறும் நோக்கில் வணிகமொன்றை நடத்திச்செல்லும் தனிநபர்களுக்கிடையிலான உறவு முறை. பங்குடமை எனப்படும். (1890ம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டம்)

பங்குடமை வணிகம் ஒன்றில் காணப்படக்கூடிய பிரதான விடயங்கள்

- இலாபம் பெறும் நோக்கம்
- தனிநபர்கள்
- வணிக முயற்சியொன்று
- பொது இணக்கப்பாடு

பங்குடமை வணிகம் தொடர்பில் பொருந்தக்கூடிய சட்டங்கள்

01. 1890ம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டம்
02. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 519ம் பிரிவு (உச்சபங்காளர் 20)

03. 1840ம் ஆண்டு 7ம் இலக்க மோசடி தவிர்ப்பு கட்டளைச் சட்டம்

04. 1918ம் ஆண்டு 6ம் இலக்க வணிகப் பெயர்ப் பதிவு கட்டளைச் சட்டம்

பங்குடமை ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடக்கப்படக்கூடிய நிபந்தனைகள்	**(1890) பங்குடமை கட்டளைச் சட்டம் 24ம் பிரிவின் படி**
மூலதனப் பங்களிப்பு	சமனாக இடுதல்
இலாப நட்டப் பகிர்வு	சமனாகப் பகிர்தல்
பங்காளர்களின் முகாமைப் பங்களிப்பு	சகலரும் ஈடுபடலாம்
பங்காளர் சம்பளம்	வழங்கப்படாது
மூலதன வட்டி	இல்லை
மேலதிக கடன் வட்டி	ஆண்டுக்கு 5%
நன்மதிப்பு பதிவு முறை	--

வினா – விடை

P,Q,R பங்குடமையின் ஒப்பந்தம் வருமாறு

1. இலாப நட்ட விகிதம் 5:3:2
2. நிலையான மூலதனத்திற்கு ஆண்டு வட்டி 10%
3. P,Q,R மாதச் சம்பளம் முறையே ரூபா 2000 , 1500, 1000
4. Qக்கு உடமையான கட்டிடம் பங்குடமைக்கு பயன்படுவதனால் மாதம் ரூ1000 வாடகை வழங்கப்படும்.

31.12.2012இல் பங்குடமையின் பரீட்சைமீதி

விபரம்	வரவு	செலவு
இயந்திரம் (கொள்விலை)	250000	
மோட்டார் (கொள்விலை)	150000	
தளபாடம் (கொள்விலை)	50000	
தேய்வு ஏற்பாடு இயந்திரம்		40000
மோட்டார்		20000
தளபாடம்		10000
கொள்வனவும் விற்பனையும்	300000	495000
கடன்படுநர் , கடன்கொடுநர்.	70000	60000
கடன் R		80000
வாடகை Q	5000	
கடன் வட்டி R	4000	
சம்பளம்	33000	
வரியும் மின்சாரமும்.	5000	
விளம்பரம்	25000	
அ.மு.கடன்	4000	
01.01.2012 இருப்பு	40000	
மூலதனம் P		150000

	Q		100000
	R		100000
மூலதன வட்டி		17500	
நடைமுறை கணக்கு	P		20000
	Q		10000
	R	5000	
பற்றுக்கள்	P	15000	
	Q	10000	
	R	10000	
வங்கிமீதி		91500	
		1085000	**1085000**

மேலதிக தகவல்கள்

01. 31.12.2012இல் கையிருப்பு கிரயம் ரூ 60000 இதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ 53000
02. பங்காளர்களின் பொருள் பற்றுக்கள் P,Q,R முறையே ரூபா 5000,4000,3000 சீராக்கப்படவில்லை
03. பங்காளர்கள் இவ்வாண்டுக்கான 6 மாத மூலதனவட்டியை காசாக எடுத்திருந்தனர்
04. அ.மு கடனாக ரூபா 5000 ஏற்பட்டதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டினை 10% ஆக சீராக்குக.
05. இக்காலத்தில் தீர்க்கப்படாத காப்புறுதி ரூ 3000, மின்சாரம் ரூ 2000 ஆகும்.
06. 01.07.2012இல் P 20000 கிரயமான தளபாடத்தை ரூ 15000 இற்கு எடுத்திருந்தார். இவை 01.04.2008 இல் கொள்வனவு செய்யப்படவை ஆகும். இதற்கான சீராக்கம் மேற்கொள்ளக.
07. விற்பனைப் பண்டங்களுக்கான கூலி ரூ1000 P இனால் சொந்த வங்கிக் கணக்கு ஊடாக செலுத்தப்பட்டமை பதிவு செய்யப்படவில்லை.
08. பங்காளர்கள் அனைவரும் தமது காலாண்டு சம்பளத்தினை பற்றியிருந்தனர் இது சம்பளக் கணக்கில் உள்ளடங்கியுள்ளது.
09. நிலையான சொத்துக்களுக்கு கிரயத்தில் 10% தேய்விடுக.

வேண்டப்படுவது.

1. 31.12.2012 இல் முடிவுற்ற வருட வருமானக் கூற்று
2. பகிர்வுக் கணக்கு
3. பங்களார் நடைமுறைக் கணக்கு
4. 31.12.2012 இல் முடிவுற்ற வருட நிதிநிலைமைக் கூற்று

PQR பங்குடமையின் 31.12.20212இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று

விபரம்	தொகை	தொகை	தொகை
விற்பனை			495000
(-)விற்பனைக் கிரயம்			
ஆரம்ப இருப்பு		40000	
கொள்வனவு - 12000		288000	
		328000	
இறுதி இருப்பு		(60000)	(268000)

மொத்த இலாபம்			227000
ஏனைய வருமானம்			
தளபாட அகற்றல் இலாபம்			3500
			230500
விற்.விநி.கிரயம்			
அ.மு.க + 5000	9000		
ஐ.கடன் குறை	6500		
விற்பனை கூலி	1000		
மோட்.தேய்வு	15000		
விளம்பரம்	25000	56500	
நிலைய நிரவாகக் கிரயம்			
வாடகை - Q	12000		
காப்புறுதி + 3000	3000		
மின்சாரம் + 2000	7000		
தளபாட தேய்வு	4000		
சம்பளம் - 13500	19500		
இயந்திர தேய்வு	25000	70500	
ஏனைய கிரயம்			
இருப்பு நட்டம்		7000	
நிதிக்கிரயம்			
கடன் வட்டி - R		4000	(138000)
தேறிய இலாபம்			**92500**

பகிர்வுக் கூற்று

விபரம்		தொகை	தொகை	தொகை
தேறிய இலாபம்				92500
பங்காளர் சம்பளம்	P	24000		
	Q	18000		
	R	12000	54000	
மூலதன வட்டி	P	15000		
	Q	10000		
	R	10000	35000	
இறுதிஇலாபப்பகிர்வு	P 5	**1750**		
	Q 3	**1050**		
	R 2	**700**	3500	(92500)

பங்காளர் நடைமுறைக் கணக்கு

விபரம்	P	Q	R	விபரம்	P	Q	R
மீதி			5000	மீதி	20000	10000	
பற்று	15000	10000	10000	பங்.சம்பளம்	24000	18000	12000
மூலதன வட்டி	7500	5000	5000	மூலதன வட்டி	15000	10000	10000
பொருள்பற்று	5000	4000	3000	இலாப பகிர்வு	1750	1050	700
தளபாடம்	15000			விற்பனை கூலி	1000		
சம்பளம்	6000	4500	3000	வாடகை		12000	
வாடகை		5000					

மீ.கீ.கொ.செ	13250	22550		மீ.கீ.கொ.செ			3300
	61750	**51050**	**26000**		**61750**	**51050**	**26000**
மீ.கீ.கொ.வ			**3300**	மீ.கீ.கொ.வ	**13250**	**22550**	

PQR பங்குடமையின் 31.12.20212இல் முடிவுற்ற ஆண்டுக்கான உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று

விபரம்	தொகை	தொகை	தொகை
N.C.A	கிரயம்	தி.தேய்வு	தேறியது
இயந்திரம்	250000	65000	185000
மோட்டார்	150000	35000	115000
தளபாடம்	30000	5500	24500
	430000	**105500**	**324500**
C.A			
இருப்பு		53000	
வியாபார வருமதியாளர் - 5000	65000		
10 மூ ஐ.க.ஏற்பாடு	(6500)	58500	
காசு		91500	203000
			527500
மூலதனம் P		150000	
Q		100000	
R		100000	350000
ந.மு.க/கு P		13250	
Q		22550	
R		(3300)	32500
N.C.L			
கடன் - R			80000
C.L			
வியாபர சென்மதியாளர்		60000	
ஏனைய கொடுக்குமதிகள்			
மின்சாரம்		2000	
காப்புறுதி		3000	65000
			527500

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பயிற்சி – வினாப்பத்திரம் - II

பயிற்சி - 01

ஜனா, ரதி, ராஜ் பங்குடமையின் ஒப்பந்த விபரம்

1. நிலையான மூலதன வட்டி 8%
2. மாதாந்த சம்பளம் முறையே 2000, 1500, 1000
3. ஜனாவின் கட்டிடத்தை பங்குடமை பயன்படுத்துவதனால் அதன் மாதாந்தவாடகை ரூ600
4. இலாப நட்டம் முறையே 2:2:1

31.03.2014இல் பங்குடமையின் பரீட்சை மீதி வியாபாரக் கணக்கு தயாரிக்கப்பட்ட பின்பு

விபரம்	வரவு	செலவு
மூலதனக் கணக்கு ஜனா		600000
ரதி		500000
ராஜ்		400000
நடப்புக் கணக்கு ஜனா		12000
ரதி		8000
ராஜ்		10000
பற்றுக் கணக்கு ஜனா	10000	
ரதி	8000	
ராஜ்	6000	
வாடகை (ஜனா)	5000	
மோட்டார் (கொள்விலை 760000)	620000	
பொறி (கொள்விலை 640000)	590000	
கடன்படுநர்	60000	
கடன்கொடுநர்		30000
5% கடன் ரதி		50000
சம்பளங்கள்	54000	
காப்புறுதி	6000	
மின்சாரம்	10000	
அ.மு.கடன்	7000	
விநியோகக் கிரயம்	4000	
பெற்ற கழிவு		6000
சில்லறை வருமானம்		8000
10% முதலீடு	100000	
மொத்த இலாபம்		360000
வங்கி	464000	
31.03.2014 இருப்பு	40000	
	1984000	**1984000**

மேலதிக தகவல்கள்

1 ஏடுகளில் சீராக்கப்படாத பங்காளார்களின் பொருள் பற்றுக்கள் கொள்விலையில் ஜனா, ரதி, ராஜ் முறையே 4000, 3000, 2500

2 காப்புறுதியில் ரதியின் ஆயுட் காப்புறுதி ரூ 2000 உள்ளடங்கும்.

3 பங்குடமைக்காக ரவி செய்த விளம்பரச் செலவு ரூ 3000 ஏடுகளில் பதியப்படவில்லை

4 01.10.2009இல் ரூ 50000 இற்கு வாங்கப்பட்ட மோட்டார் 01.10.2013இல் ரூ 35000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் போது பெற்ற காசு காசுக்கணக்கு வரவிலும் மோட்டார் வாகனக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டது.

5 அ.மு.கடன் மேலும் ரூ 2000 ஏற்பட்டதுடன் எஞ்சிய கடன்பட்டவருக்கு 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்க.

6 பங்காளர்களின் 6 மாத சம்பளம் காசோலையாக செலுத்தப்பட்டமை சம்பளக் கணக்கில் உள்ளடங்கியுள்ளது.

7 நிலையான சொத்துக்களுக்கு கிரயத்தில் 5% தேய்விடுக.

வேண்டப்படுவது.

1. 31.03.2014இல் முடிவுற்ற வருட வருமானக் கூற்று
2. பகிர்வுக் கணக்கு
3. பங்களார் நடைமுறைக் கணக்கு
4. 31.03.2014 இல் முடிவுற்ற வருட நிதிநிலைமைக் கூற்று

பங்குடமையின் 31.03.2014இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக்கூற்று

விபரம்	தொகை	தொகை	தொகை
விற்பனை			
(-)விற்பனைக் கிரயம்			
ஆரம்ப இருப்பு			
கொள்வனவு			
இறுதி இருப்பு			
மொத்த இலாபம்			
ஏனைய வருமானம்			
விற்.விநி.கிரயம்			
நிலைய நிரவாகக் கிரயம்			
ஏனைய கிரயம்			
நிதிக்கிரயம்			
கடன் வட்டி			
தேறிய இலாபம்			

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பகிர்வுக் கூற்று

விபரம்		தொகை	தொகை	தொகை
தேறிய இலாபம்				
பங்காளர் சம்பளம்	ஜனா			
	ரதி			
	ராஜ்			
மூலதன வட்டி	ஜனா			
	ரதி			
	ராஜ்			
இறுதிஇலாபப்பகிர்வு	ஜனா			
	ரதி			
	ராஜ்			

பங்காளர் நடைமுறைக் கணக்கு

விபரம்	ஜனா	ரதி	ராஜ்	விபரம்	ஜனா	ரதி	ராஜ்
மீதி				மீதி			
பற்று				பங்.சம்பளம்			
ஆயுட்காப்புறுதி				மூலதன வட்டி			
பொருள்பற்று				இலாப பகிர்வு			
மீ.கீ.கொ.செ				கடன் வட்டி			
				வாடகை			

பங்குடமையின் 31.03.2014இல் முடிவுற்ற ஆண்டுக்கான உள்ளபடியான நிதி நிலமைக் கூற்று

விபரம்	தொகை	தொகை	தொகை
N.C.A	கிரயம்	தி.தேய்வு	தேறியது
C.A			

மூலதனம்	ஜனா			
	ரதி			
	ராஜ்			
ந.மு.க/கு	ஜனா			
	ரதி			
	ராஜ்			
N.C.L				
C.L				

பங்காளர் ஒருவரினை பங்குடமையில் புதிதாக அனுமதித்தல்

பங்குடமை ஒன்றில் ஏற்கனவேயுள்ள பங்காளர்களின் பூரண சம்மதத்துடன் புதிய பங்காளர் ஒருவரினை அனுமதிப்பதனை இது குறிக்கின்றது.

உயர்தரப்பாடத்திட்டமானது பங்காளர் ஒருவர் நிதியாண்டில் பின்வரும் தினங்களில் அனுமதிக்கப்படுவார்.

1. நிதியாண்டின் ஆரம்பத்தினம் **2. நிதியாண்டின் இறுதித்தினம்**

பங்காளர் ஒருவர் புதிதாக அனுமதிக்கப்படும் போது பங்காளரது உரிமையினை நியாயமான முறையில் பதிவு செய்வதற்காக செம்மையாக்கங்கள் செய்யப்படுகின்றது. பங்காளர் ஒருவர் அனுமதிக்கப்படும் போது இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களும் அதற்கான இரட்டைப்பதிவும் பின்வருமாறு.

அனுமதிக்கப்படும் புதிய பங்காளர் அறிமுகம் செய்யும் மூலதனப் பங்களிப்பினை பதிவு செய்தல்

காசினைக் கொண்டு வரும் போது

காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு
புதிய பங்காளர் மூலதனக்கணக்குச் செலவு

காசு தவிர்ந்த ஏனைய சொத்துக்களை மூலதனமாகக் கொண்டு வரும் போது

உரிய சொத்துக்கணக்கு வரவு
புதிய பங்காளர் மூலதனக்கணக்குச் செலவு

பங்காளர் அனுமதிக்கப்படும் போது நன்மதிப்பினைச் சீராக்கம் செய்தல்

இது பின்வருமாறு இரண்டு மாற்றுமுறையின் ஊடாக பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக சீராக்கம் செய்யப்படும்

Method - I

நன்மதிப்பின் முழுப்பெறுமானத்தினையும் பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக பதிவு செய்வதன் ஊடாக சீராக்கம் செய்தல் இச்சந்தர்ப்பத்தில் நன்மதிப்பின் முழுப்பெறுமானமும் பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக பதிவு செய்யப்பட்டு மீண்டும் பதிவழிப்புச் செய்யப்படும்.

நன்மதிப்பு பதிவு செய்யப்படும் போது (நன்மதிப்பு கணக்கு உருவாக்கம்)

நன்மதிப்புக்கணக்கு வரவு
பழைய பங்காளர் மூலதனக்கணக்குச் செலவு
(பழைய இலாப நட்ட வீதம்)

நன்மதிப்பு பதிவழிக்கப்படும் போது

தொடர்ந்திருக்கும் பங்காளர் மூலதனக்கணக்கு வரவு
நன்மதிப்புக்கணக்கு செலவு
(புதிய இலாப நட்ட வீதம்)

Method - II

நன்மதிப்புக்கணக்கினை ஏடுகளில் பதிவு செய்யாது பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக செம்மையாக்கம் செய்தல்.

இச்சந்தர்ப்பத்தில் நன்மதிப்பு ஏடுகளில் பதிவு செய்யப்படாது அனுமதிக்கப்பட்ட பங்காளரின் நன்மதிப்பு பங்கு இழக்கப்பட்ட பங்காளரின் மூலதனக்கணக்கில் செலவில் எழுதிக்காட்டப்படும்.

அனுமதிக்கப்பட்ட பங்காளர் மூலதனக்கணக்கு வரவு
இழக்கப்பட்ட பங்காளர் மூலதனக்கணக்கு செலவு

வினா விடைகள் - இலகு செய்கை வழிகளுடன்

உதாரணம் :- 01

AB என்போர் 3:2 எனும் அடிப்படையில் இலாப நட்டங்களைப் பங்கிடும் பங்குடமையின் பங்காளர்கள். இவர்கள் இப்பங்குடமையில் C என்பவரினை ஒரு புதிய பங்காளராக அனுமதித்தனர். அன்றைய தினம் ABC முறையே இலாப நட்டங்களை 5:3:2 என பங்கீடு செய்கின்றனர். அத்துடன் C பங்குடமையில் அனுமதிக்கப்பட்ட தினம் நிறுவன நன்மதிப்பு ரூபா 500,000 என பெறுமானம் இடப்பட்டது எனின்,

01. நன்மதிப்பின் முழுப்பெறுமானத்தையும் மூலதனக்கணக்கின் ஊடாக சீராக்கம் செய்ய உடன்பாடு காணப்பட்டது எனில் சீராக்கத்திற்கான பொது நாட்குறிப்பு பதிவு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

செய்கை-

விபரம்	A	B	C
பழைய நன்மதிப்பு உரிமை 3:2	300000	200000	
புதிய நன்மதிப்பு உரிமை 5:3:2	250000	150000	100000
இழப்பு / ஏற்பு நன்மதிப்பு	-50000	-50000	+100000

பங்காளர் மூலதனக் கணக்கு

விபரம்	A	B	C	விபரம்	A	B	C
				மீதி			
நன்மதிப்பு	250000	150000	100000	நன்மதிப்பு	300000	200000	
மீ.கீ.கொ.செ							
				மீ.கீ.கொவ			

பொது நாட்குறிப்பு

விபரம்	வரவு	செலவு
மூலதனகணக்கு A வரவு	250000	
B வரவு	150000	
C வரவு	100000	
மூலதனகணக்கு A செலவு		300000
B செலவு		200000
(நன்மதிப்பு பதிவு செய்யப்பட்டது)		

02. நன்மதிப்பினைப் பதிவு செய்யாது மூலதனக்கணக்கின் ஊடாக சீராக்கம் செய்ய இனங்கப்படுமாயின் சீராக்கத்திற்கான நாட்குறிப்பு பதிவு

பங்காளர் மூலதனக் கணக்கு

விபரம்	A	B	C	விபரம்	A	B	C
				மீதி			
நன்மதிப்பு			100000	நன்மதிப்பு	50000	50000	
மீ.கீ.கொ.செ							
				மீ.கீ.கொவ			

பொது நாட்குறிப்பு

விபரம்	வரவு	செலவு
மூலதனகணக்கு C வரவு	100000	
மூலதனகணக்கு A செலவு		50000
B செலவு		50000
(மூலதனக்கணக்கு ஊடாக நன்மதிப்பு பதிவு செய்யப்பட்டது)		

உதாரணம் :- 02

அமல் விமல் என்போர் பங்குடமை ஒன்றில் இலாப நட்டங்களைச் சமனாகப் பங்கிடும் பங்காளர்கள் இவர்களது 31.03.2019ல் நிதி நிலமைக்கூற்று பின்வருமாறு

	ரூபா 000	ரூபா 000
ஆதனம் பொறி உபகரணம்		3000
இருப்பு	200	
வியாபார வருமதி	300	
காசு	1000	1500
		4500
மூலதனக் கணக்கு அமல்	2000	
விமல்	1000	3000
நடைமுறை கணக்கு அமல்	600	
விமல்	400	1000
வியாபர கொடுக்குமதி		500
		4500

இப்பங்குடமையில் 01.04.2019ல் சில்வா என்பவர் பின்வரும் உடன்பாடுகள் ஊடாக ஒரு புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார்.

01. சில்வா மூலதனப்பங்களிப்பாக ரூபா 500,000 காசினையும் ரூபா 500,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் மூலதனமாக அறிமுகம் செய்தல் வேண்டும்
02. சில்வா பங்காளர் அனுமதிக்கப்பட்ட தினம் நிறுவன நன்மதிப்பு ரூபா 300,000 இடப்பட்டு பங்காளர் மூலதனக்கணக்கின் ஊடாக செம்மையாக்கம் செய்யப்படும்.
03. அமல், விமல், சில்வா முறையே இலாப நட்டங்களை 5:3:2 எனும் அடிப்படையில் பங்கீடு செய்வர். வேண்டப்படுவது,

A. சில்வா பங்காளராக அனுமதிக்கப்பட்டமை தொடர்பான கொடுக்கல் வாங்கலுக்கான பொது நாட்குறிப்பேட்டுப்பதிவு (காசு உட்பட)
B. 01.04.2019ல் பங்காளர் மூலதனக்கணக்கு
C. 01.04.2019ல் சில்வா பங்காளராகச் சேர்க்கப்பட்ட பின்னரான நிதி நிலமைக்கூற்று

செய்கைவழி

விபரம்	Amal	Vimal	Silva
பழைய நன்மதிப்பு உரிமை (சமன்)	150000	150000	
புதிய நன்மதிப்பு உரிமை (5:3:2)	150000	90000	60000
இழப்பு / ஏற்பு நன்மதிப்பு	0	-60000	+60000

A. பொது நாட்குறிப்பு

விபரம்	**வரவு**	**செலவு**
காசு வரவு	500,000	
மோட்டார் வரவு	500,000	
மூலதன கணக்கு – சில்வா செலவு		1,000,000
(சில்வாவினால் மூலதனமாக காசு, மோட்டார் ஈடுபடுத்தப்பட்டது)		

மூலதனக் கணக்கு சில்வா வரவு	60000	
மூலதனக் கணக்கு விமல் செலவு		60000
(நன்மதிப்பு மூலதனக் கணக்கு ஊடாக பதிவு செய்யப்பட்டது)		

B. பங்காளர் மூலதனக் கணக்கு (000)

விபரம்	Amal	Vimal	Silva	விபரம்	Amal	Vimal	Silva
				மீதி	2000	1000	
நன்மதிப்பு			60	காசு			500
				மோட்டார்			500
மீ.கீ.கொ.செ	2000	1060	940	நன்மதிப்பு		60	
	2000	**1060**	**1000**		**2000**	**1060**	**1000**
				மீ.கீ.கொவ	2000	1060	940

C

அமல் விமல் என்போர் பங்குடமை ஒன்றில் 31.03.2019ல் முடிவுற்ற ஆண்டுக்கான உள்ளபடியான நிதி நிலமைக்கூற்று பின்வருமாறு

	ரூபா 000	ரூபா 000
ஆதனம் பொறி உபகரணம்		3500
இருப்பு	200	
வியாபார வருமதி	300	
காசு	1500	2000
		5500
மூலதனக் கணக்கு அமல்	2000	
விமல்	1060	
சில்வா	940	4000
நடைமுறை கணக்கு அமல்	600	
விமல்	400	1000
வியாபர கொடுக்குமதி		500
		5500

வினா - 01

அனு, தனு, மது ஆகியோர் இலாப நட்டங்களை சமனாகப் பங்கீட்டு பங்குடமையொன்றை நடாத்தி வருகின்றனர்.2010 மார்ச் 31 இல் அனு பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்தினத்தில் வியாபாரத்தின் நன்மதிப்பு மூலதனக் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டது.

தனுவும் மதுவும் வியாபாரத்தைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்தத் தீர்மானித்தனர். மூலதனக் கணக்கு மீதிகள்

	தனு (ரூபா)	மது (ரூபா)
நன்மதிப்பு சீராக்கத்திற்கு முன்னரான	**200 000**	**150 000**
நன்மதிப்பு சீராக்கத்திற்கு பின்னரான	**160 000**	**140 000**

பங்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நன்மதிப்புத் தொகை என்ன?

1. ரூபா 10 000 2. ரூபா 25 000 3. ரூபா 50 000
4. ரூபா 75 000 5. ரூபா 150 000

செய்கைவழி

விபரம்	ANU	THANU	MATHU
பழைய நன்மதிப்பு உரிமை	**50000**	**50000**	**50000**
புதிய நன்மதிப்பு உரிமை	--	90000	60000
இழப்பு / ஏற்பு நன்மதிப்பு	-50000	+40000	+10000

பங்காளர் மூலதனக் கணக்கு

விபரம்	Anu	Thanu	Mathu	விபரம்	Anu	Thanu	Mathu
நன்மதிப்பு		40000	10000	மீதி		200000	150000
காசு				காசு			
கடன் க/கு				நடை.மு.க/கு			
மீ.கீ.கொ.செ		**160000**	**140000**	நன்மதிப்பு	50000		
				மீ.கீ.கொவ			

வினா - 02

A,B ஆகிய இருவரும் எழுத்து மூல உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தாது பங்குடமை வியாபாரமொன்றை நடத்தி வருகின்றனர். பின்வரும் தகவல்கள் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரிந்தெடுக்கப்பட்டன.

	A	B
மூலதன மீதி 2007 ஏப்பிரல் 1 இன் உள்ள படி	500 000	300 000
பற்றுகள் 2007/2008 ஆண்டு காலத்தில்	20 000	10 000
நடைமுறைக் கணக்கு செலவு மீதி 2007 ஏப்பிரல் 1 இல்	40 000	-
நடைமுறைக் கணக்கு செலவு மீதி 2008 மார்ச் 31 இல்	70 000	-

இக் கணக்காண்டு காலத்தில் பற்றுகளும், இலாபங்களும் மாத்திரமே பங்காளர்கள் நடைமுறைக் கணக்குகளில் பதிவிடப்பட்டிருந்தன. 2008 மார்ச் 31 முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் பகிர்வுக்குரிய இலாபம் என்ன?

1. ரூபா 48 000 2. ரூபா 60 000 3. ரூபா 80 000
4. ரூபா 100 000 5. ரூபா 140 000

பங்காளர் நடைமுறைக் கணக்கு

விபரம்	A	B	விபரம்	A	B
பற்று	20000	10000	மீதி	40000	
மீ.கீ.கொ.செ	**70000**		இலாபப் பகிர்வு	50000	50000
	90000			**90000**	
			மீ.கீ.கொ.வந்தது		

வினா - 03

இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் அமலன், துமலன் ஆகியோரின் பங்குடமையில் 2012.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபப் பகிர்வின் பின்னர் வழுக்கள் இடம் பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது. அமிலன் எடுப்பனவு செய்த ரூபா 3000 பெறுமதியான சரக்குக்கு பதிவுகள் எதுவும் இடம் பெறவில்லை. துமிலன் தனது சொந்த பணத்திலிருந்து செலுத்திய வியாபாரத்திற்கான மின் கட்டணம் ரூபா 2000 ஆனது கணக்கேடுகளில் ரூபா 200 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழுக்களைத் திருத்திய பின்னர் பங்காளர் இருவரது உரிமையாண்மையில் ஏற்படும் தாக்கம் யாது?

	அமிலன்	துமிலன்
1.	ரூபா 600 வால் அதிகரிக்கும்	ரூபா 600 வால் குறையும்
2.	ரூபா 3000 வால் குறையும்	ரூபா 3000 வால் அதிகரிக்கும்
3.	ரூபா 2400 வால் குறையும்	ரூபா 2400 வால் அதிகரிக்கும்
4.	ரூபா 3000 வால் குறையும்	ரூபா 1800 வால் அதிகரிக்கும்
5.	ரூபா 3000 வால் குறையும்	ரூபா 2000 வால் அதிகரிக்கும்

பங்காளர் நடைமுறைக் கணக்கு

விபரம்	அமிலன்	துமிலன்	விபரம்	அமிலன்	துமிலன்
மீதி			மீதி		
பற்று	3000		மின் கட்டணம்		1800
மூலதனக/கு			இலாப பகிர்வு சீராக்கம்	600	600
மீ.கீ.கொ.செ			(3000 – 1800 = 1200)		
			மீ.கீ.கொ.வந்தது		

வினா - 04

திவானியும் பவானியும் கொண்டு நடாத்தும் பங்குடமை சிவானி 2012.04.01 சேர்த்துக்கொள்ளப்பட்டார். புதிய இலாபநட்டப்பகிர்வு விகிதம் 2:1:1 அத்தினத்தில் பங்காளர் மூலதனக்கணக்குகளில் நன்மதிப்பு தொடர்பான பதிவு பின்வருமாறு காட்டப்பட்டிருந்தது

பங்காளர் மூலதனக் கணக்கு

விபரம்	திவானி	பவானி	சிவானி	விபரம்	திவானி	பவானி	சிவானி
நன்மதிப்பு			20000	நன்மதிப்பு	10000	10000	

சிவானி சேர்க்கப்பட்ட தினத்தில் வியாபாரத்தின் மொத்தநன்மதிப்பு திவானி பவானி ஆகியோரிடையிலான பழைய இலாபநட்டப்பகிர்வு விகிதம் என்பன முறையே

	நன்மதிப்பு	இலாபநட்டப்பகிர்வு விகிதம்
1.	ரூபா 20 000	1:1
2.	ரூபா 20 000	3:1
3.	ரூபா 20 000	5:3
4.	ரூபா 80 000	1:1
5.	ரூபா 80 000	5:3

செய்கைவழி

விபரம்	திவானி	பவானி	சிவானி
பழைய நன்மதிப்பு உரிமை	50000	30000	-
புதிய நன்மதிப்பு உரிமை	40000	20000	20000
இழப்பு / ஏற்பு நன்மதிப்பு	-10000	-10000	+20000

வினா - 05

மதன், சதன், நிசான் ஆகியோர் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிரும் பங்குடமையிலிருந்து நிசான் இளைப்பாற ஏனைய பங்காளர்கள் இலாப நட்டங்களை சமனாகப் பகிர்வர் அன்றைய தினம் நன்மதிப்பு ரூபா 60 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்புக் கணக்கில் ரூபா 30 000 மீதியாகக் காணப்பட்டது. நிசா ஓய்வு பெற்ற தினத்திலிருந்து நன்மதிப்புக் கணக்கைப் பேணுவதில்லையெனப் பங்காளர்கள் தீர்மானித்தனர். மேற்கூறிய நிகழ்வினால் பங்காளரின் மூலதனக் கணக்கு மீதிகளில் ஏற்படும் தேறிய தாக்கம் யாது?

	மதன் (ரூபா)	சதன்(ரூபா)	நிசான்(ரூபா)
1.	தாக்கம் இல்லை	வரவு 12000	செலவு 12000
2.	தாக்கம் இல்லை	வரவு 6000	செலவு 6000
3.	வரவு 3000	வரவு 3000	செலவு 6000
4.	செலவு 5000	வரவு 1000	வரவு 4000
5.	வரவு 15000	வரவு 21000	செலவு 6000

செய்கைவழி

விபரம்	மதன்	சதன்	நிசான்
பழைய நன்மதிப்பு உரிமை	15000	9000	6000
புதிய நன்மதிப்பு உரிமை	30000	30000	
இழப்பு / ஏற்பு நன்மதிப்பு	(15000)	(21000)	+ 6000

பங்காளர் சேரல்

பயிற்சி – 01

ஒரு பங்குடமையில் "அது", "இது" என்போர் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள். உது 1/4/2017 இல் புதியபங்பாளராக 1/5 பங்குரிதுடன் சேர்க்கப்பட்டர் அவர் தனது இலாபப் பங்கை அது விடம் மட்டுமே பெற்றுக்கொள்கின்றார். உது மூலதனத்திற்கு ரூ 15000 ஈடுபடுத்தினார். புதிய உடன்படிக்கைக்கமைய இவர்கள் மூலதனத்திற்கு 10% வட்டியையும் ஒவ்வொருவருக்கும் ஆண்டுச் சம்பளமாக முறையே

ரூ 12000, ரூ 8000, ரூ 10000 பெற உரித்துடையவர்கள். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ரூபா 100000 நன்மதிப்பு தொடர்பான சீராக்கங்களை மூலதனக் கணக்கில் மேற்கொள்ளப்படும் 1.4.2017 இல் மூலதன, நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு

	மொத்த உரிமை	**நடைமுறைக்கணக்கு**
அது	220000	20000
இது	165000	(15000)

மேலதிக தகவல்கள்

1. 31.3.2018 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன் வட்டி தாக்கல் செய்யமுன் பெறப்பட்ட தேறியலாபம் ரூ 162000
2. அது, இது, உது ஆண்டுகாலத்தில் முறையே ரூ 12000, ரூ 10000, ரூ 8000 தொகையை தமது சொந்த தேவைக்காக பற்றினர் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
3. பங்காளர் ஒவ்வொருவரும் தமது ½ ஆண்டுச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர்.

வேண்டப்படுவது

1. **31.3.2018இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபநட்ட பகிர் கணக்கு**
2. **31.3.2018இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர்நடைமுறைக் கணக்கு, மூலதனக் க/கு**
3. **31.3.2018இல் உரிமை மூலதனம்**
4. **31.3.2018இல் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?**

பயிற்சி – 02

பங்குடமையொன்றில் கண்ணன், பரதன் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதனக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டியும், ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 3000, ரூபா 2000 வழங்கப்படல் வேண்டும்.

இப்பங்குடமையில் *1/4/2017* இல் நாயகன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டடார். நாயகனின் நன்மதிப்பு ரூபா 20000 வாக பெறுமானமிடப்பட்டது புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு மீதி பேணப்படுவதில்லை. நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கில் மேற்கொள்க. இவருக்கு ஆண்டுச் சம்பளமாக ரூபா 12000 வழங்கப்படல் வேண்டும். புதிய இலாபநட்ட விகிதம் முறையே 5:3:2 ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தனர்.

***31/3/2018* இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு**

விபரம்	**வரவு**	**செலவு**
கொள்வனவு விற்பனை	132000	374000
உட்திரும்பல் வெளித்திரும்பல்	4000	3000
கடன்படுநர், கடன்கொடுநர்	53000	43000
அறவிடமுடியாக்கடனும் ஐ.கடன் ஏற்பாடும்	2000	3000
1/4/2016 இல் இருப்பு	38000	
உட்காவுகை	3000	
சம்பளம்	78000	
மின்சாரம்	6000	
விளம்பரம்	5000	

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பெற்ற தரகு			4000
பொதிகட்டும் பொருள்		6000	
காப்புறுதி		5000	
மூலதனக் கணக்கு	கண்ணன்		180000
	பரதன்		150000
நடைமுறைக் கணக்கு	கண்ணன்		15000
	பரதன்	5000	
பற்றுக் கணக்கு	கண்ணன்	7000	
	பரதன்	6000	
	நாயகன்	5000	
கட்டிடம் தேய்மான ஏற்பாடும்		200000	54000
மோட்டாரும் தேய்மான ஏற்பாடும்		180000	38000
நாயகனின் மூலதன பங்களிப்பு			120000
காசுக்கட்டுப்பாடு		249000	
		984000	**984000**

மேலதிக தகவல்கள்

1. *31/3/2018* இல் உள்ளவாறான இருப்புக்கள் ரூ 46000 ஆகும். இதில் பழுதடைந்த பொருள் ரூபா 6000 உள்ளது இதனை ரூபா 5000 மதிப்பில் எடுக்க தீர்மானிக்கப்பட்டது.
2. காப்புறுதியில் ரூபா 2000 ம், மின்சாரத்தில் ரூபா 1500 ம் தீர்க்கப்படாதுள்ளதுடன் பொதிகட்டும் பொருளில் 1000 பயன்படுத்தப்படாதுள்ளது.
3. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக. கட்டிடம் 4% மோட்டார் 8%
4. அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 1000 பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 10% சீராக்குக
5. *19/11/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 4000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 75% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது.
6. *31/12/2017* இல் ரூபா 40000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று பண்டக்கொள்வனவாக பதிவிடப்பட்டுள்ளது.
7. *30/6/2017* இல் பரதன் என்பவர் ரூபா 2000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
8. பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை காசேட்டிலிருந்து சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.

தயாரிக்குக

1) 31/3/2018 **இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)**

2) **பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**

3) 31.3.2018 **இல் நிதிநிலைமைக்கூற்று**

பயிற்சி வினா - 03

பங்குடமையொன்றில் சாந்தன், அன்டன் இலாபநட்டங்களை 5:3 என பகிரும் பங்காளர்கள் இப்பங்குடமையில் *1/4/2017* இல் தீபன் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டடார். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ரூபா 80000 ஆகும். புத்தகங்களில் நன்மதிப்புக் கணக்கை ஏற்படுத்தாமல் வேண்டிய சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாக மேற்கொள்க. புதிய பங்குடைமை உடன்படிக்கைக்கமைய இவர்களது மூலதனக் கணக்குகளுக்கு ஆண்டுக்கு 10%

வட்டியும், ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 2000, ரூபா 1800 ரூ 1500 வழங்கப்படல் வேண்டும். தீபனுக்கு இலாபநட்டத்தில் 1/5 பகுதிக்கு உரித்துண்டு. ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமில்லை.

31/3/2018 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

விபரம்		வரவு	செலவு
விற்பனை			420000
விற்பனைக் கிரயம்		164000	
31.3.2018 இல் இருப்பு		32400	
சம்பளம்		15400	
விற்பனைத் தரகு		2500	
வாடகை (சாந்தன்)		10500	
விளம்பரம்		1600	
காப்புறுதி		4400	
பிரயாணம்		3600	
கழிவுகள்		1200	2000
கடன்படுநர், கடன்கொடுநர்		50000	33200
1/4/2017 இல் ஐ.கடன் ஏற்பாடு			3800
மூலதனக் கணக்கு	சாந்தன்		240000
	அன்டன்		200000
நடைமுறைக்கணக்கு	சாந்தன்		24000
	அன்டன்	8000	
பற்றுக் கணக்கு	சாந்தன்	10800	
	அன்டன்	9600	
	தீபன்	1200	
தீபன் மூலதனம்			180000
கட்டிடம் தேய்மான ஒதுக்கமும்		250000	72500
மோட்டாரும் தேய்மான ஒதுக்கமும்		150000	55000
பொறியும் தேய்மான ஒதுக்கமும்		100000	42800
வங்கிச் செலவு		1200	
காசு மீதி		456900	
		1273300	**1273300**

மேலதிக தகவல்கள்

1. *31/3/2018* இல் உள்ளவாறான இருப்பில் கிரயத்தில் மதிபிடப்பட்ட ரூபா 4800 பெறுமதியான பழுதடைந்த தொக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன இவற்றிற்கு ரூபா 1200 செலவிடுவதன் மூலம் இவற்றை ரூபா 4000 மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   கட்டிடம் 2% மோட்டார் 8% பொறி 10%
3. ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோரில் 2% ஆல் அதிகரிக்க வேண்டும்.
4. *21/5/2017* இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் ரூபா 5000 கிரயமான பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றின் கிரயத்தில் 90% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது. இது தொடர்பாக பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

5. *30/9/2017* இல் சாந்தன் என்பவர் ரூபா 5000 கிரயமான பண்டங்களை சொந்த தேவைக்கு பற்றினார் இவை பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
6. சாந்தனின் மகனது பரீட்சைக் கட்டணம் ரூபா 2400 பங்குடமையால் செலுத்தப்பட்டு பங்குடமையின் காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
7. இப்பங்குடைமையின் களஞ்சியசாலை சாளஸ் இனது கட்டிடத்தில் தொழிற்படுகின்றது சாந்தனுக்கு மாதாந்த கட்டிட வாடகையாக ரூ 1500 செலுத்தப்படவேண்டும்.
8. ஓவ்வொரு பங்காளரும் தமது முதல் இரண்டுமாதச் சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர் இவை சம்பளக்கணக்கிற்கு வரவிடப்பட்டது.

தயாரிக்குக

1) 31/3/2018 **இல் முடிவுற்ற நிதி வருடத்திற்கான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)**

2) **பங்காளர் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும்**

3) 31.3.2018 **இல் நிதிநிலைமைக்கூற்று**

பயிற்சி வினா 04

ஒரு பங்குடமையில் ஆதியும், சிவனும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்வதுடன் முகாமைப் பங்காளரான ஆதிக்கு ஆண்டுச் சம்பளமாக 18000 வழங்கப்படும்.

1/4/2017 இல் பரமன் என்பவர் புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார் புதிய பங்குடமை ஒப்பந்தத்திற்கமைய மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டி, பரமனுக்கு ஆண்டுச் சம்பளமாக 12000 வை வழங்குவதுடன் ஆதியினது ஆண்டுச் சம்பளத்தை ரூபா 6000 ஆல் குறைப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டது. ஆதி தனது 1/5 பங்கு இலாபத்தை பரமனுக்கு வழங்கினார்

1/4/2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று வருமாறு.

சொத்து	கிரயம்	தி.தே	தேறியது
கட்டிடம்	120000	44000	76000
மோட்டார்	60000	21000	39000
பொறியந்திரம்	100000	32000	68000
	280000	**97000**	**183000**
இருப்பு		39000	
கடன்படுநர்	36500		
ஐ.ஏற்பாடு	(1500)	35000	
முற்பண வாடகை		800	
வங்கி		29200	114000
			297000
மூலதன கணக்கு			
ஆதி		150000	
சிவன்		100000	250000
நடைமுறை கணக்கு			
ஆதி		17000	
சிவன்		(7000)	10000
கடன்கொடுநர்		35800	
அட்டுறு மின்சாரம்		1200	37000
		297000	**297000**

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

மேலதிக தகவல்கள்

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள்வருமாறு.

கடன்பட்டோரிடம் பெற்றது	ரூ 322000
கடன்கொடுநருக்கான கொடுப்பனவு	ரூ 144000
ஆதிக்கு செலுத்திய சம்பளம்	ரூ 12000
வாடகை	ரூ 7800
மின்சாரம்	ரூ 6900
விளம்பரம்	ரூ 5600
காப்புறுதி	ரூ 5400
பற்று ஆதி ரூ 4800 சிவன் ரூ 3600 பரமன்	ரூ 4000
பரமன் ஈடுபடுத்திய காசு	ரூ 110000
மோட்டார்கொள்வனவு 1.1.2018	ரூ 25000

2) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
கட்டிடம் 6% மோட்டார் 8% பொறியந்திரம் 10%

3) 31/3/2018 இல் உள்ள மீதிகள்

இருப்பு	31500
அட்டுறு மின்சாரம்	500
முற்பண வாடகை	600
கடன்படுநர்	32000
கடன்கொடுநர்	28000

4) கடன்பட்டோர் மீதியில் 5% ஐயக்கடன் ஏற்பாட்டை சீராக்குக.

5) பரமன் கொண்டுவந்த காசில் அவரது நன்மதிப்பு பங்கு ரூ 20000 உள்ளடங்கியுள்ளது நன்மதிப்பு கணக்கு பேணாது மூலதனக்கணக்கில் சீராக்கத்தை மெற்கொள்க.

6) இப் பங்குடைமையில் குறித்த நபர் வாடிக்கையாளராகவும் வழங்குநராகவும் காணப்படுகின்றார் அவரிடமிருந்து வரவேண்டிய ரூ 8000 தொகையானது அவருக்கு செலுத்தவேண்டிய ரூ 6000 தொகைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டது.

7) இப் பங்குடைமையிலுள்ள பரமன் பங்குடைமைக்காக தனது சொந்தப்பணத்திலிருந்து பங்குடைமைக்கு ரூ 4000 பிரயாணச் செலவு செய்தார்.

8) ஆதி மாதாந்தம் ரூ 500 பண்டங்களை சொந்தத்தேவைக்கு பற்றினார்.

வேண்டப்படுவது :-

1) 31/3/2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று , பகிர்கணக்கு.

2) பங்காளர் நடைமுறைக் கணக்கும், மூலதனக் கணக்கும்

3) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிதிநிலைமைக்கூற்று

பங்காளர் விலகல்

பயிற்சி வினா 05

ரமனி, மதனி, ராகினி என்போர் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பங்குடைமையை நடாத்துகின்றனர்.

- எல்லாப் பங்காளர்களுக்கும் ஆரம்ப மூலதனமீதி மீது 10% வட்டி
- இலாபநட்டங்கள் முறையே 5:3:2

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- ரமனிக்கும் மதனிக்கும் ஆண்டுச் சம்பளம் முறையே ரூ 240000, ரூ 120000

பங்குடைமையின் 31.3.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமானது ரூ 4800000 ஆக இருந்தது. எனினும் அதனைத்தொடர்ந்து கணக்கீட்டு பதிவுகளில் பின்வரும் வழுக்கள் வெளிக்கொண்டுவரப்பட்டது.

1. மின்சாரத்திற்கு செலுத்திய ரூ 240000 ஆனது மின்சாரக்கணக்கில் ரூ 420000 ஆக வரவுவைக்கப்பட்டுள்ளது.
2. வங்கிக்கடனுக்கு செலுத்திய வட்டி ரூ 200000 ஆனது வட்டி வருமானக் கணக்கில் ரூ 20000 ஆக செலவு வைக்கப்பட்டுள்ளது.
3. 1.10.2017 இல் ரூ 400000 கொள்வனவுசெய்யப்பட்ட காரியாலய உபகரணம் காரியாலய செலவுக்கணக்கில் ரூ 40000 ஆக பதியப்பட்டுள்ளது. (காரியாலய உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்)
4. மதனியின் ஆயுள்காப்புறுதி செலவினம் ரூ 250000 ஆனது பங்குடைமையினால் செலுத்தப்பட்டதுடன் இது நிறுவன காப்புறுதிச் செலவாக பதியப்பட்டது.
5. கடன்பட்டோரிடம் பெற்று வங்கியிலிடப்பட்ட ரூ 400000 காசோலை மறுக்கப்பட்டது இம்மறுத்தல் பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை (கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏறப்பாடு செய்யப்படுகின்றது)

31.3.2018 இல் ராகினி பங்குடைமையிலிருந்து இளைப்பாறினார் இத்திகதியில் பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ 2000000 ஆக மதிப்பிடப்பட்டது கணக்குப்புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு சீராக்கப்படுவதில்லை எல்லாச் சீராக்கங்களும் மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்படல் வேண்டும். ராகினிக்கு செலுத்தவேண்டிய தொகை பங்குடைமைக்கு கடனாக பராமரிப்பதற்கு இனங்கப்பட்டுள்ளது. ரமனியும் மதனியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர சம்மதித்தனர். 1.4.2017 இல் உள்ள பங்காளர் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள்

	மூலதன கணக்கு 000	நடைமுறை கணக்கு000
ரமனி	4000	800
மதனி	3000	600
ராகினி	2000	(200)

வேண்டப்படுவது

1. வழுக்களை திருத்த நாட்குறிப்பு பதிவுகள்
2. 31.32017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியான இலாபத்தைக் காட்டும்கூற்று
3. இலாபநட்ட பகிர் கணக்கு
4. 31.3.2017 இல் உள்ளவாறான பங்காளர் மூலதன நடைமுறைக் கணக்குகள்

பயிற்சி வினா 06

ஒரு பங்குடமையில் புத்தன், யேசு, காந்தி என்போர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள் இவர்களது மூலதன மீதிகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டி ஆண்டுச் சம்பளங்களாக முறையே 12000, 10000, 8000, உரித்துண்டு. 1/4/2017 இல் யேசு என்பவர் இப்பங்குடமையிலிருந்து இளைப்பாற புத்தனும் காந்தியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்ந்து கொண்டு பங்குடமையை தொடர்ந்து நடாத்தினர். ஏனைய ஒப்பந்தங்கள் மாற்றமின்றி தொடந்தன. யேசுவுக்கு செலுத்தப்படவேண்டிய தொகையானது 10% கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது. இத்தினத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பானது ரூபா 50000 பெறுமதியில்

பெறுமானமிடப்படும். புதியபங்காளர்கள் நன்மதிப்பை மூலதனக் கணக்கில் மேற்கொள்ள தீர்மானித்தனர்.

31/3/2018 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு.

விபரம்		வரவு	செலவு
கொள்வனவு விற்பனை		98500	255500
உட்திரும்பல் வெளித்திரும்பல்		2500	1500
கடன்பட்டோர் கடன்கொடுநர்		41200	38800
அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாடு		1800	2100
1/4/2016 இருப்பு		44400	
ஏற்றும்கூலி		2600	
காப்புறுதி		2800	
சம்பளம்		4800	
விளம்பரம்		2000	
நேரடி விற்பனைச் செலவு		2500	
வங்கி அறவீடு		800	
காசுமீதி		85500	
ப.மூலதனம்	- புத்தன்		250000
	- யேசு		150000
	- காந்தி		100000
ப.நடைமுறைக் க/கு	- புத்தன்		18000
	- யேசு	6000	
	- காந்தி		12000
ப.பற்று	- புத்தன்	12000	
	- காந்தி	8700	
யேசுவுக்கு செலுத்தப்பட்ட காசு		50000	
காணிகட்டிடமும் தே.ஏற்பாடும்		240000	85500
மோட்டார் தே.ஏற்பாடும்		180000	68800
பொறி இயந்திரம் தே.ஏற்பாடும்		100000	35600
வங்கி		131700	
		1017800	**1017800**

மேலதிக தகவல்கள்

1) 31/3/2017 இல் உள்ளவாறான இருப்பு ரூபா 38000 ஆகும்.
2) சொத்துக்கு பின்வருமாறு தேய்விடுக.
   காணிகட்டிடம் 4% மோட்டார் 8% பொறி 10%
3) 19/7/2017 இல் ஏற்பட்ட தீ விபத்தில் 4000 பண்டங்கள் அழிக்கப்பட்டன இவற்றில் காப்புறுதிக் கம்பனி 75% ஐ நட்டஈடாக தரமுன்வந்தது.
4) யேசு இளைப்பாறும் 1.4.2017 இல் போது ரூபா 25000 முன்கொண்டுவரும் தொகையுடைய மோட்டாரை தனது வருமதிகளின் பகுதிக்கொடுப்பனவாக அதேபெறுமதியில் கையேற்றார். இதன் கிரயம் ரூ 40000
6) அறவிடமுடியாக்கடனாக மேலும் ரூபா 1200 பதிவளித்து ஐயக்கடன் ஏற்பாட்டை எஞ்சிய கடன்பட்டோரில் 5% சீராக்குக.

தயாரிக்குக

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்றும், இலாபநட்ட, பகிர்கணக்கு
2) பங்காளர் நடைமுறைக் கணக்கு

3) பங்காளர் மூலதன பகிர்கணக்கு
4) 31/3/2017 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

பயிற்சி வினா இல 07

ஒரு பங்குடமையில் ரதி,மதி, சோதி என்போர் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள் இப்பங்குடமையின் ஏடுகளில் 1.4.2017 இல் உள்ள நிதிநிலைமை வருமாறு

நடைமுறையல்லாச் சொத்து		
ஆதனம்பொறி உபகரணம்		240000
நடைமுறைச்சொத்து		
இறுதி இருப்பு	35000	
கடன்பட்டோர்	45000	
வங்கி	212000	292000
		532000

பங்காளர் மூலதனம்	- ரதி		180000
	- மதி		120000
	- சோதி		100000
பங்காளர் நடை.கணக்கு	- ரதி	18000	
	- மதி	15000	
	- சோதி	(3000)	30000
கடன்கொடுநர்			50000
ஆதனம்பொறி உபகரணம் தேய்மான ஏற்பாடு			52000
			532000

இப் பங்குடமையிலிருந்து 1.4.2017 இல் மதி இளைப்பாற ரதியும் சோதியும் இலாபநட்டங்களை முறையே 3:2 என பகிர்ந்துகொண்டு பங்குடமையை தொடர்ந்தனர் பங்காளர் மூலதனக் கணக்குகள் மீது 10% வட்டியும், பங்காளர் செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கிற்கு 20% வட்டியும் விதிக்கப்படும். ஒவ்வொரு பங்காளருக்கும் மாதாந்தச் சம்பளமாக முறையே 2500, 2000 வழங்கப்படல் வேண்டும். இத்தினத்தில் நிறுவன நன்மதிப்பு ஆரம்ப மூலதன மீதியின் 10% ஆகும் நன்மதிப்பு கணக்கு எற்படுத்தாது தொர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கினுாடாக சீராக்குக.

31.3.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு

கடன்பட்டோரிடம் சேகரிப்பு	342000
கடன்கொடுநருக்கு செலுத்தியது	146000
பங்காளர் மொத்தச் சம்பளம்	54000
செலவுகள்	24000
பற்று – ரதி	4000
- சோதி	3000

மேலதிக தகவல்கள்

1) 31.3.2018 இல் இருப்பு , கடன்பட்டோர் மீதிகள் முறையே 8000 12000 தொகையால் அதிகரித்ததுடன் கடன்கொடுநர் ரூபா 10000 தொகையால் குறைவடைந்துள்ளது.
2) 1.4.2017 இல் ரூபா 37000 முன்கொண்டுவரும் தொகையையும், ரூபா 23000

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

திரண்டதேய்வுடையதுமான மோட்டார் வாகனத்தை அதன் முன்கொண்டுவரும் தொகையில் மதி கையேற்றார்.

3) ஆதனம் பொறி உபகரணங்களுக்கு ஆண்டுக்கு 10% தேய்விடப்படும்.

4) மதி இளைப்பாறும்போது அவருக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50% செலுத்தப்பட்டு மிகுதி கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது.

5) ஓவ்வொரு ஆண்டிறுதி கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்வது வழக்கம்

6) ரதியின் சொந்த வீட்டுவாடகை ரூ 6000 பங்குடைமையால் செலுத்தப்பட்டு பங்குடைமையின் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தயாரிக்குக.

1) 31/3/2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று, இலாபநட்ட, பகிர்கணக்கு

2) பங்காளர் நடைமுறைக் க/கு 3) பங்காளர் மூலதன க/கு

4) 31/3/2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைகூற்று

வினா இல 08

ஒரு பங்குடமையில் மாயோனும், சேயோனும் சயந்தனும் இலாபநட்டங்களை முறையே 5:3:2 என பகிரும் பங்காளர்கள். இவர்களது மூலதன கணக்கின் மீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டிக்கு உரித்துண்டு. 1/4/2017 இல் மாயோன் இளைப்பாற சயந்தன் சேயோனும் இலாபநட்டங்களை 3:2 என பகிர்வது என முடிவு செய்தனர். புதிய ஒப்பந்தப்படி சயந்தனுக்கு ஆண்டுச் சம்பளமாக 24000 வழங்கப்படவேண்டியதுடன் இத்தினத்தில் மாயோன் நன்மதிப்பு ரூபா 50000 ஆக பெறுமானமிடப்பட்டது. நன்மதிப்பு சீராக்கத்தை பங்காளர் மூலதன கணக்கில் மேற்கொள்க.

1) இப்பங்குடமையின் புத்தகங்களில் 1/4/2017 இல் உள்ளவாறான மீதிகள் வருமாறு

	மூலதன கணக்கு	நடைமுறைக் கணக்கு
மாயோன்	200000	8000 செலவு
சேயோன்	150000	3000 வரவு
சுயந்தன்	120000	10000 செலவு
இருப்பு	32000	
கடன்கொடுநர்	42000	
காணிகட்டிடம் (புத்.பெறுமதி)	120000	
மோட்டார் (புத்.பெறுமதி)	180000	
காசுமீதி	?	
கடன்பட்டோர்	40000	
ஐயக்கடன் ஏற்பாடு	(2000)	

2) மாயோன் 25000 திரண்டதேய்வையும் ரூ 35000 முன்கொண்டுவரும் தொகையையும் மோட்டாரை
அத்தினத்திலுள்ள முன்கொண்டுவரும் பெறுமதியில் கையேற்றார். இவருக்கு செலுத்த வேண்டிய மிகுதி 10% கடன்கணக்கிற்கு மாற்றப்படும்.

3) நிலையான சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
காணிகட்டிடம் 5% மோட்டார் 10%

4) கடன்பட்டோரில் ஐயக்கடன் ஏற்பாட்டை 5% சீராக்குக.

5) 31/3/2017 முடிவடைந்த ஆண்டுக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்கள்.
சுயந்தன் சம்பளம் 24000

செலவுகள்		38000
பெற்ற வாடகை		2800
மாயோனுக்கு செலுத்திய காசு		30000
கடன்பட்டோரிடம் பெற்றது ரூ		324000
கடன்கொடுநருக்கு செலுத்தியது ரூ		112000
பற்று	சேயோன்	6000
	சயந்தன்	2400

6) 31/3/2018 இல் உள்ளவாறான மீதிகள்

கடன்பட்டோர்	44000
கடன்கொடுநர்	32000
இருப்பு	36000

தயாரிக்குக.

1) 31/3/2018 **இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று, இலாபநட்ட, பகிர்கணக்கு**

2) **பங்காளர் நடைமுறைக் க/கு**

3) **பங்காளர் மூலதன க/கு** 4) 31/3/2018 **இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று**

தேர்ச்சி 11.0: நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும் போதும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவார்.

தேர்ச்சி மட்டம் 11.1: இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் சட்டரீதியான பின்னணிகளைப் பகுப்பாய்வு செய்வார்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS)
Sri Lanka Accounting Standard

- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வெளியிடுவதற்காக கணக்கீட்டு தொழில்சார் அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழிகாட்டப்படுகின்ற நியதிகளும், கணக்கீட்டு நடைமுறைகளும், கொள்கைகளுமே கணக்கீட்டு நியமங்களாகும்.
- கணக்கீட்டு நியமமானது நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் ஏற்படக்கூடிய பல்வேறு தடைகளை அகற்றி சரியான நடைமுறைகளை வழிகாட்டுவதே பிரதான நோக்கம் ஆகும்
- 1995ம் ஆண்டு 15ம் இலக்கக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம் இலங்கை கணக்கீட்டு நியமங்களை உருவாக்கி வெளியிடுவதற்கு பொறுப்பான சட்டமாகக் காணப்படுகின்றது.
- இச் சட்டத்தின் பிரகாரம் நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
    - கணக்கீட்டு நியமக் குழு
    - இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பரிசீலனை சபை
    - இலங்கை கணக்காய்வு நியமங்கள் சபை

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பரிசீலனை சபை

SRI LANKA ACCOUNTING & AUDITING STANDARD MONETARY BOARD

இச் சபையானது 1995 ம் ஆண்டு 15 ம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டது.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பரிசீலனை சபையின் தொழிற்பாடுகள்

- கணக்கீட்டு நியமங்கள் தயாரித்தல், அவற்றை உறுதிப்படுத்தல் தொடர்பாக பட்டய கணக்காளர் நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்குதல்.
- குறிப்பிட்ட நிறுவனங்கள் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி, நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்றனவா? என்பதை பரிசீலனை செய்தல்.
- கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்

INSTITUTE OF CHARTERED ACCOUNTS OF SRI LANKA

இலங்கையில் கணக்கீட்டு நியமங்களை தயாரிப்பதிலும் அவற்றைப் பராமரிப்பு செய்வதிலும் அதிகாரம் பெற்ற பிரதான நிறுவனமாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

- தகைமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான பரீட்சைகளை நடத்துதலும்,
  அவற்றிற்குரிய பாடத்திட்டங்களை உருவாக்குதலும்.
- மாணவர் கல்வி, பயிற்சி வழங்கல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல்.
- தொழில்சார் நியமங்களைச் சரியான முறையில் பேணுதலும், நியமங்களைப் பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் விதப்புரைகளை அங்கத்தவர் களுக்கு அறிமுகப்படுத்துதலும்.
- கணக்கீட்டுப் பாடத்திற்கான ஆய்வுகள், ஊக்குவிப்புக்கள் என்பன மேற்கொள்ளல்.
- தொழில்சார் நலன்களையும் எதிர்பார்ப்புக்களையும் பாதுகாத்தல்.

இலங்கை கணக்கீட்டு நியமக் குழு

ACCOUNTING STANDARD COMMITTEE

- இக் குழுவானது 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமச் சட்டப்படி உருவாக்கப்பட்டது.
- கணக்கீட்டு நியமங்களை தயாரிப்பதற்கும், ஏற்கனவே உள்ள நியமங்களை மறுசீரமைப்பதற்கும், பிரசுரிப்பதற்கும் உதவுகின்ற நிறுவனமாகும்

நிறுவனங்கள் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதனால் ஏற்படும் அனுகூலங்கள்.

- நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மை அதிகரிக்கின்றது
- நியமங்களைப் பின்பற்றுவதனால் கணக்காளர்களை சட்டப் பிரச்சினைகளில் இருந்து தற்காக்கின்றன.

- கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் உள்ள பல்வேறு மாற்றுவழிகளின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது
- எல்லா விடயங்களிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிதிக் கூற்றுக்களை வெளிவருவதை உறுதி செய்கின்றது.
- முகாமையாளர்கள், கணக்காளர்கள் என்பவர்களுக்கு இடையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகள் தவிர்க்கப்படுகின்

க.பொ.த உயர் தரப் பாடத்திட்டத்தில் பின்வரும் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.

நியமங்கள்	விளக்கம்
LKAS - 1	நிதி அறிக்கைகளை முன்வைத்தல
LKAS - 2	சரக்கிருப்பு
LKAS - 7	காசுப்பாய்ச்சல்கூற்று
LKAS - 8	கணக்கீட்டுக் கொள்கை, மதிப்பீடுகளின் மாற்றங்களும் வழுக்களும்
LKAS - 10	அறிக்கையிடும் காலத்துக்குப் பின்னரான நிகழ்வுகள்
LKAS - 16	ஆதனம், பொறி மற்றும் உபகரணம்
LKAS – 17 /SLFRS - 16	குத்தகை
LKAS – 18 /SLFRS - 15	வருமானம்
LKAS - 37	ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்களும் சொத்துக்களும்

தேர்ச்சி மட்டம் 11.2: நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தைப் பகுப்பாய்வு செய்வார்

நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகம்

CONCEPTUAL FRAME WORK FOR FINANCIAL REPORTING

வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளை இனம்காணுதல், அளவிடுதல் போன்றவை தொடர்பான வரையறைகளை வழிகாட்டுவதே "நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகம்" எனப்படும். எண்ணக்கரு சட்டவாக்கத்தினை பின்பற்றி நிதிக் கூற்றுக் கள் த யாரித்து வெளியிடும் போது அத ன் நம்பிக்கைத்தன்மை யும் பொருத்தப்பாட்டுத்தன்மையும் உயர்வடைகிறது.

நிதிக் கூற்றுக்களின் வகைகள்

1. **பொது நோக்கத்துக்கான நிதிக் கூற்றுக்கள்**

   வணிகம் ஒன்றில் அக்கறை கொள்ளும் "அனைத்து தரப்பினரும்" பயன்படுத்தி பொருளாதார தீர்மானம் எடுப்பதற்காக தயாரிக்கப்படும் கூற்றுகள் பொது நோக்கத்துக்கான நிதிக் கூற்றுக்கள் எனப்படும்.

2. **விசேட நோக்கத்துக்கான நிதிக் கூற்றுக்கள்**

   முகாமைத்துவத்தின் தேவையின் பொருட்டு சகல விடயங்களையும் உள்ளடக்கி, முகாமையானது பல்வேறு தீர்மானங்களை எடுக்கக்கூடிய வகையில் விரிவாக தயாரிக்கப்படும் கூற்றுகள் விசேட நோக்கத்துக்கான நிதிக் கூற்றுக்கள் எனப்படும்.

எண்ணக்கரு ரீதியான சட்டகத்தின் பிரிவுகள்

1) நிதிக்கூற்றுக்களின் நோக்கம்
2) நிதிக்கூற்றுக்களின் தரரீதியான பண்புகள்
3) நிதிக்கூற்றுக்களின் அடிப்படைகள்
4) அடிப்படைகளுக்கான வரைவிலக்கணம்
5) அடிப்படைகளை இனங்காணல், அளவிடல்.

நிதிக்கூற்றுக்களின் நோக்கம்

- அறிக்கைப்படுத்தும் அலகொன்றில் தற்போது காணப்படுகின்றதும் எதிர்கால முதலீட்டாளர்கள், கடன் வழங்குனர்கள், ஏனைய கடன் கொடுத்தோர்கள் போன்றோர் அவ்வலகிற்குத் தேவையான வளங்களை வழங்குதல் தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்குவதே பொது நோக்க நிதி அறிக்கைப்படுத்தலின் நோக்கமாகும்.

- அறிக்கைப்படுத்தும் அலகொன்றின் நிதிநிலைமை, நிதிப் பெறுபேறு, நிதிநிலைமை மாற்றங்கள், காசுப்பாய்ச்சல்கள் என்பவை தொடர்பான தகவல்களை வழங்குவதே பொதுநோக்க நிதி அறிக்கைப்படுத்தலாகும். நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது ''**தொடர்ந்தியங்கும்**'' எனும் எடுகோள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

நிதித் தகவல்களின் தர ரீதியான பண்புகள்

01. அடிப்படைத் தரரீதியான பண்புகள்

I. பொருத்தமான தன்மை **(எதிர்வுகூறல், சான்றுப்படுத்தல், அளவிடுதல்)**

II. நம்பகத் தன்மை கொண்ட பிரதிநிதித்துவம் **(பூரணம், நடுநிலமை)**

02. மேம்படுத்த வேண்டிய தரரீதியான பண்புகள்

I. ஒப்பீட்டு ரீதியான தன்மை

II. சான்றுபடுத்தக்கூடிய தன்மை

III. காலத்திற்குப் பொருத்தமான தன்மை

IV. விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைக் கூறுகளும் வரைவிலக்கணங்களும்

அமைப்பு முறையையே நிதிக் கூற்றுக்களின் அடிப்படைக் கூறுகளின் மூலம் காட்டப்படுகின்றது. இவ்வடிப்படைக் கூறுகளின் மூலம் வழங்கப்படும் தகவல்களின் உதவியுடனேயே நிதி அறிக்கைப்படுத்தலின் நோக்கமானது அடைந்து கொள்ளப்படுகின்றது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நிதிக்கூற்று அடிப்படைகள் / மூலங்கள் ஐந்து வகைப்படும்.

- சொத்துக்கள்
- பொறுப்புக்கள்
- வருமானம்
- செலவினம்
- உரிமையாண்மை

நிதிக்கூற்று அடிப்படைகள்	விளக்கம்
சொத்துக்கள்	கடந்த காலக் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வொன்றின் விளைவொன்றாக உருவானதும் வணிகத்திற்கு எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்களைக் கொண்டு வரக்கூடிய திறனைக் கொண்டதும், வணிக அலகினால் கட்டுப்படுத்தக் கூடியதுமான வளங்கள் **சொத்துக்கள்** எனப்படும். **சொத்தொன்றில் அடிப்படைப் பண்புகள்** 01. எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திறன். 02. குறிப்பிட்ட வணிக அலகினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல். 03. கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிகழ்வுகளின் பெறுபேறாக ஏற்படல்.
பொறுப்புக்கள்	வணிகமொன்றில் கடந்த காலக் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வொன்றின்பெறுபேறாக உருவாகின்றதும், பொருளாதார அனுகூலங்களுடனான வளங்கள் வணிகத்திலிருந்து வெளிச் செல்லும் என எதிர்பார்க்கின்றதும், நிகழ்கால கடப்பாடுடையதும் என்பது **பொறுப்பு** எனப்படும். **பொறுப்பொன்றின் அடிப்படைப் பண்புகள்** 01. எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்கள் வெளிச்செல்லக்கூடிய நிலைமை காணப்படல். 02. இது தொடர்பில் நிகழ்காலத்தில் கடப்பாடொன்று காணப்படல். 03. கடந்தகாலக் கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வின் பெறுபேறொன்றாக உருவாகுதல்.
வருமானம்	நிதியாண்டில் வணிக அலகொன்றினுள் உட்பாய்ச்சப்படுகின்ற அல்லது சொத்தினை அதிகரிக்கக் கூடிய அல்லது பொறுப்பைக் குறைக்கக்கூடிய தன்மைகளில் உரிமையாளர்களின் பங்களிப்பின்றி உரிமையாண்மையை அதிகரிக்கச் செய்வதற்குக் காரணமாகின்ற பொருளாதார அனுகூலங்கள் **வருமானங்கள்** எனப்படும்.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

செலவினம்	நிதியாண்டில் வணிக அலகொன்றின் பொதுவான செயற்பாடுகளிலிருந்து வெளிச்செல்லக் கூடிய அல்லது சொத்தில் குறைவை ஏற்படுத்தக்கூடிய அல்லது பொறுப்பை அதிகரிக்கக்கூடிய தன்மையுடன் உரிமையாளர்களின் பற்றுக்கள் தவிர்ந்த உரிமை யாண்மையில் குறைவு ஏற்படுத்துவதற்குக் காரணமாயமைகின்ற பொருளாதார அனுகூலங்களின் குறைவே **செலவுகள்** எனப்படும்.
உரிமையாண்மை	வணிகத்தின் சொத்துக்களிலிருந்து அதன் சகல பொறுப்புக்களையும் கழித்த பின்னர் சொத்துக்களில் எஞ்சியிருக்கும் பகுதி **உரிமையாண்மை** ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை போன்ற உருப்படிகள், அலகொன்றின் நிதிநிலைமையினை அளவிடுவதில் நேரடியாகத் தொடர்புபடும். **தனியுடமையின் உரிமையாண்மை** = மூலதனக் கணக்கு மீதி **பங்குடமையின் உரிமையாண்மை** = பங்காளர் மூலதனக் கணக்கு மீதி + பங்காளர் நடைமுறைக் கணக்கு மீதிகள் **கம்பனியின் உரிமையாண்மை** = கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் + ஒதுக்கங்கள் + பகிரப்படாஇலாபம்

அடிப்படைகளை இனங்காணல்

நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கேற்ப அடிப்படைகளை இனங்காண்பதற்கு பின்வரும் நியதிகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

- அடிப்படைகள் வரைவிலக்கணத்திற்கு ஏற்புடையதாக இருத்தல்.
- அந்த உருப்படிகளுக்கு ஏற்ப எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் வணிக அலகினுள் உட்பாயக்கூடிய அல்லது வணிக அலகிலிருந்து வெளிச் செல்லக் கூடிய சாத்தியம் இருத்தல் வேண்டும்.
- அவ்வுருப்படியின் கிரயத்தை அல்லது பெறுமதியினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல்.

அடிப்படைகளை அளவிடல்

நிதி அறிக்கைகளின் நிதிப் பெறுமதியினைத் தீர்மானிக்கும் செயற்பாடே அடிப்படைகளை அளவிடல் எனப்படும்.

எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கேற்ப அடிப்படைகளை அளவிடுவதற்குப் பின்வரும் முறைகளைப் பயன்படுத்த முடியும்.

- வரலாற்றுக் கிரயம் (Historical Cost)
- நடைமுறைக் கிரயம் (Current Cost)
- தேறிய தேறத்தக்க பெறுமதி (Net Realisable Value)
- நிகழ்காலப் பெறுமதி (Present Value)

பயிற்சி

01. பின்வருவனவற்றுள் எவை நிதிக் கணக்கீட்டுக்கான எண்ணக்கரு சட்டகத்தின்படி சொத்தொன்றின் குணாதிசயங்களாகும்.

A. இது நிறுவனமொன்றினால் கட்டுப்படுத்தப்படும் மூல வளமாகும்.
B. இதனூடாக அதன் எதிர்கால பொருளாதார நன்மைகள் அந்நிறுவனத்துள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
C. இதன் கிரயம் அல்லது பெறுமதியை நம்பகரமாக அளவிடமுடியும்.

1. B மாத்திரம் 2) A, B ஆகியன மாத்திரம்
3) A, C ஆகியன 4) B, C ஆகியன 5) A, B, C ஆகியன

02. பின்வருவனவற்றுள் எது இலங்கையில் பின்பற்றப்படும் ''நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தின் படி'' நிதித் தகவல்களின் ''அடிப்படை'' பண்புசார் குணாதிசயங்களாகக் கருதப்படுகின்றது?

1) பொருத்தப்பாடு மற்றும் உறுதிப்படுத்தும் (மெய்மையாகும்) தன்மை
2) நம்பகத்தன்மை மற்றும் காலந்தவறாமை
3) விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மை
4) ஒப்பீட்டுத் தன்மை மற்றும் உண்மையான பிரதிநிதித்துவம்
5) பொருத்தப்பாடு மற்றும் உண்மையான பிரதிநிதித்துவம்

03. இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் ''நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தின் படி பின்வருவனவற்றுள் எது'' நிதித் தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்களில் ஒன்று அல்ல

1) ஒப்பீட்டுத் தன்மை
2) உண்மையான பிரதிநிதித்துவம்
3) மெய்மையாக்கும் தன்மை
4) காலந்தவறாமை
5) விளங்கிக்கொள்ளும் தன்மை

04. கம்பனியொன்று 10 வருடங்களுக்கு முன்பு நிலமொன்றை வாங்கியது. இன்றுள்ள இதன் நியாய விலையானது கிரயத்தில் 5 மடங்கு கொண்டதாகும். நிலமானது நியாய விலையில் மீள் மதிப்பீடு செய்யப்படுமாயின், இவ்வாறு செய்வதனை பின்வருவனவற்றுள் எக்கணக்கீட்டுத் தகவல்களின் பண்புசார் சிறப்பியல்பு பிரதிபலிக்கும்?

1) ஒப்பீட்டுத்தன்மை
2) பொருத்தப்பாடு
3) நம்பகத்தன்மை
4) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
5) விளங்கிக் கொள்ளும் தன்மை

05. நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தினை (CONCEPTUAL FRAME WORK) விருத்தி செய்வதற்குரிய காரணங்கள் பின்வருவனவற்றுள் எது?

A) கணக்கீட்டு நியமங்களை விருத்தி செய்வதற்கான அடிப்படையை வழங்குவதற்கு
B) நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துவோர் அதனை சிறந்த முறையில் விளங்கிக் கொள்வதற்கு
C) பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் இல்லாத நிலையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கு
D) நிதித் தகவல்களின் தரத்தினை உயர்த்துவதற்கான கோட்பாட்டு

அடிப்படையை வழங்குவதற்கு
1) A, B மாத்திரம்
2) C, D ஆகியன மாத்திரம்
3) A, B, D ஆகியன மாத்திரம்
4) A, B, C ஆகியன மாத்திரம்
5) A, B, C, D ஆகியன எல்லாம்

06. கணக்கீட்டு எண்ணக்கருச் சட்டகம் (Accounting Frame Work) என்றால் என்ன?
07. நிதிக்கூற்றுக்கள் எந்த நோக்கத்திற்காக தயாரிக்கப்படலாம்?
08. கணக்கீட்டு எண்ணக்கரு ரீதியான சட்டகத்தின் பிரிவுகள் / வரையறுக்கப்படும் விடயங்கள் யாவை?
09. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வெளியிடுவதற்காக பின்பற்றப்படுகின்ற அடிப்படை எடுகோள் எது?
10. நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் கூறுகளை அளவிடுவதற்குப் பயன்படும் அளவீட்டு அடிப்படைகள்/முறைகள் யாவை?
11. கணக்கீட்டின் மூலம் வழங்கப்படும் பிரதான தகவல்களிலிருந்து எடுக்கப்படும் பிரதான தீர்மானங்கள் எவை?
12. நிதிக்கூற்றுக்களின் பிரதான நோக்கம் யாது?
13. நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பினை யாரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்?
14. இலாபம்.'.நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் உள்ள செலவுகளினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
15. **LKAS 01**இற்கமைய வெளிப்படுத்தல்கள் யாவை?

தேர்ச்சி மட்டம் 11.3: **கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமும் வழுக்களும் தொடர்பிலான கணக்கு வைப்புக்களையும் வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்வார்.**

கணக்கீட்டுக் கொள்கைகள் (Accounting Policies)

நிறுவனமொன்றினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும் போதும் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படைகள், உரிய கோட்பாடுகள், மரபுகள், சட்ட திட்டங்கள், பிரமாணங்கள் என்பன கணக்கீட்டுக் கொள்கைகள் எனப்படும்.

கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் (Changes in Accounting Estimates)

சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக உத்தேச எதிர்கால நலன்கள், கடப்பாடுகள் என்பன எதிர்காலத்தில் காணப்படக்கூடிய நிலைமைக்கேற்ப மதிப்பிடும் போது சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் தேறிய பெறுமானத்திற்குத் தேவையான சீராக்கங்களே கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் என அழைக்கப்படும்.

வழுக்கள் (Errors)

நிதியாண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்டதும், அந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும்போதும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது என நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய தகவல்கள் பயன்படுத்தப்படாமை அல்லது உரியவாறு பயன்படுத்தப்படாமையினால் முன்னைய நிதியாண்டொன்றில் அல்லது பலவற்றில் விடுபடுதல் களும் தகவல்களைப் பிழையாகக் காட்டியிருத்தலுமே வழுக்கள் எனப்படும்.

உதாரணம்:
எண்கணித ரீதியான வழுக்கள், கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிழையாகப் பயன்படுத்துதல், விடுபாடுகள், விடயங்களைப் பிழையான முறையில் விளங்கியிருத்தலும் மோசடிகளும்.

கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல்

இரு முறைகளில் தெரிவு செய்யப்படும்.

01. கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் தொடர்பில் கணக்கீட்டு நியமங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பின், அந்நியமத்திற்கமையத் தெரிவு செய்தல்.

02. குறித்த கணக்கீட்டு நியமம் இல்லாதபோது முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்
பட்ட கொள்கைகளுக்கேற்பத் தெரிவு செய்தல்.

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றம் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள்

01. புதிய கணக்கீட்டு நியமத்தின் தேவையின் அடிப்படையில்.

02. நிறுவனத்தின் நிதி நிலைமை அல்லது வினைத்திறன் அல்லது காசுப்பாய்ச்சல் என்பன முன்னரை விடக் கூடிய நம்பகத்தன்மை கொண்ட தகவல்களாக வழங்குவதற்கு மாற்றங்கள் செய்யவேண்டிய தேவை ஏற்படும்போது.

கணக்கீட்டு மதிப்பீடொன்றில் மாற்றம் செய்யும்போது கணக்குகள் செய்யப்படும் முறை

01. மாற்றமானது தாக்கத்தை ஏற்படுத்துவது குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே ஆயின், அதனை அந்நிதியாண்டின் இலாபத்தில் அல்லது நட்டத்தில் சீராக்குதல்
வேண்டும்.

உ-ம் - 1. வியாபார வருமதிகளின் மதிப்புக் குறைப்பு நட்டம் (அறவிடமுடியாக் கடன்)
2. வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களின் படிகள் ஏற்பாடு (ஐயக்கடன் ஏற்பாடு)

02. மாற்றமானது அது இடம்பெற்ற நிதியாண்டிலும், எதிர்வரும் நிதியாண்டுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துமாயின், அந்நிலைமைகளை அவ்வவ் நிதியாண்டுகளின் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உள்ளடக்குவதுடன் நடப்பாண்டிலும் எதிர்வரும்

ஆண்டுகளிலும் ஏற்றவாறு இனங்காணப்படல் வேண்டும்.

உ-ம் -ஆதனம், பொறி மற்றும் உபகரணத் தேய்வானது பயன்படு ஆயுட்கால மாற்றத்திற்கேற்ப வருடாந்த பெறுமானத்தேய்வின் அளவில் ஏற்படுகின்ற மாற்றம்.

03. மாற்றமானது சொத்து பொறுப்புக்களில் தாக்கத்தையேற்படுத்துமாயின் அல்லது உரிமையாண்மை உருப்படியுடன் தொடர்புடையதாகயிருப்பின், அம்மாற்றம் இடம்பெற்ற நிதியாண்டின் சொத்து பொறுப்புக்களில் அல்லது உரிமையாண்மை உருப்படியின் தேறிய பெறுமானத்தில் சீராக்கி மாற்றங்களை அறிக்கைப்படுத்துதல் வேண்டும்.

வெளிப்படுத்தல்களுக்கான உதாரணங்கள்:

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றம்	கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றம்	கடந்த நிதியாண்டின் வழுக்கள்
கணக்கீட்டுக் கொள்கை மாற்றத்தின் தன்மை.	மதிப்பீட்டு மாற்றங்களுக்கான காரணம்.	கடந்த நிதியாண்டின் வழுக்களின் தன்மை.
நடப்பாண்டு, எதிர்கால நிதியாண்டுகளில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்.	மதிப்பீடுகளில் மாற்றம் செய்வதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கம்.	முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை கடந்த நிதியாண்டின் ஆரம்பத்திலேயே சீராக்குதல்.
		எக்காலப்பகுதியிலிருந்து எக் காலம் வரை வழுக்கள் திருத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பான விபரம்

தேர்ச்சி மட்டம் 11.4: இருப்புத் தொடர்பில் அடிப்படை எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்து இருப்பினைப் பதிவு செய்வார்.

இருப்பு

- பொதுவாக வணிக நடவடிக்கைகளின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் முடிவுப்பொருள் இருப்பு.
- இவ்வாறான விற்பனைகளுக்காக உற்பத்தியாகிக் கொண்டிருக்கும் நடைமுறைவேலை இருப்பு.
- உற்பத்திச் செயன்முறையில் அல்லது சேவை வழங்கலின்போது நுகர்விற்காக வைக்கப்பட்டிருக்கும் மூலப்பொருட்களின் இருப்பு.

இருப்புக் கிரயம்

- கொள்வனவுக் கிரயம்
- மாற்றல் கிரயம்
- இருப்பினை நிகழ்கால இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஏனைய செலவுகள்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேறிய தேறத்தக்க பெறுமானம்

பொதுவாக வணிக நடவடிக்கைகளின்போது இருப்பொன்றை விற்பனை செய்யக்கூடிய மதிப்பீட்டு விற்பனை விலையிலிருந்து அந்த இருப்பினை மேலும் மேம்படுத்துவதற்காக ஏற்கவேண்டி ஏற்படுகின்ற மதிப்பீட்டுக் கிரயத்தினையும் மதிப்பீட்டு விற்பனை விலையையும் குறைத்த பின்னர் கிடைக்கும் பெறுமானமாகும்.

தேறிய தேறத்தக்க பெறுமானம் = **மதிப்பிடப்பட்ட விற்பனை விலை** - (இருப்பை மேலும் விற்பனைக்குத் தயாராக்குவதற்கு ஏற்படும் செலவுகள் + மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவுகள்)

கணக்கீட்டு நியமம் 02 இற்கமைய வணிகத்தின் இருப்பு அளவீடு

கிரயம், தேறிய தேறத்தக்க பெறுமானம் ஆகிய இரண்டில் குறைந்த பெறுமானத்தின் அடிப்படையிலேயே இருப்புக்கள் அளவிடப்படல் வேண்டும்.

தேறிய தேறத்தக்க பெறுமானத்தைத் தீர்மானிக்கும் முறை

இருப்புக்களின் கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமானம் என்பவற்றில் குறைந்த பெறுமானத்தில் இருப்பினைக் கணிப்பிடும் பொழுது இருப்புக் கிரயம், தேறிய தேறத்தக்க பெறுமானம் என்பவற்றைத் தீர்மானிப்பதற்குரிய அடிப்படைகளாகப் பின்வரும் இரு முறைகள் பின்பற்றப்படும்.

(1) உருப்படி முறை
(2) தொகுதி முறை

கிரயச் சூத்திரம்

- இருப்பினைக் கிரயத்தில் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமானத்தில் மதிப்பிடுவதற்கு முன்னைய இருப்பானது எந்தளவு கொள்வனவுகளில், உற்பத்தியில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது என்பதனைத் தீர்மானித்தல் வேண்டும்.
- இறுதி இருப்பானது எந்தளவு கொள்வனவுகளில் அல்லது உற்பத்திகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவு செய்வதற்கான அடிப்படை கிரயச் சூத்திரத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.
- விசேடமாக இனங்காணக்கூடிய இருப்புத் தவிர்ந்த ஏனைய வியாபார இருப்புக்களின் கிரயத்தைக் கணிப்பிடுவதற்காகப் பின்வரும் கிரயச் சூத்திர நியமங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

01. முதல் உள் முதல் வெளி முறை (First in First Out - FIFO)
02. நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய முறை (Weighted average cost - WAC)

முதல் உள் முதல் வெளி முறை (FIFO)

இம்முறையில் முதலாவதாகக் களஞ்சியசாலைக்குப் பெறப்படும் இருப்பானது முதலாவதாகக் களஞ்சியசாலையிலிருந்து விநியோகிகப்படும் என்ற கருதுகோள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கமைய இறுதியாகப் பெற்ற பொருள்களின் அளவே இறுதி இருப்பில் உள்ளடக்கப் பட்டிருக்கும். ஆயினும், நடைமுறையில் முதலாவதாகப் பெற்ற பொருட்களை முதலாவதாக விநியோகிக்கும் தேவை இல்லாதிருப்பதுடன் முதலாவதாகப் பெற்ற பொருள்களின் விலையினை அடிப்படையாகக்கொண்டு விநியோகங்களின் பெறுமானம் கணிப்பிடப்படும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய முறை (WAC)
இம்முறையில் குறித்த திகதியில் களஞ்சியசாலையிலுள்ள இருப்புக்களின் நிறை இடப்பட்ட சராசரிப் பெறுமானம் பொருளின் விநியோக விலையாகத் தீர்மானிக்கப்படும். குறித்த திகதியிலுள்ள இருப்பின் மொத்தப் பெறுமதி யினை இருப்பு அலகுகளின் எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் நிறையிட்ட சராசரி விலை கணிக்கப்படும்.

$$\text{இருப்பின் மொத்தப் பெறுமதி} = \frac{\text{நிறையிட்ட சராசரி விலை}}{\text{இருப்பு அலகுகளின் எண்ணிக்கை}}$$

இருப்பைச் செலவொன்றாக இனங்காணல்.

இருப்பானது இரு சந்தர்ப்பங்களில் செலவினமொன்றாக இனங்காணப்படும்.

01. இருப்பு விற்பனை செய்யப்படும் பொழுது விற்பனை செய்த இருப்புக்களின் விற்பனைக் கிரயம் செலவினமாக இனங்காணப்படும்.

02. இருப்பின் கிரயத்தைத் தேறிய தேறத்தக்க பெறுமானத்திற்குக் குறைத் தெழுதும்போது ஏற்படும் நட்டமானது செலவினமொன்றாக இனங்காணப்படும்.

இருப்புத் தொடர்பான தகவல்களை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்.

01. இருப்பினை மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளும் பயன்படுத்தப்பட்ட கிரயச் சூத்திரமும்.
02. நிதியாண்டில் செலவினமொன்றாக இனங்காணப்பட்ட இருப்புக்கள்.
03. தேறிய தேறத்தக்க பெறுமானத்தில் இருப்பினைக் கணிப்பிடும்பொழுது வருடத்தினுள் செலவினமொன்றாக எழுதப்பட்ட பெறுமானம்.
04. பொறுப்பொன்றிற்குப் பிணையாக வழங்கப்பட்ட இருப்புக்களின் பெறுமானம்.

பயிற்சிகள்

01. இருப்புக்கள் என்பதனை வரையறுக்குக?
02. இருப்புக்களின் கிரயம் என்றால் என்ன? இதனுள் உள்ளடங்கும் கிரயங்கள் யாவை?
03. இருப்புக்களின் கிரயத்தினுள் உள்ளடக்கப்படாத கிரயங்கள் யாவை?
04. இருப்புக்களின் கிரயத்தினை அளவிடுவதற்கு பயன்படும் நுட்பமுறைகள் / கிரயச்சூத்திரங்கள் யாவை?
05. இருப்புக்களின் தேறக்கூடிய நிகரப்பெறுமதி என்றால் என்ன?
06. இருப்புக்களை செலவாகக்காட்டும் சந்தர்ப்பங்கள் யாவை?
07. இருப்புக்களுடன் தொடர்புபடுகின்ற இரண்டு எண்ணக்கருக்களும் அவற்றுக்கான விடயங்களும் யாவை?
08. இருப்புக்களின் கிரயத்தினை தேறக்கூடிய நிகரப்பெறுமதிக்கு மாற்றுவதற்கான இரண்டு அடிப்படைகள் யாவை?
09. நிதிக்கூற்றுக்களில் இருப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் யாவை?
10. மோட்டார் வாகன வியாபாரக் கம்பனியொன்று கார் ஒன்றினை 2020 மே 01 இல் ரூபா.1300000 இற்கு கொள்வனவு செய்ததுடன் தரகருக்கு தரகாக ரூபா.20000 ஐ செலுத்தியது. அரசாங்கத்தின் இறக்குமதி வரி திடீர் குறைப்பின் காரணமாக 2020 யூன் 30 இல் இக்காரின் விற்பனைப் பெறுமதி ரூபா.1000000

என மதிப்பீடு செய்யப்பட்டது. இத்திகதியில் காரின் மதிப்பிடப்பட்ட விற்பனைத் தரகு ரூபா.50000 ஆகும்.
பின்வருவனவற்றைக் கணிக்குக.

1. இக்காரின் கிரயம்
2. இக்காரின் தேறக்கூடிய நிகரப் பெறுமதி /முன் கொண்டு செல்லும் பெறுமதி
3. 30 யூன் 2020 இல் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படும் காரின் /இருப்பின் பெறுமதி

11. வணிகமொன்றின் 2019.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இறுதி இருப்புத் தொகையானது ரூபா.60000 இனால் அதிகமாகவும் 2020.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இறுதி இருப்புத் தொகையானது ரூபா.20000 இனால் குறைவாகவும் கணிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட இரண்டு தவறினால் கீழ்வருவனவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் குறிப்பிடுக. (அதிகரிக்கும்/ குறையும்/ மாற்றமில்லை)

    a. 31.03.2019 ஆண்டுக்கான தேறிய இலாபம்
    b. 31.03.2019 ஆண்டுக்கான விற்பனைக்கிரயம்
    c. 31.03.2019 ஆண்டுக்கான உரிமையாண்மை
    d. 31.03.2020 ஆண்டுக்கான தேறிய இலாபம்
    e. 31.03.2020 ஆண்டுக்கான விற்பனைக்கிரயம்
    f. 31.03.2020 ஆண்டுக்கான உரிமையாண்மை

12. வியாபாரமொன்றின் 31.03.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானக்கூற்றின் படி மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பன முறையே ரூபா.1680000, ரூபா.520000 ஆகும். அதனைத் தொடர்ந்து 01.04.2019 இல உள்ளவாறான சரக்கிருப்புக்கள் ரூபா.40000 குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், 31.03.2020 இல் உள்ளவறான சரக்கிருப்புக்கள் ரூபா.60000 ஆல் கூட்டி மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் நிறுவன உரிமையாளருக்கு சொந்தமான கட்டிடத்தை நிறுவன நோக்கத்திற்காகப் பயன்படுத்தியமைக்காக நிறுவனத்தினால் உரிமையாளருக்கு செலுத்தப்பட்ட வாடகை ரூபா.120000 பதியப்பட்டிருக்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.
31.03.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான சரியான மொத்த இலாபம், தேறிய இலாபம் என்பவற்றைக் கணிக்குக.

13. பிரியா உற்பத்தி நிறுவனத்தில் காணப்பட்ட உற்பத்திப்பொருட்கள் தொடர்பான விபரம் வருமாறு:

தொகுதி	உற்பத்திப் பொருள்	நேர்ப் பொருள் (ரூபா)	நேர்க்கூலி (ரூபா)	உற்பத்தி மேந்தலை (ரூபா)	எதிர்பார்க்கப்படும் விற்பனைச் செலவு (ரூபா)	எதிர்பார்க்கப்படும் விற்பனைப் பெறுமதி (ரூபா)
A	A1	36000	24000	40000	14000	112000
	A2	40000	30000	50000	20000	144000
B	B1	24000	16000	20000	8000	64000
	B2	40000	10000	20000	12000	96000

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

வேண்டப்படுவது:

தொகுதி அடிப்படையிலும், உருப்படி அடிப்படையிலும் LKAS 02 இற்கமைய நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்படும் இருப்பின் பெறுமதியும் (கொண்டு செல் பெறுமதி) பொருத்தமான நாட்குறிப்பேட்டுப்பதிவினையும் தருக.

14. நித்தியா நிறுவனத்தின் 2020 யூலை மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

திகதி	விபரம்	அலகு விலை (ரூபா)	தொகை (அலகுகள்)
2020 யூலை 01	மீதி	50	1000
2020 யூலை 01	கொள்வனவு	60	6000
2020 யூலை 05	கொள்வனவு	80	3000
2020 யூலை 11	விற்பனை	150	8000

01. வணிகம் இருப்பினை விலையிடுவதற்கு FIFO முறையினை பின்பற்றுமாயின் விற்பனைக்கிரயம், இறுதி இருப்பின் பெறுமதி, மொத்த இலாபம்
02. வணிகம் இருப்பினை விலையிடுவதற்கு WAC முறையினை பின்பற்றுமாயின் விற்பனைக்கிரயம், இறுதி இருப்பின் பெறுமதி, மொத்த இலாபம்

தேர்ச்சி மட்டம் 11.5: ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்குரிய அடிப்படை எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்து அவற்றை அறிக்கைப்படுத்துவார்.

• கிரயம் (Cost):

சொத்தொன்றைக் கையகப்படுத்திக் கொண்ட சந்தர்ப்பத்தில் அல்லது உரிய சொத்தினை நிர்மாணிக்கின்ற சந்தர்ப்பத்தில் அதனைக் கையகப்படுத்திக் கொள்வதற்காக அல்லது நிர்மாணிப்பதற்காகச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்துவதற்கு உடன்பட்ட காசு அல்லது காசுக்கு சமமானவை அல்லது வழங்கப்பட்ட வேறு வழங்கல்களின் நியாயமான பெறுமதி ‘‘கிரயம்’’ எனப்படும்.

• பெறுமானத்தேய்வு (Depreciation):

சொத்தொன்றின் தேய்விடக்கூடிய பெறுமதியினை அச்சொத்தினைப் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலங்களுக்கிடையே முறையாகப் பகிர்வு செய்தல் ‘‘பெறுமானத் தேய்வு’’ எனப்படும்.

• தேய்விடக்கூடிய பெறுமதி (Depreciable Value):

சொத்தொன்றின் கிரயம் அல்லது கிரயத்திற்குப் பதிலாக இனங்காணப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட பெறுமதியிலிருந்து இழிவுப் பெறுமதியினைக் கழித்த பின்னர் வரும் பெறுமதி ‘‘தேய்விடக்கூடிய பெறுமதி’’ எனப்படும்.

• கொண்டு செல் பெறுமதி (Carrying Amount):

சொத்தொன்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியிலிருந்து திரண்ட தேய்வினையும் திரண்ட இழப்பீட்டு நட்டத்தையும் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமதி சொத்தின் கொண்டு செல் பெறுமதியாகும். இது புத்தகப் பெறுமதி, தேறிய பெறுமதி எனவும் அழைக்கப்படும்.

• நியாயமான பெறுமதி (Fair Value):

அறிவும் விருப்பமும் உள்ள பிரிவினருக்கிடையில் சொத்தொன்றைப் பரிமாற்றுவதற்கு அல்லது பொறுப்பொன்றினை மீட்பதற்கு இணங்கப்பட்ட பெறுமதி ''நியாயமான பெறுமதி'' ஆகும்.

• இழிவுப் பெறுமதி (Residual Value):

சொத்தொன்று தற்போதுள்ள நிலைமையில் ஆயுட்கால முடிவிலும் காணப்படுமா? அந்நிலைமையை அடைந்திருந்தால் அதனை அகற்றுவதன் மூலம் நிகழ்காலத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து சொத்தினை அகற்று வதற்கு ஏற்படும் என எதிர்பார்க்கின்ற கிரயத்தினை கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமதி ''இழிவுப் பெறுமதி'' ஆகும்.

• பயன்தரு ஆயுட்காலம் (Useful Life):

நிறுவனமொன்று சொத்தினைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற காலப்பகுதி அல்லது அச்சொத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற வெளியீட்டு அலகுகளின் எண்ணிக்கை ''பயன்தரு ஆயுட்காலம்'' எனப்படும்.

• இனங்காணல்:

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளைச் சொத்தாக இனங்காண்பதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

(1) உருப்படியொன்றுடன் இணைந்த பொருளாதாரநலன்கள் எதிர்காலத்தில் வணிகத்தினுள் உட்பாய்ந்து வரக்கூடிய தன்மை காணப்படல்வேண்டும்.

(2) அச்சொத்திற்கு ஏற்பட்ட கிரயத்தை வணிகத்தினால் நம்பகரமான முறையில் கணிப்பிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

• சகல ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு ஏற்பட்ட கிரயத்தை வணிகமானது அவை கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்திலேயே இனங்காணுதல் வேண்டும்.

இக்கிரயமானது இரண்டு வகைப்படும்.

(1) ஆரம்பத்தில் ஏற்பட்ட கிரயம்

(2) பிற்காலத்தில் ஏற்படும் கிரயம்

• ஆரம்பக் கிரயம் (Initial Cost):

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை கையேற்பதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட செலவுகள் சொத்தொன்றாகக் கருதி மூலதனமாக்கப்படல் வேண்டும். இச்செலவானது சொத்தினை உத்தேசப் பாவனைக்குப் பயன்படுத்தும் வரையில் கட்டாயமாக ஏற்றல் வேண்டும்.

• பிற்காலக் கிரயம் (Subsequent Cost):

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கையேற்ற பின்னர் ஏற்படும் கிரயமானது பின்வருமாறு இரு வகையாக வகைப்படுத்தி இனங்காணப்படல் வேண்டும்.

(1) மூலதனச் செலவு

(2) வருமானச் செலவு

• மூலதனச் செலவு

சொத்தொன்றின் பயன்படு ஆயுட்காலம் சொத்தொன்றின் இயலளவு அல்லது உற்பத்திப் பண்டங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு அல்லது உற்பத்திக்கு முன்னர்

ஏற்படுகின்ற செலவினைக் குறைப்பதற்கு உதவுகின்ற புதுப்பித்தல்கள் அல்லது துணைப் பாகங்களை பொருத்துவதற்கு ஏற்படுகின்ற செலவுகளை மூலதனச் செலவாகக் கருதி சொத்துக் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.

- **வருமானச் செலவு**

குறித்த சொத்தினை உரிய முறையில் பேணிச் செல்வதற்கு ஏற்படுகின்ற கிரயமாகும். உதாரணம்:- இயந்திரப் பராமரிப்புச் செலவு, கட்டட நிறப்பூச்சிடல் செலவு.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை முதன்முதலாக இனங்காணும் போதானகணக்கீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தை ஆரம்பத்தில் இனங்காணும் போது அது பின்வரும் உருப்படிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

(அ) ஆரம்ப கொள்வனவுக் கிரயம்

(வியாபாரக் கழிவும் மானியங்களும் கழித்த பின்னர் இறக்குமதித் தீர்வை வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, மீளச் செலுத்தப்படாத ஏனைய வரிகள், கப்பல் கட்டணம், காப்புறுதிக் கட்டணம் என்பன.)

(ஆ) சொத்தினை உத்தேச நிலைமைக்கும் இடத்திற்கும் மாற்றும் வரை ஏற்படும் எனக் கருதப்படுகின்ற நேரடியாக ஏற்படுகின்ற கிரயமாகும்.

உதாரணம்:- - சொத்தொன்றினை நிர்மாணித்தல் / கையகப்படுத்தலால் ஏற்படும் செலவுகள்.

- வேலைத்தளத்தை ஒழுங்கமைப்பதற்கான செலவுகள். (பழைய இயந்திர - அகற்றல் செலவு)
- ஆரம்பப் போக்குவரத்து மற்றும் இடமாற்றம் செய்யும் செலவுகள்.
- பொருத்துதல், ஒன்றுசேர்த்தல் என்பதற்கான செலவுகள்.
- ஒருமுறை பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஏற்படும் தேறிய செலவுகள்.
- தொழில்சார் கட்டணங்கள்.

(இ) சொத்தினை ஆயுட்கால முடிவில் பகுதிகளாகப் பொருத்துவதற்கும் அகற்றுவதற்கும் ஏற்படும் என எதிர்பார்க்கும் கிரயம்.

- **இனங்கண்ட பின்னர் மதிப்பிடல்**

வணிகமொன்று முதன்முதலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கிரயத்தில் இனங்கண்ட பின்னர் பின்வரும் இரு மாதிரிகளில் ஒரு மாதிரியினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

- கிரய மாதிரி
- மீள்மதிப்பீட்டு மாதிரி

- மீள்மதிப்பீட்டு மாதிரி முறையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பின்வருமாறு கணக்கு வைக்கப்படும்.

திரண்ட தேய்வினைச் சொத்தின் தேறிய பெறுமானத்திற்கெதிராக பதிவழித்து சொத்தில் முன்கொண்டு செல் பெறுமதியினை மீள்மதிப்பீட்டுப் பெறுமதியாக கவனத்தில் கொள்ளப்படுகின்ற முறையாகும்.

Note:

மீள்மதிப்பீட்டு மிகையின் கணக்கீட்டு பிரயோகம்

- ❖ மீள் மதிப்பீட்டு மிகையானது இலாபம் / நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் ஏனைய முற்றடக்க வருமானத்தின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும்.
- ❖ கடந்த காலப்பகுதியில் மீள்மதிப்பீட்டுக் குறைவு செலவாக முற்றடக்க வருமானக்கூற்றில் இனம் காணப்பட்ட பின் அச்செலவுக்காக தற்போதைய மீள்மதிப்பீட்டு மிகை எதிரீடு செய்யப்பட்டு ஏனைய செயற்பாட்டு வருமானமாக காட்டப்படுதல் வேண்டும். **(வெளிப்படுத்தும் போது ஏனைய செயற்பாட்டுக்கிரயத்தில் கழித்தல் வேண்டும்)**
- ❖ எதிரீடு செய்யப்பட்ட பின் மீள்மதிப்பீட்டு மிகை எதுவும் இருப்பின் ஏனைய முற்றடக்க வருமானத்தின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும்

மீள்மதிப்பீட்டு குறைவின் கணக்கீட்டு பிரயோகம்

- ❖ மீள்மதிப்பீட்டுக் குறைவானது ஒரு செலவீனமாக / நட்டமாக இலாபம், நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் ஏனைய செயற்பாட்டுக்கிரயத்தின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும்.
- ❖ கடந்த காலப்பகுதியில் குறித்த சொத்து தொடர்பாக மீள் மதிப்பீட்டு மிகை வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அம்மிகைக்கு எதிராக பதிவழிக்கப்படல் வேண்டும். (ஏனைய முற்றடக்க வருமானத்தின் கீழ்)

பயிற்சிகள் MCQ

01. இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 16 (LKAS-16) இன் படி ஆதனம், பொறி, உபகரணம் போன்ற சொத்துக்களுகான பெறுமானத் தேய்வு தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது சரியானதாகும்?

1. பொறுமானத்தேய்வு என்பது சொத்தொன்றின் கிரயத்தை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் முறையாகப் பகிர்வு செய்வதாகும்.
2. ஒரு காலத்திற்கான பெறுமானத்தேய்வுக் கட்டணமானது அச்சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளால் தீர்மானிக்கப்படுகிறது.
3. ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றமானது காலமொன்றிற்கான பெறுமானத் தேய்வு கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாற்றாது.
4. சொத்துக்களைப் பழுதுபார்த்தும் கொண்டுவரின் அச்சொத்துகளுக்குப் பெறுமானத்தேய்விட தேவையை இல்லாததாக்குகின்றது.
5. சொத்துக்களிற்கு பெறுமானத்தேய்விடுவதற்கு பயன்படுத்தப்படும் முறையானது, அச்சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும எதிர்கால பொருளாதார நன்மைகளை நுகரும் விதத்தினைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

02. இலங்கை கணக்கீட்டு நியமம் இல 16 இன்படி ஈட்டப்பட்ட ஆதனம், இயந்திரம், உபகரணம் ஆகிய சொத்துக்களை ஆரம்பத்தில் இனங்காணும் போது அவைகள்

1. நியாயமான விலையில் மதிப்பிடல் வேண்டும்.

2. கிரயத்தில் மதிப்பிட வேண்டும்
3. நியாயமான பெறுமதியில் அல்லது கிரயத்தில் மதிப்பிடல் வேண்டும்
4. நியாயமான பெறுமதி, கிரயம் இவற்றில் எது குறைவோ அதன்படி மதிப்பிடல் வேண்டும்
5. நிகழ்காலப் பெறுமதி

வினாப்பத்திரம் - II

03. **LKAS** 16 இன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்றால் என்ன?

04. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயமாக நிதிநிலைமைக்கூற்றில் காட்டும் பெறுமதி எக்கிரய மூலங்களை உள்ளடக்கும்?

05. பெறுமானத்தேய்வு என்றால் என்ன?

06. பெறுமானத்தேய்வுத் தொகையைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

07. சொத்தின் பாவனைக் காலத்தினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

08. சொத்தின் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதி, சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி, சொத்தின் நியாயமான பெறுமதி போன்ற பதங்களை விளக்குக?

09. **LKAS** 16இன் படி நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் யாவை?

10. சொத்தின் மீள்மதிப்பீட்டின் அளவீட்டு அடிப்படைகள் யாவை?

11. உற்பத்தி நிறுவனமொன்று உற்பத்திச் செயற்பாடுகளுக்காக இறக்குமதி செய்த இயந்திரமொன்றிற்கு ஏற்பட்ட கிரய உருப்படிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன. இவ்வணிகம் VAT தொடர்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றாகும்.

	‘‘ரூபா 000’’
இயந்திரத்தின் குறித்த விலை	1 500
(வியாபாரக் கழிவு ரூபா 20% கழிக்குமுன்)	
இறக்குமதி தீர்வை வரி	300
தீர்வைகள் கட்டணம்	50
துறைமுகத்திலிருந்து கொண்டு வரும் கூலி	30
இறக்கும் கூலி	15
பொருத்துதல், ஒன்றுசேர்த்தல் கிரயம்	45
தொழில் தொழில்சார் கட்டணம்	20
முதற்கட்ட பரீசார்த்த உற்பத்திக் கிரயம்	15
பரீட்சார்த்த உற்பத்தி பொருள்விற்பனை மூலம் பெறுவனவு	5
இயந்திரத்திற்குரிய பெறுமதிசேர்வரி (VAT)	90
வேறொரு இடத்தில் மீளப் பொருத்துவதற்கு ஏற்பட்ட கிரயம்	10
இயந்திரப் பராமரிப்பு கிரயம்	20

முதல் தடவையாக இனங்காணவேண்டிய இயந்திரக் கிரயத்தைக் கணிக்க.

12. கீழே தரப்பட்டுள்ள செலவினங்கள் நிறுவனமொன்றினால் வாங்கப்பட்ட உபகரணமொன்றைத் தொழிற்சாலையில் பொருத்தி முடிக்கும் காலம் வரைக்கும் எழுந்ததாகும். VAT க்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

கொள்வனவு விலை (**15%** VAT அடங்கியுள்ளது)	**1035 000**
தொழிற்சாலை வரைக்குமான போக்குவரத்துக் கிரயம்	**10 000**
பொருத்துதல் கிரயம்	**40 000**
இப் போக்குவரத்தில் வேகக்கட்டுப்பாட்டை மீறியமைக்காக நீதிமன்றத்துக்குச் செலுத்திய தண்டனைப் பணம்	**5 000**
உபகரணத்தைப் பொருத்தும்போது ஏற்பட்ட சேதம் காரணமாக தொழிற்சாலைச் சுவரினைத் திருத்துவதற்கு ஏற்பட்ட செலவு	**45 000**

இவ் உபகரணத்தின் தொடக்க கிரயம் என்ன? ரூ __________________

13. ராஜன் கம்பனி 2017.04.01ல் ரூபா 2 500 000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. அதன் பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்களும் (தேய்வு 20%) இழிவுப் பெறுமதி ரூபா 500 000 மும் ஆகும்.

I. 2017/2018, 2018/2019 ஆம் வருடங்களுக்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி வருடாந்தத் தேய்வினைக் கணிக்க.

II. பெறுமானத் தேய்வினைப் பதிவு செய்வதற்குரிய நாட்குறிப்புப் பதிவுகளையும் பேரேட்டுக் கணக்குகளையும் இரண்டு வருடங்களுக்கு தயாரிக்கவும்.

14. வரையறுக்கப்பட்ட நிவேதிகா பொதுகக்கம்பனியின் கட்டிடம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

31.03.2020 இல் கட்டிடத்தின் மீதி	ரூபா.3000000
31.03.2020 இல் கட்டிடத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு மீதி	ரூபா.500000
31.03.2020 இல் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி	ரூபா.2800000
31.03.2019 இல் கட்டிடத்தின் மீள்மதிப்பீட்டு குறைவு	ரூபா.100000

முற்றடக்க வருமானக்கூற்றில் ஏனைய செயற்பாட்டுக் கிரயத்தில் காட்டப்பட்டு இருந்தது.

31.03.2020 கட்டிடத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வாறு நிதியறிக்கையில் / நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதைக் காட்டுக?

15. வரையறுக்கப்பட்ட அபிசாளினி பொதுக்கம்பனியின் மோட்டார் வாகனம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

31.03.2020 இல் மோட்டார் வாகனத்தின் மீதி ரூபா.500000

31.03.2020 இல் மோட்டார் திரண்ட பெறுமானத்தேய்வு மீதி ரூபா.200000

31.03.2020 இல் மோட்டார் வாகனத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.200000

31.03.2019 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஏனைய முற்றடக்க வருமானமாக இனங்காணப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீள்மதிப்பீட்டு மிகை ரூபா.60000

31.03.2020 மோட்டார் வாகனத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வாறு நிதியறிக்கையில் / நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதைக் காட்டுக?

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

16. கம்பனியொன்று ரூபா.6 மில்லியன் இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. பொருத்தமான நிரல்களில் "✓" எனக்குறிப்பிடுவதன் மூலம் **LKAS** 16 இன் படி இவ் இயந்திரக் கொள்வனவு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கொடுப்பனவுகளானது இயந்திரத்தின் தொடக்கக்கிரயத்திலா/ வருமானச் செலவுகளின் கீழா இனங்காணப்படும் என்பதைக் குறிப்பிடுக.

விடயம்	**(ரூபா 000)**	**தொடக்கக் கிரயம்**	**வருமானச் செலவுகள்**
▪ இயந்திரத்தினை கொண்டுவருதல் கிரயம்	100	....	....
▪ இயந்திரத்திற்கான எரிபொருள் கிரயம்	250	....	....
▪ இயந்திரத்தினை நிறுவும் கிரயம்	350	....	....
▪ பரிசோதனைக் கிரயம்	160	....	....
▪ வருடாந்த பராமரிப்புக் கிரயம்	140	......	......

17. வரையறுக்கப்பட்ட கம்சிகா பொதுக்கம்பனியின் 2019 மார்ச் 31 இல் காணப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

மோட்டார் வாகனத்தின் கிரயம் (ரூபா 000)	திரண்ட தேய்வு (ரூபா 000)	ஆயுட்காலம் (வருடங்கள்)	இழிவுப்பெறுமதி (ரூபா 000)
6400	**1200**	**50**	**400**

2019 ஏப்ரல் 01 இல் மோட்டார் வாகனங்களுக்கு ரூபா.2680000 கிரயத்தில் புதிய கருவியொன்று பொருத்தப்பட்டது. இதனால் மோட்டார் வாகனத்தின் ஆயுட்காலம் மேலும் 8 வருடங்களால் அதிகரிக்கும் என்றும் இழிவுப்பெறுமதி ரூபா.20000 ஆல் குறையும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

(கிரயத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது)

கணிக்குக:

1. 2020.03.31 இல் மோட்டார் வாகனத்தின் வருடாந்தப் பெறுமானத்தேய்வு
2. 2020.03.31 இல் மோட்டார் வாகனத்தின் முன் கொண்டு செல்லும் பெறுமதி

18. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் வரையறுத்த ஏஞ்சல் பொதுக்கம்பனியின் இயந்திரங்கள் தொடர்பானவையாகும்.

	(ரூபா 000)
01.04.2019 இல் உள்ளவாறான கொண்டு செல் பெறுமதி	13000
30.09.2019 இல் அகற்றப்பட்ட இயந்திரத்தின் நட்டம்	300
01.01.2020 இல் பெறப்பட்ட புதிய இயந்திரம்	8000

வருட ஆரம்பத்தில் காணப்படும் எல்லா இயந்திரங்களும் 01.04.2014 இல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கொள்வனவு செய்யப்பட்டவையாகும். இவ்வருடத்தில் அகற்றப்பட்ட இயந்திரமானது ரூபா.6000000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இவ் இயந்திரமானது நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

கணிக்குக:

1. 31.03.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இயந்திரத்திற்கான பெறுமானத்தேய்வு
2. அகற்றப்பட்ட இயந்திர விற்பனையில் இருந்து பெற்ற காசு

தேர்ச்சி மட்டம் 11.6: ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத்தக்க சொத்துக்கள் என்பன தொடர்பாக கணக்கு வைத்தல்களையும் வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்வார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

• ஏற்பாடுகள் (Provisions)

காலம் அல்லது அளவு தொடர்புடைய நிச்சயமற்ற நிலைமையொன்றுடன் கூடிய பொறுப்பொன்றாகும்.

• நிகழத்தக்க பொறுப்புக்கள் (Contingent Liabilities)

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக உருவாகிய நிறுவனத்தின் முழுமையான கட்டுப்பாடின்றி எதிர்கால நிகழ்வொன்று அல்லது பல நிகழ்வுகள் நிகழ்தல் அல்லது நிகழாதிருத்தல் எனும் அடிப்படையில் மட்டும் அவற்றின் வாழ்தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய விதிமுறையொன்றின் கடப்பாடொன்றே நிகழத்தக்க பொறுப்புக்கள் எனப்படும்.

மேலும், கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக நிகழ்காலக் கடப்பாடொன்று தோன்றினாலும் கூட பின்வரும் காரணங்களினால் பொறுப்பொன்றாக இனங்காணப்படாத நிகழ்காலக் கடப்பாடுகளே நிகழத்தக்க பொறுப்புக்களாகும்.

01. இப்பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பொருளாதார நலனொன்றை உருவாக்கக் கூடிய வளங்கள் வணிகத்திலிருந்து வெளிச் செல்லும் தன்மையொன்று காணப்படாதிருத்தல்.

அல்லது

02. கடப்பாட்டின் பெறுமதியினை நம்பகரமான முறையில் அளவிட முடியாமை காரணமாக இனங்காணப்படாத நிகழ்கால கடப்பாடொன்றாகும்.

• நிகழத்தக்க சொத்துக்கள் (Contingent Assets)

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக உருவாகின்ற வணிகத்தின் கட்டுப்பாடின்றி எதிர்கால நிகழ்வொன்று அல்லது பல நிகழ்வுகள் நிகழ்தல் அல்லது நிகழா திருத்தலினடிப்படையில் வாழ்தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய சொத்தொன்றாகும்.

ஏற்பாடுகளையும் நிகழத்தக்க பொறுப்புக்களையும் வேறுபடுத்தி இனங்காணல்.

• ஏற்பாடுகள்:-

நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகளை இனங்காண்பதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

01. அலகொன்றிற்கு கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறொன்றாக நிகழ்காலக் கடப்பாடொன்று காணப்படல்.
02. அக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலமொன்றுடன் இணைந்த வளங்கள் வணிகத்திலிருந்து வெளிச் செல்லக்கூடிய தன்மையொன்றைக் கொண்டிருத்தல்.
03. கடப்பாட்டிற்குரிய பெறுமானத்தை நம்பகத் தன்மை கொண்டதாக அளவிடக் கூடியதாக இருத்தல்.
    மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் குறிப்பிட்ட கடப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமானமானது வருமானக்கூற்றில் செலவொன்றாகவும், நிதிநிலைமைக் கூற்றுக்களில் பொறுப்பொன்றாகவும் இனங்காணப்படும்.

- **நிகழத்தக்க பொறுப்புக்கள்:-**

நிகழத்தக்க பொறுப்பொன்றை இனங்காண்பதற்குப் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

01. கடப்பாடொன்றைத் தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலமொன்றுடன் இணைந்த வளங்கள் வணிகத்திலிருந்து வெளிச் செல்லக்கூடிய தன்மையொன்று காணப்படாதிருத்தல்.

அல்லது

02. கடப்பாட்டின் பெறுமானத்தை நம்பகத் தன்மை கொண்டதாக மதிப்பிட முடியாதிருத்தல்.

03. நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக இனங்காணப்படாதிருக்கும் நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலாக மட்டும் (குறிப்பொன்றாக) மேற்கொள்வது போதுமானது.

நிகழத்தக்க சொத்துக்கள்:-

நிகழத்தக்க சொத்துக்கள் நிதிநிலைமைக் கூற்றுக்களில் சொத்தொன்றாக இனங்காணப்படாதிருக்கும். பொருளாதார அனுகூலமொன்று உட்பாய்ச்சப்படும் என எதிர்பார்க்கப்படுமாக இருந்தால் மட்டும் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏற்பாடுகளுக்கான உதாரணம்:-

01. விற்பனை செய்த பொருள்களின் மீதான உத்தரவாத உறுதிப்படுத்தப்படுத்தலின் அடிப்படையில் ஏற்பாடு செய்தல் (வியாபார உத்தரவாதம்).
02. தொழிற்சாலையொன்றின் காரணமாக சூழலுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் அரசு அல்லது வேறு நிறுவனமொன்றின் மூலம் வழக்கொன்று தாக்கல் செய்துள்ள போது.
03. சேவையிலிருந்து பணி இறக்கம் செய்யப்பட்ட பணியாளரொருவர் இழப்பீடு கோரி வழக்கொன்று தாக்கல் செய்துள்ள போது இழப்பீடு நிச்சயமாக செலுத்த வேண்டி ஏற்படலும், அதனை நம்பகத் தன்மை கொண்டதாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும் சந்தர்ப்பமொன்றின்போது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பான உதாரணங்கள்:-

01. சேவையிலிருந்து பணி இறக்கம் செய்யப்பட்ட ஊழியரொருவர் இழப்பீடு கோரி வழக்குத் தொடர்தல். இழப்பீடு செலுத்துதல் உறுதியற்றிருத்தலும் அதனை நம்பகத்தன்மை கொண்டதாக மதிப்பிட முடியாதிருக்கும் வேளையிலும்.
02. நிறுவனத்தின் பிரிவொன்றை மூட வேண்டி ஏற்பட்டதனால் செலுத்த வேண்டிய இழப்பீடு.

நிகழத்தக்க சொத்துக்கள் தொடர்பான உதாரணங்கள்:-

வணிகத்திற்கு சொந்தமான காணியொன்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை கையகப்படுத்தி கொண்டமை தொடர்பாக இழப்பீட்டுக்கு விண்ணப்பித்திருத்தல்.

பயிற்சிகள்

01. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37 இன் படி பின்வரும் கூற்றுக்கள் சரியா/பிழையா எனக்குறிப்பிடுக?

A - ஏற்பாடுஎன்பது நிச்சயமற்றகாலம் அல்லது நிச்சயமற்ற தொகைக்கான பொறுப்பாகும் ( )

B - நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்கள் இனங்காணப்படும் ( )

C - நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க சொத்துக்கள் இனங்காணப்படுவதில்லை ( )

D - நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க சொத்துக்கள் இனங்காணப்படத் தேவையில்லை என்பதற்கு ஆதாரமாக அமைந்த எண்ணக்கரு பாதுகாப்புஎண்ணக்கரு ஆகும் ( )

02. 31.03.2020 இல் முடிவடைந்த காலப்பகுதியில் கம்பனியின் செயற்பாடுகள் காரணமாக அதன் வேலைத்தளம்(நிலம்) மாசடைந்தது. இப்பகுதிக்கான சூழல் பாதுகாப்பு அதிகார சபையானது கம்பனி நிலத்தை துப்பரவு செய்தல் வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளது. இதனை மேற்கொள்ள கம்பனிக்கு கணிசமான காசு தேவைப்படும் எனின், 31.03.2020 இல் நிதிக்கூற்றுக்களில் இதன் பொருட்டு ஏற்பாடு ஒன்று செய்யப்படல் வேண்டுமா என்பதைக் காரணங்களுடன் குறிப்பிடுக.

தேர்ச்சி மட்டம் 11.7: குத்தகை சொத்துரிமையைக் கணக்கு வைத்தல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்

வரைவிலக்கணம் - குத்தகை (Lease)

ஒரு பரிமாற்றை அடிப்படையாக கொண்டு குறித்த பொருளை குறித்த காலத்திற்க்கு பயன்படுத்துவதற்கான ஒரு பொருளின் உரிமையை வெளிபடுத்தும் ஒரு ஒப்பந்தம் அல்லது பகுதியளவான ஒப்பந்தம் குத்தகை எனப்படும்.

நியாயமான பெறுமதி (Fair Value)

இந்த நியமத்திற்க்கு குத்தகை வழங்குனரின் கணக்கீட்டு தேவையை பிரயோகிக்கும் நோக்கில், ஒரு பரிவத்தனையில் அறிவுள்ள விருப்பமுள்ள தரப்பினரிடையே ஒரு சொத்தை பரிமாற்றம் செய்யக்கூடிய அல்லது பொறுப்புகள் தீர்க்கப்படக்கூடிய தொகை.

வினா - விடை

01.04.2017இல் வரையறுத்த மாருதி கம்பனியிலிருந்த விகாசன் கம்பனி மோட்டார் வாகனத்தினை பெற்றுக்கொண்டது

மோட்டாரின் நியாயமான விலை 6000

ஆரம்பக்கட்டணம் 1500

தவணைக்கட்டணம் 1800

குத்தகைக்காலம் 3 வருடங்கள்

சொத்தின் ஆயுட்காலம் 5 வருடங்கள் குத்தகைக் கால முடிவில் சொத்தின் உரிமை குத்தகைதாரருக்கு மாற்றப்படும்.

குத்தகை வட்டி

வருடம்	வட்டி
2017/18	450
2018/19	300
2019/20	150

SLFR 16 இற்கு அமைவாக பின்வருவனவற்றினை தயாரிக்க

1) 31.03.2018இல் முடிவுற்றவருடத்திற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்?
2) முதல் மூன்று வருட உரிய பேரேட்டுக் கணக்குகள்
    1) சொத்து பயன்பாட்டு உரிமைக் கணக்கு
    2) குத்தகை கொடுப்பனவை செலுத்துவதற்கான கடப்பாட்டுக் கணக்கு
    3) குத்தகை வட்டிக் கணக்கு
    4) சொத்து பயன்படுத்தல் உரிமை தேய்வுக் கணக்
3) 31.03.2018இல் நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

செய்கை

ஆண்டு	குத்தகைப் பெறுமதி	வருடாந்த வட்டி	தவணைக் கட்டணம்	மீதி	நடைமுறை பொறுப்பு	நடைமுறை அல்லாத பொறுப்பு	வருடாந்த தேய்வு
1ம் வருடம் (2017/18)	4500	450	(1800)	3150	1500	1650	1200
2ம் வருடம் (2018/19)	3150	300	(1800)	1650	1650	---	1200
3ம் வருடம் (2019/20)	1650	150	(1800)	----	----	----	1200
மொத்தம்		**900**	**(5400)**				

(1800-300)

01. **பொது நாளேடு**

திகதி	விபரம்	வரவு	செலவு
	சொத்தின் நியாயமான பெறுமதி		
	சொத்து பயன்படுத்தல் உரிமைக் கணக்கு வரவு		
	காசுக்கணக்கு செலவு		
	குத்தகைபொறுப்பினை செலுத்துவதற்கான கடப்பாட்டுகணக்கு செலவு		
	குத்தகை வட்டி		
	குத்தகை வட்டிக் கணக்கு வரவு		
	குத்தகைபொறுப்பினை செலுத்துவதற்கான கடப்பாட்டுகணக்கு செலவு		

	தவணைக்கட்டணம்		
	குத்தகை பொறுப்பினை செலுத்துவதற்கான கடப்பாட்டு கணக்கு வரவு		
	காசுக் கணக்கு செலவு		
	பெறுமானத்தேய்வு		
	சொத்து பயன்படுத்தல் உரிமைக்கான தேய்வுக்கணக்கு வரவு		
	சொத்து பயன்படுத்தல் உரிமைக் கணக்கு செலவு		

02. **சொத்து பயன்படுத்தல் உரிமைக் கணக்கு**

(Right of use the Asset – ROU)

விபரம்	தொகை	விபரம்	தொகை
01.04.2017 குத்.பொறு.செலு.கடப்		31.03.2018	
01.04.2017 காசு		31.03.2018 மீதி/கீ/கொ/செ	
01.04.2018 மீதி/கீ/கொ/வ		31.03.2019	
		31.03.2019 மீதி/கீ/கொ/செ	
01.04.2019 மீதி/கீ/கொ/வ		31.03.2020	

குத்தகை பொறுப்பினை செலுத்துவதற்கான கடப்பாட்டு கணக்கு

(Obligation to make the lease payment**)**

விபரம்	தொகை	விபரம்	தொகை
31.03.2018 காசு		01.04.2017 சொ.ப.படு.உரிமை	
31.03.2018 மீதி/கீ/கொ/செ		31.03.2018 குத்தகை வட்டி	
31.03.2019 காசு		01.04.2018 மீதி/கீ/கொ/வ	
31.03.2019 மீதி/கீ/கொ/செ		31.03.2019 குத்தகை வட்டி	
31.03.2020 காசு		01.04.2019 மீதி/கீ/கொ/வ	
31.03.2020 மீதி/கீ/கொ/செ		31.03.2020 குத்தகை வட்டி	

குத்தகை வட்டிக் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
31.03.2018 கு.பொ.செலு.கடப்பாடு		31.03.2018 இலாபநட்டக்	
31.03.2019 கு.பொ.செலு.கடப்பாடு		31.03.2019 இலாபநட்டக்	
31.03.2020 கு.பொ.செலு.கடப்பாடு		31.03.2020 இலாபநட்டக்	

சொத்து பயன்படுத்தல் உரிமைக்கான தேய்வுக்கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
31.03.2018		31.03.2018 இலாபநட்டக்	
31.03.2019		31.03.2019 இலாபநட்டக்	
31.03.2020		31.03.2020 இலாபநட்டக்	

SLFRS – 16 இற்கு அமைய நிதிக் கூற்றில் முன்னிலைப்படுத்தல்

நிதிநிலைமைக்கூற்று

நடைமுறையயல்லாச்சொத்து	குறிப்பு	தொகை
ஆதானம் பொறி மற்றும் உபகரணம்	4	XXXX
சொத்து பயன்படுத்தல் உரிமை	5	4800
நடைமுறையல்லா பொறுப்பு		
குத்.பொறு.செலு.கடப்பாடு		1650
நடைமுறைப் பொறுப்புக்கள்		
குத்.பொறு.செலு.கடப்பாடு		1500

முற்றும் அடங்கிய வருமானக்கூற்று

விபரம்	குறிப்பு	தொகை
விநியோக்கிரயம்		
சொ.ப.படு.உ.தேய்வு		1200
நிதிச்செலவுகள்		
குத்தகை வட்டி		450

செய்கை

விநியோகக் கிரயம்
சொத்துபயன்படுத்தல் உரி.தேய்வு 1200

நிதிச்செலவு
குத்தகைவட்டி 450

குறிப்பு – 5 சொத்து பயன்படுத்தல் உரிமை

ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயம்	6000
திரண்ட பெறுமானத் தேய்வு	(1200)
	4800

குறிப்பு 1 இலும் இவற்றினை உள்ளடக்க மறந்துவிடாதீர்கள் மாணவர்களே……..

காசுப்பாய்ச்சல் கூற்றில் குத்தகை தொடர்பான பதிவுகள்

காசுப்பாய்ச்சல் கூற்று (LKAS-7) (ரூ .000)

செயற்பாட்டு நடவடிக்கைகள்	
செலுத்திய குத்தகை வட்டி	(XX)
குறுங்கால குத்தகைக் கொடுப்பனவு	(XX)
குறைந்த பெறுமதி கொண்ட சொத்துக்களுக்கான குத்தகைக் கொடுப்பனவு	(XX)
முதலீட்டு நடவடிக்கைகள்	
ஆரம்ப குத்தகைக் கட்டணம் செலுத்தியது	(XX)
நிதியீட்ட நடவடிக்கைகள்	
குத்தகைப்பொறுப்புக்கான மூலதனப் பகுதி செலுத்தியது	(XXX)

பயிற்சி – 01

01.04.2017இல் வரையறுத்த விநோதன் கம்பனியிலிருந்த ரமணன் கம்பனி மோட்டார் வாகனத்தினை பெற்றுக்கொண்டது

மோட்டாரின் நியாயமான விலை	8000
ஆரம்பக்கட்டணம்	2000
தவணைக்கட்டணம்	2400

குத்தகைக்காலம் 3 வருடங்கள்

சொத்தின் ஆயுட்காலம் 5 வருடங்கள் குத்தகைக் கால முடிவில் சொத்தின் உரிமை குத்தகைதாரருக்கு மாற்றப்படும்.

குத்தகை வட்டி	வருடம்	வட்டி
	2017/18 -	500
	2018/19 -	400
	2019/20 -	300

SLFR 16 இற்கு அமைவாக பின்வருவனவற்றினை தயாரிக்க

1) 31.03.2018இல் முடிவுற்றவருடத்திற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்?
2) முதல் மூன்று வருட உரிய பேரேட்டுக் கணக்குகள்
    1) சொத்து பயன்பாட்டு உரிமைக் கணக்கு
    2) குத்தகை கொடுப்பனவை செலுத்துவதற்கான கடப்பாட்டுக் கணக்கு
3) 31.03.2018இல் நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

பயிற்சி – 02

வரையறுத்த MPLC நிறுவனம் 01.04.2019இல் மோட்டார் வாகனத்தினை Deepa company க்கு பின்வரும் நிபந்தனையில் குத்தகை அடிப்படையில் வழங்கியது.

ஆரம்பக்கட்டணம் ரூ 300000

மூன்றுவருட குத்தகைத்தவணைக்கட்டணம் பின்வருமாறு செலுத்த வேண்டும்.

குத்தகைக்கால முடிவில் சொத்து Deepa company உரிமையாகாது.

முதலம் வருட முடிவில்	ரூ 200,000
இரண்டாம் வருட முடிவில்	ரூ 200,000
மூன்றாம் வருட முடிவில்	ரூ 200,000

குறிக்கப்பட்ட வட்டிவீதம் 10% ஆகும்.

(10% கழிவீட்டுக் காரணிகள் முறையே 0.909 , 0.826 , 0.751)

குத்தகைக்கால முடிவில் Deepa company சொத்தினை MPLC நிறுவனத்திற்கு மீள ஒப்படைக்க வேண்டும். எனின் SLFRS 16 க்கு அமைய தயாரிக்க

01. 31.03.2019இல் முடிவுற்றவருடத்திற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்?
02. முதல் மூன்று வருட உரிய பேரேட்டுக் கணக்குகள்
    1. சொத்து பயன்பாட்டு உரிமைக் கணக்கு
    2. குத்தகை கொடுப்பனவை செலுத்துவதற்கான கடப்பாட்டுக் கணக்கு
03. 01.04.2019இல் நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

நிகழ்காலப் பெறுமதி கணித்தல் - விளக்கம்

0	1	2	3
Year 1	Year 2	Year 3	
300,000	200,000	200,000	200,000

நிகழ்கால பெறுமதி	
300000	300000 X 1.0
181818	200000 X 0.909
165288	200000 X 0.826
150261	200000 X 0.751
797367	

(சொத்தின் நிகழ்காப் பெறுமதி-(NPV) தொடர்பாக தேர்ச்சி 16இல் விரிவாக கலந்துரையாடப்படும்)

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பயிற்சி - 03

வரையறுத்த KM(PLC) Ltd., நிறுவனம் 01.04.2017இல் பொறி உபகரணத்தினை Karan company க்கு பின்வரும் நிபந்தனையில் குத்தகை அடிப்படையில் வழங்கியது.

ஆரம்பக்கட்டணம் ரூ 200000

மூன்றுவருட குத்தகைத்தவணைக்கட்டணம் பின்வருமாறு செலுத்த வேண்டும்.

முதலம் வருட முடிவில் ரூ 250,000

இரண்டாம் வருட முடிவில் ரூ 200,000

மூன்றாம் வருட முடிவில் ரூ 300,000

குறிக்கப்பட்ட வட்டிவீதம் 10% ஆகும். (10% கழிவீட்டுக் காரணிகள் முறையே 0.909 , 0.826 , 0.751)

குத்தகைக்கால முடிவில் Karan company சொத்தினை KM(PLC) Ltd ற்கு மீள ஒப்படைக்க வேண்டும். எனின் SLFRS 16 க்கு அமைய தயாரிக்க

1) 31.03.2018இல் முடிவுற்றவருடத்திற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்?

2) முதல் மூன்று வருட உரிய பேரேட்டுக் கணக்குகள்

   1. சொத்து பயன்பாட்டு உரிமைக் கணக்கு
   2. குத்தகை கொடுப்பனவை செலுத்துவதற்கான கடப்பாட்டுக் கணக்கு

3) 31.03.2018இல் நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

தேர்ச்சி மட்டம் 11.8: அறிக்கைப்படுத்தப்படும் நிதியாண்டுக்குப் பின்னரான நிகழ்வுகள் தொடர்பில் கணக்கு வைத்தல்களையும் வெளிப் படுத்தல்களையும் மேற்கொள்வார்.

அறிக்கைப்படுத்தப்படும் நிதியாண்டிற்குப் பின்னரான நிகழ்வுகள்:

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் நிதியாண்டின் இறுதித் திகதிக்கும் நிதிக் கூற்றுக் களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்படும் திகதிக்கும் இடையிலான காலப்பகுதி யில் இடம்பெறும் சாதகமான, பாதகமான நிகழ்வுகளை அறிக்கைப்படுத்தும் நிதியாண்டின் பின்னரான நிகழ்வுகள் என அழைக்கப்படும்.

வெளிப்படுத்தல்கள் செய்யவேண்டிய விடயங்கள்:

- நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட திகதி.
- அவ்வாறு அனுமதியளித்தது யார் என்பது தொடர்பானது.
- அறிக்கைப்படுத்தப்படும் நிதியாண்டிறுதித் திகதியில் காணப்பட்ட நிலைமைகள்.
- அறிக்கைப்படுத்தப்படும் நிதியாண்டின் பின்னர் இடம்பெற்ற செம்மையாக்கப்படாத நிகழ்வுகளின் தன்மை
- நிதிரீதியான தாக்கம் தொடர்பான மதிப்பீடு
- நிதிரீதியான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியாததாயின் அவை தொடர்பிலானவை.

பயிற்சிகள்

01. அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பிந்திய நிகழ்வுகள் என்றால் என்ன?
02. அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பிந்திய நிகழ்வுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
03. வரையறுக்கப்பட்ட நிதுர்சன் பொதுக்கம்பனியின் நிதிநிலைமைக்கூற்றுத் திகதி 2020.03.31 ஆகும். நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வெளியீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி 2020.06.30 ஆகும். நிதிக்கூற்றுக்கள் 2020.07.15 இல் இடம்பெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்டது. 2020 மார்ச் 31 இல் முடிவடையும் நிதிக்கூற்றுக்களில் **LKAS** 10 இன் படி மேலே காணப்படும் நிகழ்வுகள் சீராக்கம் செய்யப்படுமா / இல்லையா எனக்குறிப்பிடுக.
    1. 15.05.2020 இல் சாதாரண பங்கொன்றிற்கு ரூபா.5 இறுதிப்பங்கு இலாபம் பிரேரிக்கப்பட்டடுள்ளது.
    2. 31.03.2020 இல் ரூபா.800000 தரவேண்டிய வியாபார வருமதியாளரொருவர் 20.04.2020 இல் முறிவடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.
    3. 31.03.2020 ல் ரூா.500000 தரவேண்டிய வியாபார வருமதியாளரொருவர் 10.07.2020 இல் முறிவடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.
    4. 31.03.2020 இல் உள்ளவாறான ரூபா.600000 கிரயத்தில் மதிப்பிடப்பட்ட சரக்கிருப்பானது 10.04.2020 ல் ரூபா.550000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
    5. முதலீடுகளின் சந்தைப்பெறுமதியானது 30.04.2020 இல் இருந்து 30.06.2020 வரையான காலப்பகுதியில் ரூபா.200000 இனால் குறைவடைந்தது.
    6. முக்கிய வாடிக்கையாளர் ஒருவரால் 01.10.2019 இல் கம்பனிக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் அவருக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

கம்பனி பணம் செலுத்த வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி 30.04.2020 இல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு.

7. 2019 மே 10 இல் கம்பனியினால் பொருள் வழங்குநர் மீது விற்பனைப் பொருள் குறைபாடு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் 2020 ஏப்ரல் 28 இல் ரூபா.8000000 நட்டஈடாக கம்பனிக்குச் செலுத்த வேண்டுமென நீதிமன்றம்உத்தரவிடுதல்.
8. 2020 ஏப்ரல் 20 இல் கம்பனியில் ஏற்பட்ட தீயழிவு காரணமாக ரூபா.80000 கிரயமான பொருட்கள் முற்றாக அழிவடைந்தது.
9. 2020 ஏப்ரல் 30 இல் புதிய ஆதனமொன்று ரூபா.1000000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.
10. ஊழியர் ஒருவர் 2020.01.01 இல் வேலை நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பாக கம்பனிக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கொன்றில் அவருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு கம்பனி ரூபா.300000 பணம் செலுத்த வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி 2020 மே 20 இல் நீதிமன்றத்தினல் வழங்கப்பட்ட தீர்ப்பு.

தேர்ச்சி மட்டம் 11.9: வருமானங்களை இனங்காண்பதற்கான கணக்கு வைப்புக்களை மேற்கொள்வார்.

SLFRS 15 (வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களுடன் தொடர்புடையவருமானம்)-**(2018.01.01இலிருந்து)**

வருவாயை அங்கீகரிப்பதில் 5 படி மாதிரி (5 Step Model)

Step – 01
ஒப்பந்தத்தை இனம் காணல்
(Identify the Contract)

➡

Step – 02
செயற்பாட்டு கடப்பாட்டினை இனம் காணல்
Identify Performance Obligation

➡

Step – 03
கொடுக்கல் வாங்கலின் விலையைத் தீர்மானித்தல்
(Determine the Transection Price)

➡

Step – 04
கொடுக்கல் வாங்கல் விலையை பகிர்வு செய்தல்
(Allocate the Transection Price)

➡

Step – 05
வருமானத்தை இனங்காணல்
(Recognise revenue)

1. வரையறுத்த Moontel நிறுவனம் தரம்வாய்ந்த டெப்(Tab) களை விற்பனை செய்வதோடு இணைய இணைப்பு வசதிகளையும் வழங்குகின்றது. ஒரு வாடிக்கையாளருக்கு டெப்லட் மற்றும் Unlimited இணைய இணைப்பு வசதியினையும் 2 வருட ஒப்பந்தத்தில் வழங்கி மாதம் ரூ 10000 கட்டணத்தினை அறிவிடுகின்றது. இதற்காக 01.01.2018இல் ஒரு வாடிக்கயைாளருடன் ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டது. டெப்லட்டின் சந்தை விலை ரூ 80000 ,இணைய இணைப்புக்கு மாத்திரம் மாதாந்தக் கட்டணம் ரூ 5000 எனின் SLFRS 15 க்கு அமைய தயாரிக்க
   1) 31.12.2018இல் முடிவுற்றவருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட தொகை எவ்வளவு?
   2) உரிய பேரேட்டுக் கணக்குகள் (2018 , 2019 இற்கு)
   3) 31.12.2018இல் நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

விடை

செய்கை

கடப்பாடு	கொடுக்கல்வாங்கல் விலை	பகிர்வு
டெப்	ரூ 80000	(240000/ 200000) X 80000 = ரூ 96000
இணையச்சேவை	மாதம் 24Xரூ5000 = ரூ 120000	(240000/ 200000) X 120000 = ரூ 144000
	ரூ 200000	**ரூ 240000**

(ஒரு மாதக் கட்டணம் (Rental) ரூ 10000 படி 24 மாதங்களுக்கான (ரூ 240000) வாடிக்கையாளரால் செலுத்தப்படும் தொகை டெப் மற்றும் இணைய சேவைக் கட்டணங்களுக்கானதாகும்.)

24 மாதங்களுக்கான சேவைவருமானம் ரூ 144000 எனின் 1 வருடத்திற்கு ரூ72000.

Moontel நிறுவன ஏட்டில் பதிவுகள்

01. 31.12.2018இல் முடிவுற்றவருடத்திற்கான வருமானம் ரூ 168000 ஆகும் (96000 + 72000)

02.

வாடிக்கையாளரிடமிருந்தான பெறுவனவுக் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
01.01.2018பொருள் விற்பனை	96000	31.12.2018 காசு(12 X 10000)	120000
31.12.2018சேவை வருமானம்	72000	31.12.2018 மீதி/கீ/கொ/செ	48000
	168000		**168000**
01.01.2019 மீதி/கீ/கொ/வ	48000	31.12.2019 காசு (12 X 10000)	120000
31.12.2019சேவை வருமானம்	72000		
	120000		**120000**

பொருள் விற்பனை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
31.12.2018 இ/நட் க/கு	96000	01.01.2018வாடிக்கையாளர்	96000
	96000		**96000**

சேவை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
31.12.2018 இ/நட் க/கு	72000	31.12.2018வாடிக்கையாளர்	72000
	72000		**72000**
31.12.2019 இ/நட் க/கு	72000	31.12.2019வாடிக்கையாளர்	72000
	72000		**72000**

03.

31.12.2018 இல்

வருமானக்கூற்று

விபரம்	தொகை
பொருள் விற்பனை	96000
சேவை வழங்கல் வருமானம்	72000

நிதி நிலமைக்கூற்று

விபரம்	தொகை
நடைமுறை சொத்து	
வாடிக்கையாளர்	48000

2. வரையறுத்த விகாசன் கம்பனி 01.04.2019 இல் குளிரூட்டி ஒன்றினை 2 வருட பாராமரிப்பு சேவையுடன் சேர்த்து ரூ 120000 இற்கு வாடிக்கையாளருடன் ஒப்பந்தம் செய்து முழுப் பணத்தினையும் அன்றைய தினம் பெற்றுக்கொண்டது. குளிரூட்டியின் விலை ரூ 100000 இருவருட பராமரிப்பு சேவை ரூ 50000 எனின் 31.03.2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான
   01. இனங்காணப்பட்ட வருமானம் எவ்வளவு
   02. பராமரிப்பு சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு எவ்வளவு
   03. பேரேட்டுக் கணக்குகள்
   04. நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

விடை - செய்கை

கடப்பாடு	கொடுக்கல்வாங்கல் விலை	பகிர்வு
குளிரூட்டி	ரூ 100000	(100000/ 150000) X 120000 = ரூ 80000
பராமரிப்பு சேவை	ரூ 50000	(50000/ 150000) X 120000 = ரூ 40000
	ரூ 150000	**ரூ 120000**

01. 31.03.2020 இல் முடிவுற்ற வருட
    இனங்காணப்பட்ட வருமானம் ரூ 100000 (80000 + 20000)
02. பராமரிப்பு சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு முற்பண வருமானம் ரூ 20000 ஆகும்.
03.

வாடிக்கையாளர் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
பொருள் விற்பனை	80000	காசு	120000
சேவை வருமானம்	20000		
மீதி கீழ்.கொ.சென்றது	20000		
	120000		**120000**
		மீதி கீழ்.கொ.வந்தது	20000

பொருள் விற்பனை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
இலாபநட்டக்கணக்கு	80000	வாடிக்கையாளர்	80000
	80000		**80000**

சேவை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
இலாபநட்டக்கணக்கு	20000	வாடிக்கையாளர்	20000
	20000		**20000**

(வாடிக்கையாளர் கணக்கு மீதி எதிர்வரும் வருட வருமானம் ஆகையால் அது பிற்போடப்பட்ட வருமானமாகும். இக்கணக்கு மீதி நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பில் உழைக்கப்படாத வருமானமாக காட்டப்படும்.

04. 31.12.2020 இல்

வருமானக்கூற்று	
விபரம்	**தொகை**
பொருள் விற்பனை	80000
சேவை வழங்கல் வருமானம்	20000

நிதி நிலமைக்கூற்று	
விபரம்	**தொகை**
நடைமுறைப் பொறுப்பு	
உழைக்கப்படாத வருமானம்	20000

3. SLFRS 15 இன் படி ஒரு நிறுவனம் ஒப்பந்த வருவாயை இனங்காண்பதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் எவை?
   a. ஒப்பந்தத் தரப்பினர் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளனர், அந்தக் கடமைகளை செய்ய உறுதி பூண்டுள்ளனர்.
   b. உரிமை மாற்றப்பட வேண்டிய பொருள், சேவை தொடர்பாக ஒவ்வொரு தரப்பினரும் அடையளாம் காணுதல்.
   c. உரிமை மாற்றப்பட்ட பொருள் , சேவைகளுக்கான கட்டண விதிமுறைகளை நிறுவனம் அடையாளம் காணல்.
   d. ஒப்பந்தத்தில் வணிகப் பொருள் காணப்படுகின்றது (அதாவது – ஒப்பந்தத்தில் உள்ளபடி நிறுவனத்திற்கு எதிர்கால காசுப்பாய்சலில் ஆபத்து காணப்படலாம்)
   e. வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கு ஈடாக அந்த நிறுவனம் எந்த உரிமையைப் பெறுகின்றது என்பதை கருத்தில் கொள்ளல்.

4. LG (PLC) Ltd , குமரன் என்ற வாடிக்கையாளருடன் 01.01.2019இல் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. அதன் விபரம் குளிரூட்டி **(Air condition)** உபகரணத்தை விற்பனை செய்தல் அதற்கு இரு வருட பராமரிப்பு சேவையினை மேற்கொள்ளல் குளிரூட்டியின் **விலை ரூ60000** இரு வருட விற்பனையின் பின்னரான பராமரிப்பு சேவை **ரூ 40000** (வருடத்திற்கு ஒரு சேவை என்ற அடிப்படையில்) இவ்விரண்டும் சேர்த்து **ரூ 75000** என்ற அடிப்படையிலேயே ஒப்பந்தம் மேற்கொண்டு அதற்கான முழுத்தொகையினையும் LG (PLC) நிறுவனம் குமரனிடம் பெற்றுக் கொண்டது.
வேண்டப்படுவது.

1. 31.12.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட தொகை எவ்வளவு?
2. 31.12.2019இல் பராமரிப்புச் சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு எவ்வளவு?
3. பேரேட்டுக் கணக்குகள்
4. நிதிக்கூற்று உருப்படிகள்

விடைகள்

01. 31.12.2019இல் முடிவடைந்த வருடத்திற்கான
    வருமானம் ரூ 60000 (45000 + 15000)

02. பராமரிப்புச் சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு ரூ 15000

03. வாடிக்கையாளர் கணக்கு (குமரன்)

விபரம்	தொகை	விபரம்	தொகை
பொருள் விற்பனை	45000	காசு	75000
சேவை வருமானம்	15000		
மீதி கீழ்.கொ.சென்றது	15000		
	75000		**75000**
		மீதி கீழ்.கொ.வந்தது	15000

பொருள் விற்பனை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
வியாபார க/கு மாற்றியது	45000	குமரன்	45000
	45000		**45000**

சேவை வருமான கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
இலாபநட்டக்கணக்கு	15000	குமரன்	15000
	15000		**15000**

04.

31.12.2019 இல்

வருமானக்கூற்று	
விபரம்	**தொகை**
பொருள் விற்பனை	45000
சேவை வழங்கல் வருமானம்	15000

நிதி நிலமைக்கூற்று	
விபரம்	**தொகை**
நடைமுறைப் பொறுப்பு	
உழைக்கப்படாத வருமானம்	15000

பயிற்சிகள் LKAS – 18

01. பின்வருவனவற்றுள் LKAS 18இன்படி சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   5. பொருள் விற்பனை வருமானம் என்பது மீள்விற்பனைப் பண்டங்களின் விற்பனை வருமானத்தினை மாத்திரம் கருதுகின்றது.
   6. மேலதிகச் சொத்துக்களை ஏனைய பிரிவினர்களுக்கு வழங்கி உழைத்துக்கொள்ளும் வருமானமே பொருள் விற்பனை வருமானமாகும்.
   7. பொருள் விற்பனை வருமானம் என்பது மீள்விற்பனை பண்டங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதாலும் உற்பத்தி செய்த பண்டங்களை விற்பனை செய்வதாலும் கிடைக்கின்ற வருமானங்கள்
   8. VAT வரியுடன் சேர்ந்த விற்பனை பெறுமதி நிறுவனத்தின் வருமானமாகும்.
   9. மேலதிக சொத்து வருமானங்களாக வட்டி, பங்குலாபம், முதலீட்டு வருமானம் ஆகிய மூன்றும் காணப்படுகின்றன.

02. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள குறித்த வருட வருமானத்தினை இனங்காண்க.
   “ 10% VAT வரியுடன் கூடிய விற்பனை 132,000 ஆகும். அத்துடன் எதிர்வரும் விற்பனை தொடர்பாக ரூ 60,000 பெறப்பட்டது”

   1. 180,000 2. 60,000 3. 120,000 4. 132,000 5. 192,000

சுருக்கமான விடை தருக.

03. LKAS 18இன்படி வருமானம் இரு காரணிகளில் உருவாக்கின்றது. அவை எவை?
04. LKAS 18இன்படி வருமானங்களை இனங்காணும் பொழுது அதற்காக முழுமைப்படுத்தக்கூடிய இரு நியதிகளும் எவை?
05. LKAS 18இற்கு அமைய நிறுவனமானது வருமானங்களை உழைத்துக்கொள்ளும் மூன்று வழிகளும் எவை?

பயிற்சிகள் SLFRS - 15

06. இந்திரன் உபகரணக் கம்பனி சிவானுஜன் என்பவருடன் 01.04.2019 இல் பின்வருமாறு ஒப்பந்தத்தினை மேற்கொண்டது.

பொறி உபகரணம்	500,000
இருவருட பாராமரிப்பு சேவை	100,000
போக்குவரத்து கட்டணம்	10,000

மேற்கூறிய அனைத்து கட்டணங்களையும் உள்ளடக்கி இரு தரப்பும் ரூ 490,000க்கு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டு, 01.04.2019இல் முழுத்தொகையும் சிவானுஜனால் செலுத்தப்பட்டது. .

போக்குவரத்துக் கட்டணத்தை இந்திரன் கம்பனி லொறி உரிமையாளருக்கு ரூபா 10,000 ஐயும் செலுத்தியது. முதல் வருட முடிவில் பொருள் சேவை வழங்கல் தொடர்பாக ஒப்பந்தப்படி இரு தரப்பும் திருப்பதியடைந்தது எனின் 31.03.2020 முடிவுற்ற ஆண்டில்.

	வருமானக்கூற்றின்படிருமானம்	நிதிநிலைமைக்கூற்றிலுள்ள பொறுப்பு
1.	600,000	50,000
2.	400,000	100,000
3.	440,000	40,000
4.	500,000	110,000
5.	500,000	40,000

07. **SLFRS – 15 (**வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களுடன் தொடர்புடையவருமானம்)அமைய வருவாயை அங்கீகரிப்பதில் உள்ள ஐந்து படிகளையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

08. **SLFRS – 15** அமைய ''வருமானத்தை இனங்காணத்தக்க சந்தர்ப்பம்'' என்பதனை விளக்குக.

09. **SLFRS – 15** அமைய கொடுக்கல் வாங்கல் விலை என்ற பதத்தினை விளக்குக.

10. **SLFRS – 15** இன்படி ''வாடிக்கையாளருடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தம்'' இந்நியமத்தின் பரம்பலுக்குள் உள்ளடக்குவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய நிபந்தனைகள் யாவை?

11. Abans (PLC) Ltd , குமணன் என்ற வாடிக்கையாளருடன் 01.01.2019இல் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. அதன் விபரம் குளிர்சாதனப்பெட்டி உபகரணத்தை விற்பனை செய்தல் அதற்கு இரு வருட பராமரிப்பு சேவையினை மேற்கொள்ளல் குளிரூட்டியின் **விலை ரூ90,000** இரு வருட விற்பனையின் பின்னரான பராமரிப்பு சேவை **ரூ 30,000** (வருடத்திற்கு ஒரு சேவை என்ற அடிப்படையில்) இவ்விரண்டும் சேர்த்து **ரூ 100,000** என்ற அடிப்படையிலேயே ஒப்பந்தம் மேற்கொண்டு அதற்கான முழுத்தொகையினையும் Abans (PLC) நிறுவனம் குமணனிடம் பெற்றுக் கொண்டது.

வேண்டப்படுவது.

01. 31.12.2019இல் முடிவுற்றவருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட தொகை எவ்வளவு?
02. 31.12.2019இல் பராமரிப்புச் சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு எவ்வளவு?
03. உரிய பேரேட்டுக் கணக்குகள்
04. நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

12. ஜயந்த மோட்டார் கம்பனி நந்தன் என்பவருடன் 01.04.2019 இல் பின்வருமாறு ஒப்பந்தத்தினை மேற்கொண்டது.

மோட்டார் வாகனம்	900,000
மூன்று வருட பாராமரிப்பு சேவை	300,000
வருடாந்த காப்புறுதிக் கட்டணம்	100,000
வாகனப் பதிவுக்கட்டணம்	50,000

மேற்கூறிய அனைத்து கட்டணங்களையும் உள்ளடக்கி இரு தரப்பும் ரூ 950,000க்கு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டு, 01.04.2019இல் முழுத்தொகையும் நந்தனால் ஜயந்த கம்பனிக்கு வழங்கப்பட்டது. . முதல் வருட முடிவில் பொருள் சேவை வழங்கல் தொடர்பாக ஒப்பந்தப்படி இரு தரப்பும் திருப்பதியடைந்தது எனின் பின்வருவனவற்றை 31.03.2020 முடிவுற்ற ஆண்டுக்காக தயாரிக்க

01. 31.03.2020இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்ட தொகை எவ்வளவு?
02. 31.03.2020இல் பராமரிப்புச் சேவை ஏற்பாட்டுப் பொறுப்பு எவ்வளவு?
03. உரிய பேரேட்டுக் கணக்குகள்.
04. நிதிக்கூற்றில் தோன்றும் உருப்படிகள்

தேர்ச்சி 12.0: வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்.

தேர்ச்சி மட்டம் 12.1: வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுடன் தொடர்பான சட்ட ரீதியான பின்னணிகளைத் தேடியறிவார்.

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம் செல்வாக்குச் செலுத்துவதுடன் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்ட திட்டப் பிரமாணங்களுக்கு ஏற்ப அவை செயற்படுதல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றில் பின்வரும் ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படும்.

01. கம்பனியொன்று தனது காசுப் பெறுவனவுகளையும், அக்காசு செலவிடப்பட்ட முறைகளையும் காட்டும் அறிக்கை.
02. கம்பனியொன்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

03. பொருள் வியாபாரம் தொடர்பானதாக இருக்குமாயின் கடன் கொள்வனவு, கடன் விற்பனை தொடர்பான வாடிக்கையாளர்களினதும் வழங்குனர்களினதும் அறிக்கை.
04. இறுதி இருப்பு அறிக்கை.
05. சேவை வழங்கல் தொடர்புபட்டிருப்பின் சேவைகளது அறிக்கை.

வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் பங்கு வகைகள்:

கம்பனிச் சட்டத்தின் 49 ஆம் பிரிவிற்கமைய பங்கானது அசையும் ஆதனமொன்றாகும். வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று வழங்கக்கூடிய பங்கு வகைகள் பின்வருமாறு:

01. சாதாரண பங்குகள் / உரிமைப் பங்குகள்
02. முன்னுரிமைப் பங்குகள்
03. விசேட பங்குகள

- **கூறப்பட்ட மூலதனம்**

கம்பனியொன்று நிதியினைத் திரட்டிக் கொள்வதற்காக பங்குகளைப் பொது மக்களுக்கு விநியோகிக்கும். அவ்வாறு பங்கு வழங்கலினால் பெற்றுக் கொள்ளப்படும் மூலதனமே கூறப்பட்ட மூலதனம் ஆகும்.
கம்பனிச் சட்டத்தின் 58 ஆம் பிரிவிற்கமைய பங்கு வழங்கல் தொடர்பாக பங்குகளின் மீது அழைக்கப்பட்ட தொகைகள் தொடர்பாகக் கம்பனிக்குக் கிடைத்ததும் கிடைக்க வேண்டியதுமான அனைத்துப் பணப் பெறுமதிகளின் கூட்டுத்தொகையே கூறப்பட்ட மூலதனம் ஆகும்.
கம்பனிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவு மற்றும் கம்பனிச் சட்டத்தின் விதிமுறைகள் என்பவற்றிற்கேற்பவே கம்பனியொன்று பங்குகளை வழங்குகின்றது.

- **பங்கொன்றின் வழங்கல் பெறுமதி / பங்குப் பிரதிபயன்**

கம்பனிச் சட்டத்தின் 52 ஆம் பிரிவிற்கமைய கம்பனிப் பணிப்பாளர் சபையே பங்கொன்றின் வழங்கல் பெறுமதியினை / பங்குப் பிரதிபயனைத் தீர்மானிக்கும்.

- **பங்குப் பிரதிபயனுக்காகப் பெற்றுக் கொள்ளக் கூடியவைகள்**

பங்கொன்றின் பிரதிபயன் என்பது பங்கொன்று விநியோகிக்கப்பட்ட பெறுமதியைக் குறிக்கும். இதற்காகப் பின்வருவன பெற்றுக் கொள்ளப்பட முடியும்.

- காசு
- வாக்குறுதிப் பத்திரம்
- எதிர்காலச் சேவைகள்
- ஆதனங்கள்
- ஏனைய பிணை முறிகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி மட்டம் 12.2: பங்கு வழங்கலின்போது வழங்கல் பெறுமதியினை ஒரே முறையில் பெறும் பொழுது அதற்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்வார்.

பங்கு வழங்கலும், வழங்கல் பெறுமதியினைப் பெற்றுக் கொள்ளலும்

- பொதுப் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் இரு வகைப்படும்.

01. ஆரம்பப் பொது வழங்கல்
02. இயங்கிக் கொண்டிருக்கும் கம்பனியொன்றின் மேலதிகப் பங்கு வழங்கல் பங்கொன்றின் விலை எனப்படுகின்ற பங்குப் பிரதிபயனை ஒரேமுறையில் அல்லது தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

- **ஒரே முறையில் பிரதிபயனைப் பெறும்போது அதற்கான நாட்குறிப்புப் பதிவு.**

காசுக் கணக்கு (வரவு) xx
பங்கு வழங்கல் கணக்கு(செலவு) xx
(விண்ணப்பத்தின் மீது பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது.)

<u>பங்குகளை ஒதுக்குதல்.</u>

பங்கு வழங்கல் கணக்கு வரவு xx
கூறப்பட்ட பங்கு மூலதனக் கணக்கு(செலவு) xx
(பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.)

கம்பனியொன்று வழங்கத் தீர்மானித்த பங்குகளின் அளவினை விட கூடுதலான விண்ணப்பங்கள் கிடைக்குமாயின், மேலதிகமாக கிடைத்த விண்ணப்பப் பத்திரங்களை நிராகரித்து அப்பணத் தொகையினை மீள அனுப்புதல் வேண்டும். கூடுதலாக விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் அவற்றிற்கு ஏதாவதொரு விகிதம் அல்லது பல்வேறு விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு பங்குகளை ஒதுக்கலாம். இது விகிதாசார ஒதுக்கீட்டு முறை என அழைக்கப்படும்.

மேலதிகமாகக் கிடைக்கப் பெற்ற பணம் திருப்பியனுப்பப்படல் வேண்டும். அதன்போது பின்வருமாறு பதிவு செய்யப்படும்.

பங்கு வழங்கல் கணக்கு வரவு xx
காசுக் கணக்கு செலவு xx

பயிற்சி - 01

வரையறுக்கப்பட்ட நாதன் கம்பனி 60 000 சாதாரண பங்குகளையும் ரூ.40படி முற்றிலும் அழைத்த பங்குகளாக வழங்கியது 70 000 பங்குகளுக்கு விண்ணப்பத்தைப் பெற்ற கம்பனி மேலதிக மனுப்பணங்களை நிராகரித்து எஞ்சிய பங்குகளுக்கு ஒதுக்கல் செய்தது வேண்டப்படுவது :- நாட்குறிப்புப் பதிவுகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பயிற்சி – 02

வரையறுக்கப்பட்ட விமல் கம்பனி பதிவு செய்யப்பட்டவுடன் 100 000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 30 படி முற்றிலும் அழைக்கப்பட்ட பங்குகளை வழங்கியது. 120000 பங்குகளுக்கும் விண்ணப்பப் பணத்தினைப் பெற்றுக்கொண்ட கம்பனி மேலதிக விண்ணப்பங்களை நிராகரித்ததுடன் எஞ்சிய பங்குகளுக்கு ஒதுக்கல் செய்தது.

வேண்டப்படுவது :- நாட்குறிப்புப் பதிவுகள்

தேர்ச்சி மட்டம் 12.3: ஒதுக்கங்களை மூலதனமாக்கலும் உரிமை வழங்கலும் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்வார்.

உரிமைப் பங்கு வழங்கல்

வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றில் தற்போதுள்ள சாதாரண பங்குதாரர்களுக்குப் பணத்தினை அறவிட்டு குறிப்பிட்ட ஏதாவதொரு விகிதத்தில் பங்குவழங்கல் செய்வது உரிமைப் பங்கு வழங்கலாகும்.

ஒதுக்கங்களை மூலதனமாக்கல்

வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று தற்போதுள்ள சாதாரண பங்குதாரர்களுக்கு பணமெதுவும் அறவிடாது ஒதுக்கங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஏதாவதொரு விகிதத்தில் பங்குகளை வழங்குவதைக் குறிக்கும்.

உரிமைப் பங்கு வழங்கலுக்கான முறையான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்:

காசுக் கணக்கு வரவு
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு செலவு
(................ விகிதத்தில் உரிமைப் பங்கு வழங்கல்.)

ஒதுக்கங்களை மூலதனமாக்கலுக்கான முறையான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்:

பயன்படுத்தப்படும் குறித்த ஒதுக்கக் கணக்கு வரவு
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு செலவு
(........................ விகிதத்தில் உரிமைப் பங்கு வழங்கல்.)

பயிற்சிகள் - MCQ

01. வருமான ஒதுக்கங்களை பயன்படுத்தி உபகாரப்பங்கு வழங்கப்படும்போது கம்பனியின் உரிமை, கடன்கொடுநர் பாதுகாப்பு எவ்வாறு மாற்றமடையும்.

	உரிமை மூலதனம்	கடன்கொடுநர் பாதுகாப்பு
1)	அதிகரிக்கும்	மாறாது
2)	குறையும்	அதிகரிக்கும்
3)	மாறாது	குறையும்
4)	அதிகரிக்கும்	குறையும்
5)	மாறாது	மாறாது

2ம் 3ம் வினாக்களுக்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.

- ✓ இல் வரையறுத்த மாஜி கம்பனியின் ஏடுகளில் உள்ள கூறப்பட்ட பங்கு மூலதனம் 01.04.2018 இல் ஒவ்வொன்றும் ரூபா 20.00 விலையில் ரூபா 200,000.00 இத்தினத்தில் நிறுத்தி வைத்தலாபம் ரூபா 120,000.00
31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்
- ✓ 15.08.2018 ஒவ்வொன்றும் ரூபா 15.00 விலையில் 20000 பங்குகள் உரிமை வழங்கல் செய்யப்பட்டது.
- ✓ 25.12.2018 இத்திகதியில் உள்ள ஒவ்வொரு 5 பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூபா 10.00 விலையில் நிறுத்தி வைத்தலாபம் மூலதனமாக்கப்பட்டது.

02. 31.03.2019 இல் கம்பனியின் உரிமை மூலதனம் யாது?

1) ரூபா 500000 2) ரூபா 560000 3) ரூபா 520000
4) ரூபா 620000 5) ரூபா 420000

03. உரிமை மூலதனத்தில் ஏற்ப்பட்ட அதிகரிப்பு யாது?

1) ரூபா 300000 2) ரூபா 240000 3) ரூபா 520000
4) ரூபா 420000 5) ரூபா 200000

4,5,6,7 ஆம் வினாக்களுக்கு கீழுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக

- ✓ 1.4.2018 இல் வரையறுத்த ராஜி கம்பனியின் ஏடுகளில் உள்ள மீதிகள்
கூறப்பட்ட பங்குமூலதனம் ஒவ்வொன்றும் ரூபா 12.00 விலையில் ரூபா 360000
நிறுத்திவைத்தலாபம் ரூபா 90000
பொது ஒதுக்கம் 150000
- ✓ 31.3.2019 முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்.
- ✓ 15.06.2018 ஒவ்வொன்றும் ரூபா 15.00 விலையில் 10000 பங்குகள் உரிமை வழங்கள் செய்யப்பட்டது.
- ✓ 10.01.2018 இத்திகதியில் உள்ள ஒவ்வொரு 4 பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூபா 15.00 ஒதுக்குகள் மூலதனமாக்கப்பட்டது.
- ✓ 31.03.2017 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் ரூபா 115000 இதில் ரூபா 15000 இடைக்காலப் பங்குலாபமாக செலுத்தப்பட்டதுடன் ரூபா 20000 பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டது.

04. 31.3.2019 இல் கம்பனியின் நிறுத்திவைத்தலாபம் யாது?

1) ரூபா 50000 2) ரூபா 20000 3) ரூபா 30000
4) ரூபா 15000 5) ரூபா 40000

05. 31.03.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவு யாது?

1) ரூபா 250000 2) ரூபா 350000 3) ரூபா 450000
4) ரூபா 150000 5) ரூபா 400000

06. 31.03.2019 இல் தேறிய சொத்து யாது?

1) ரூபா 660000 2) ரூபா 750000 3) ரூபா 650000
4) ரூபா 450000 5) ரூபா 850000

07. 31.03.2019 இல் கூறப்பட்ட மூலதனம் யாது?

1) ரூபா 660000 2) ரூபா 400000 3) ரூபா 350000

4) ரூபா 450000 5) ரூபா 250000

பயிற்சி

2016 ஏப்ரல் 01 இல் வரையறுத்த சாந்தினி கம்பனியின் உரிமையாண்மையானது வருமாறு:

20 000 சாதாரண பங்குகள் ரூ. 400 000
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. 90 000
பகிரப்படாத இலாபம் ரூ. 35 000

மேலதிக தகவல்கள்

01. 31.03.2017 இல் முழுப்பணத்தையும் பெறக்கூடியதாக பங்கொன்று ரூ. 20 விலையில் 1000 சாதாரண பங்குகள் விநியோகிக்கப்பட்ட 1 500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று பங்குகள் விகிதாசார முறையில் ஒதுக்கப்பட்டு மேலதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.
02. காணியின் மீள்மதிப்பீட்டு இலாபம் ரூ. 15 000 ஏற்பட்டது.
03. 31.03.2017 இல் இலாபம் ரூ. 250 000 ஆகும்.
04. செலுத்திய பங்குலாபம் - சாதாரண பங்குகள் ரூ. 30 000
05. பொது ஒதுக்கத்திற்கு ரூ. 20 000 மாற்றுதல்
06. ஒதுக்கத்தினை மூலதனமாக்குதல் ஆனது நிறுத்தி வைத்த வருமானங்களை பங்கொன்று ரூ. 20 படி 5 பங்குகள் வைத்திருப்போருக்கு 1 பங்கு என்ற அடிப்படையில் மார்ச் 2017 இல் வழங்கப்பட்டது.

வேண்டப்படுவது :

2017.03.01 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று

விடை

வரையறுக்கப்பட்ட ________________ பொதுக் கம்பனியின் __________ இல்

முடிவடையும் வருடத்திற்கான உரிமைமாற்றல் கூற்று(ரூபா 000)

விபரம்	கூறப்பட்ட சாதாரண பங்குகள்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	நிறுவத்தி வைத்த இலாபம்	மொத்தம்
_____________ மீதி	**400000**	**90000**		**35000**	**525000**
பங்குவழங்கல்					
மொத்த முற்றும் அடங்கிய வருமானம்					
பொது ஒதுக்கத்திற்கு மாற்றியது					
பங்குலாபம்செலுத்தியது					
ஒதுக்கங்களை மூலதனமாக்கல்					
_______________ மீதி					

தேர்ச்சி மட்டம் 12.4.1: இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்

பயிற்சி – 01

வரையறுத்த கொவிட் பொதுக் கம்பனியின் 31.03.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

விபரம்	வரவு (ரூ.'000)	செலவு (ரூ.'000)
நிலமும் கட்டிடமும் (கிரயத்தில்)	4 200	
தளபாடங்களும் பொருத்துக்களும் (கிரயத்தில்)	4 000	
01.04.2011 இல் திரண்ட பெ.தே .தளபாடபொருத்துக்கள்		400
01.04.2011 இல் திரண்ட பெறுமானத்தேய்வு – கட்டிடம்		500
வியாபார வருமதிகள்	400	
01.04.2019 இல் எதிர்பார்க்கை நட்டத்திற்கான படிகள்		50
01.04.2019 இல் சரக்கிருப்பு (கிரயத்தில்)	500	
காசும் காசுக்கு சமமானவைகளும்	150	
விற்பனைகள்		4 800
கொள்வனவுகள்	1 500	
விநியோக செலவுகள்	550	
நிர்வாக செலவுகள	600	
நிதி செலவுகள்	100	
ஆண்டு காலத்தில் செலுத்திய வருமானவரி	60	
01.04.2019 இல் விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு		48
வியாபாரக் கொடுக்குமதிகள்		1162
செலுத்திய இடைக்கால பங்குலாபம்	100	
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (400 000 பங்குகள்)		4 000
01.04.2019 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்		1 200
	9 750	**9 750**

மேலதிக தகவல்கள்:

01. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தின் மாற்றம் பின்வருமாறு:

	ரூபா.'000
01.04.2019 இல் மீதி	3 000
வருட காலத்தினுள் வழங்கிய 100 000 பங்குகளின் பெறுமதி	1 000
31.03.2020 இல் மீதி	**4 000**

02. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க முன்னர்
பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்

I. உயர்தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் நிலமானது 31.03.2020 இல் ரூபா 2 500 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

II. கட்டிடங்களின் கிரயம் ரூபா 2 000 000 ஆகும். இவற்றிற்கு மீள்மதிப்பீட்டு பெறுமானத்தில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

III. உயர்தொழில் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் கட்டிடமானது முதல் தடவையாக
01.04.2019 இல் ரூபா 1 000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

03. தளபாடங்களும் பொருத்துக்களும் நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். வருட இறுதியில் காணப்படும் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்கிற்கான படிகள் 10% செய்வது கம்பனியின் கொள்கையாகும்.

04. 31.03.2020 இல் சரக்கிருப்புக்களின் கிரயம் ரூபா 500 000 ஆகும். இத்திகதியில் சரக்குகளின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 450 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

05. கம்பனியானது விற்பனை உத்தரவாதத்துடன் பொருட்களை விற்பனை செய்கிறது. இந்த உத்தர வாதத்திற்காக வருடாந்த தேறிய விற்பனையில் வருடாந்தம் 2% ஏற்பாடு செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

06. கம்பனியானது பொருட்களை விநியோகிப்பதற்காகப் பயன்படுத்துவதற்கு நிதிக் குத்தகையின் கீழ் 01.04.2019 இல் வாகனமொன்றை வாங்கியது. இத்திகதியில் இவ் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூபா 2 500 000 ஆக இருந்ததுடன் அது ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதிக்குச் சமமாக இருந்தது.

பின்வரும் தகவல்களும் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

குத்தகைக் காலம் - 5 வருடங்கள்

வாகனத்தின் பயன்தருவாழ்வுக்காலம் - 5 வருடங்கள்

வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம்(வருட இறுதியில் செலுத்த வேண்டியது)
ரூபா 600 000 (இவற்றுள் ரூபா 100 000 வட்டியாகும்).

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் குத்தகைக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய குத்தகைத் தவணைக் கட்டணம் ஆனது வியாபாரக் கொடுக்குமதிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

மோட்டார் வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடாந்தம் 20% பெறுமானத்தேய்விடுவது கம்பனியின் கொள்கையாக உள்ளது.

07. கம்பனியானது தனது எல்லா நடைமுறையல்லாச் சொத்துக்களையும் 01.04.2019 இல் காப்புறுதி செய்துள்ளதுடன் 30.09.2020 இல் முடிவடையும் காலத்திற்கான

காப்புறுதிக்கட்டணம் ரூபா 150 000 செலுத்தியுள்ளது. செலுத்திய இக்காப்புறுதியானது நிர்வாகச் செலவுகளுள் உள்ளடங்கியுள்ளது.

08. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான வரியானது வரிக்கு முந்திய இலாபத்தின் ¼ என மதிப்பிடப்பட்டுள்ளது.
09. இயக்குனர்சபை இவ்வருடத்திற்கான இறுதிப் பங்குலாபமாக ரூபா 100 000 இனைப் பிரேரித்துள்ளது.
10. நிறுத்திவைத்த வருவாய்களிலிருந்து ரூபா 500 000 இனை மாற்றுவதன் மூலம் வருட இறுதியில் பொது ஒதுக்கத்தினை உருவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

கொவிட் பொதுக் கம்பனிக்கான பின்வரும் நிதிக் கூற்றுக்களைப் பிரசுரிக்கும் நோக்கத்துக்காக (குறிப்புகள் உட்பட) தயாரிக்குக.

I. 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் எனைய முற்று மடங்கிய வருமானக் கூற்று.
II. 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று.
III. 31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

……………………………. கம்பனியின் …………………. திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய <u>வருமானக்கூற்று</u>

	குறிப்பு	ரூபா(000)	ரூபா(000)
விற்பனை			
விற்பனைக் கிரயம்			
மொத்த இலாபம்			
ஏனைய வருமானம்			
விநியோகக் கிரயங்கள்			
நிர்வாகச் செலவுகள்			
ஏனைய செலவுகள்			
நிதிக்கிரயம்			
வரிக்கு முன் இலாபம்	01		
வருமானவரிச் செலவு	02		
வருடத்திற்கான/காலப்பகுதிக்கான இலாபம்			
<u>ஏனைய முற்றும் அடங்கிய வருமானம்</u>			
ஆத.பொறி உப.மீள் மதிப்பீட்டுமிகை/குறை மாற்றம்			
மொத்த முற்றும் அடங்கிய வருமானம்			

.. கம்பனியின் ....

திகதியிலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (ரூபா 000)

சொத்துக்கள்	குறிப்பு	ரூபா(000)	ரூபா(000)
நடைமுறை அல்லாத சொத்து			
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	03		
சொத்து பாவனை உரிமை	04		
முதலீடு (நீண்டகாலம்)			
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்			
வியாபார வருமதிகள்			
காசு,காசுக்கு சமனானவை	05		
மொத்த சொத்துக்கள்			
உரிமையும் பொறுப்புகளும்			
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்			
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்			
பொது ஒதுக்கம்			
நிறுத்தி வைத்த உழைப்புக்கள்			
நடைமுறை அல்லத பொறுப்புக்கள்			
குத்.பொறு.செலுத்தும் கடப்பாடு			
வங்கிக் கடன்			
நடைமுறை பொறுப்புக்கள்			
குத்.பொறு.செலுத்தும் கடப்பாடு			
வியாபார கொடுக்குமதிகள்			
வருமானவரி ஏற்பாடு			
உழைக்கப்படாத வருமானம்			
ஏனைய கொடுக்குமதிகள்	06		
மொத்த உரிமையும் பொறுப்புக்களும்			

மத்திய கல்வித் திணைக்களம்

வரையறுக்கப்பட்ட _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ பொதுக் கம்பனியின் _ _ _ _ _ _ _ _ _ இல்

முடிவடையும் வருடத்திற்கான உரிமைமாற்றல் கூற்று(ரூபா 000)

விபரம்	**கூறப்பட்ட சாதாரண பங்குகள்**	**மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்**	**பொது ஒதுக்கம்**	**நிறுவத்தி வைத்த இலாபம்**	**மொத்தம்**
_ _ _ _ _ _ _மீதி.கீ.கொ.வ					
மொத்த முற்றும் அடங்கிய வருமானம்					
பொது ஒதுக்கத்திற்கு மாற்றியது					
ஒதுக்கங்களை மூலதனமாக்கல்					
பங்குலாபம்செலுத்தியது					
_ _ _ _ _ _ _ _ _ _ மீதி					

குறிப்புக்கள்

குறிப்பு – 01 வரிக்கு முன் இலாபத்தைக் கணிக்கும் போது பின்வரும் செலவு

உருப்படிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

காணி மீள்மதிப்பீட்டு நட்டம்
மோட்டார் வாகன நட்டம்
இருப்பு நட்டம்
ஆதனம், பொறி உபகரணத் தேய்வு
குத்தகைச் சொத்துரிமைத் தேய்வு
ஊழியர் இழப்பீடு
கணக்காய்வு கட்டணம்
இயக்குநர் சம்பளம்
வங்கிக் கடன் வட்டி
குத்தகைக் கடன் வட்டி

குறிப்பு – 02 வருமானவரி

நடைமுறை வருட வரி
சென்றாண்டு வரி மிகை/குறை

குறிப்பு – 03 ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (ரூபா 000)

கிரயம்	காணி				
_ _ _ _ _ _ _ _ _ _ _ _இல் மீதி					
கொள்வனவு					
சேர்ப்பு / மீள்மதிப்பீடு மிகை					
அகற்றுதல் / மீள்மதிப்பீடு குறை					
திரண்ட தேய்வு					
_ _ _ _ _ _ _ _ _ _ _ _இல் மீதி					
திரண்ட பெறுமானத் தேய்வு					
_ _ _ _ _ _ _ _ _ _ _ _இல் மீதி					
இவ் வருடத்தேய்வு					
அகற்றிய தேய்வு					
_ _ _ _ _ _ _ _ _ _ _ மீதி					
_ _ _ _ _ _ _ _ _ _ **இல் கொண்டு செல் தொகை**					

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

குறிப்பு – 04 சொத்து பாவனை உரிமை

கிரயம்	–––––
__________இல் மீதி	
சேர்ப்பனவுகள் :	
இனம்காணலில் பெறுமதி	
புதுப்பித்தல் கிரயம்	
__________இல் மீதி	
திரண்ட பெறுமானத் தேய்வு	
__________இல் மீதி	
சேர்ப்புக்கள்	
__________இல் மீதி	
__________**இல் கொண்டு செல் தொகை**	

குறிப்பு – 05 காசும் காசுக்கு சமனானவை
திறைசேரி உண்டியல்
சில்லறைக் காசு மீதி
காசுமீதி

குறிப்பு – 06 ஏனைய கொடுக்குமதிகள்

குறிப்பு – 07 சாதாரண பங்குகளுக்கு இயக்குனர்சபை ரூ ______ பங்குலாபத்தை முன்மொழிந்துள்ளனர்

செய்கைகள்

விநியோகச் செலவு	**ரூபா000**
சொ.ப.படு.உ.தேய்வு	
மோட்டார்	**95**
நிதிச் செலவு	**ரூபா000**
குத்தகை வட்டி	

நிர்வாகச் செலவு	**ரூபா000**
ஏனைய செலவுகள்	**ரூபா000**

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

விற்பனைக் கிரயம்

பயிற்சி – 02

வரையறுகக்பட்ட சசிரி பொதுக் கம்பனியின் 2017.03.31 அந் திகதி பரீட்சை மீதி பின்வருமாறு

ரூபா "000"

விபரம்	வரவு	செலவு
விற்பனை		16100
கொள்வனவு	9775	
ஊழியர் சம்பளம்	1,200	
கட்டிட வாடகை	1,800	
குத்தகைக் கடன் கொடுத்தோர்		1200
2016.04.01 ஆந் திகதியில் ஆதனம், பொறி, உபகரணம்		
- கிரயம்	14000	
- பெறுமானத் தேய்வு ஒதுக்கம்		975
செலுத்திய வருமான வரி (2016.12.31 வரை)	120	
வியாபார வருமதிகள்	4000	
வங்கி மீதி	390	
2016.04.01 இல் இருப்பு	3000	
வியாபார செல்மதிகள்		2000
கூறப்பட்ட சாதாரன பங்கு மூலதனம் (2016.04.01)		10000
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி		1850
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் - உபகரணம்		500
2016.04.01 ஆந் திகதிக்கு நிறுத்தி வைத்த இலாபம்		1200
செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம்		120
ஊழியர் இழப்புகள் தொடர்பான இழப்பீடு (2016.04.01)		100
ஐயக் கடன் ஒதுக்கீடு (2016.04.01)		250
அறவிட முடியாக் கடன்	100	
	34,385	**34,385**

மேலதிகத் தகவல்கள்

1. கம்பனியால் ஒரே வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு 2017.03.31 ஆந் திகதிக்கு இருப்பில் பொருள் அலகுகள் 2000 இருந்தது. இருப்பின் ஒரு அலகுக்கான கிரயம் ரூபா 120 ஆவதுடன் ஒரு அலகுக்கான எதிர்பார்க்கப்பட்ட விற்பளை விலை ரூபா 115 ஆகும். ஒரு அலகு விற்பனைக்காக ஒரு அலகுக்கு ரூபாய் 5 தரகுக் கட்டணமாக செலுத்த வேண்டி உள்ளது.
2. 2017.03.31 ஆந் திகதி செலுத்தப்படாத மின் கட்டணம் ரூபா 100, 000 ஆகும்.
3. இக் கம்பனியானது 2016.04.01 முதல் வாடகைஅடிப்படையில்பெற்றுக் கொள்ளக்கட்ட கட்டிடம் ஒன்றிலேயே நடாத்திச் செல்லப் படுகிறது. வாடகை ஒப்பந்தப்படி ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் மாதாந்த வாடகை ரூபா 10000 இனால் அதிகரிக்கப்படுவதுடன் 2 வருடத்துக்கான கூலி ஒரே நேரத்தில்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

செலுத்தப்பட்டு 2016 / 17 இற்கான வாடகை என மொத்தமாகக் பதியப்பட்டுள்ளது.

4. கம்பனியின் இயக்குனர் சபையின் பயன்பாடு கருதி நிதிக் குத்தகை அடிப்படையில் 2015.04.01 இல் ஒன்றின் சாதாரண விலைப் பெறுமதி ரூபா 1, 000, 000 படியான 3 மோட்டார் வாகனங்கள் 4 வருடத்தவணைகளில் செலுத்தித் தீர்ப்பது என்ற வாக்குறுதியின் அடிப்படையில் பெறப்பட்டதோடு, கொடுக்கவேண்டிய வருட குத்தகைக் கட்டணம் ரூபா 850, 000 ஆகும். 2016 / 17 ஆண்டுக்கான குத்தகைக் கட்டணம் காசாக செலுத்தப்பட்டு அது குத்தகைக் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் 2015 / 16 ஆண்லெ் இக் கொடுக்கல் வாங்கல் உரிய முறைப்படி அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறித்த சில வருடங்களுக்குறிய குத்தகை வட்டி பின்வருமாறு

2016 / 2017 ரூபாய் 180, 000

2017 / 2018 ரூபாய் 145, 000

2018 / 2019 ரூபாய் 85, 000

5. 2016.04.01 ஆந் திகதி உபகரணம் ரூபா 1, 500, 000 இற்கும் மற்றும் காணி ரூபா 8, 500, 000 இற்கும் அங்கீகாரம் பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரைக் கொண்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டதெனினும் ஏடுகளில் பதியப்படவில்லை.

6. கம்பனியானது VAT தொடர்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருப்பதோடு பண்டங்களை கொள்வனவு, விற்பனை செய்யும் போது உரிய 15% VAT கொள்வனவு, விற்பனை பெறுமதியோடு கூட்டியதைத் தவிர வேறு எப் பதிவுகளும் இடம் பெறவில்லை.

7. கம்பனியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட இரு ஊழியர்கள் கம்பனிகு எதிராக தொடுக்கப்பட்ட இழப்பீட்டு வழக்கொன்று நீண்ட கால விசாரணையின் பின் ரூபா 200, 000 பெறுமதியான இழப்பீடொன்றை கொடுக்க வேண்டி ஏற்படுமென கம்பனி சார்பாக வாதாடிய வழக்கறிஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

8. 2016.04.01 ஆந் திகதி ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களினதும் அவற்றின் திரண்ட தேய்வினதும் உள்ளடக்கம் பின்வருமாறு

விபரம்	**கிரயம் / மதிப்பீட்டுப்பெறுமதி**	**திரண்ட தேய்வு**
	(ரூபாய்)	**(ரூபாய்)**
காணி – நியாய விலை	7500	
உபகரணம்	2000	300
மோட்டார் வாகனம் (குத்தகை)	3000	450
மோட்டார் வாகனம்	1500	225
	14,000	**975**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு முறைப் படி வருடாந்தம் 15% பெறுமானத் தேய்வு இடப்படல் வேண்டும்

9. கம்பனிக்கு சொந்தமான காணியில் ரூபா 500, 000 மதிப்பிடப்பட்ட பகுதியொன்று பாதை விஸ்தரிப்புக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பொறுப்பேற்கப்பட்டதோடு அது தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதியை வழங்க குறித்த நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இது தொடர்பாக எப் பதிவுகளும் ஏடுகளில் பதியப்படவில்லை.

10. ஊழிர் நம்பிக்கை நிதியத்திற்காக மொத்த சம்பளத்தில் தொழில் தருனர் பங்களிப்பு 15% ஆகவும், ஊழியர் பங்களிப்பு 10% ஆகவும் இருப்பதோடு ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான தொழில் தருனர் பங்களிப்பு 3% ஆகும். 2016 / 2017 ஆண்டின் EPF, ETF. தொடர்பாக தொழில் தருனர் பங்களிப்பு தொடர்பான பதிவுகள் ஏடுகளில் பதியப்பட வில்லை.
11. 2017.03.31 ஆந் திகதி வியாபார வருமதிகளின் மீதியின் மீது ஐயக் கடன் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
12. 2016 / 2017 இறுதிக் காலாண்டில் வரிச் செலவு ரூபா 150, 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

1. 2017.03.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று
2. 2017.03.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று
3. 2017.03.31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று

பயிற்சி – 03

சபா PLCயின் 31.12.2019ல் உள்ளவாறான பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

	DR (ரூ000)	**CR** (ரூ000)
விற்பனைகள்		60,000
விற்ற சரக்கின் கிரயம்	32,000	
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	80,000	
01.04.2018ல் ஆத.பொ. உபகரணம் திரண்ட தேய்வு		12,500
இருப்புக்கள்	3,800	
வியாபார வருமதிகள்	8,000	
வியாபார சென்மதிகள்		8,600
01.04.2018ல் கூறப்பட்ட சாதாரண பங்குகள்		40,000
நிறுத்தி வைத்த இலாபம்		8,000
பொது ஒதுக்கம்		3,500
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் (நிலம்)	500	
நிர்வாகச் செலவுகள்	2,600	
விநியோகச் செலவுகள்	3,400	
நிதிச் செலவுகள்	600	
ஏனைய செலவுகள்	1,400	
01.04.2018ல் உத்தரவாத ஏற்பாடு		420
செலுத்திய வருமான வரி	1,100	
01.04.2018ல் வருமான வரி ஏற்பாடு		700
குத்தகைக் கொடுப்பனவுகள்	800	
காசும் காசுக்கு சமமானவைகளும்	1,020	
	134,720	**134,720**

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

31.03.2019ல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

01. 31.03.2019ல் பரீட்சை மீதியில் காணப்படும் இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ.3600 000 ஆகும்
02. 2019.03.26ல் களஞ்சியத்தில் களவு இடம்பெற்றுள்ளதுடன் பின்னர் மேற்கொண்ட விசாரணையில் ரூ. 800,000 கிரயப் பெறுமதிகொண்ட தொக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இவ் இழப்பு தொடர்பாக காப்புறுதிக் கம்பனி 2019.03.31ல் கிரயப் பெறுமதியில் 90% ஐ நட்ட ஈடாக வழங்க உடன்பட்டது. இது தொடர்பாக கணக்கேடுகளில் பதிவுகள் ஏதும் செய்யப்படவில்லை.
03. நிருவாகச் செலவுகளுக்குள் உள்ளடங்கியுள்ள ரூ.1,800,000 சம்பளமானது ஊழியர்களுக்கு செலுத்திய தேறிய சம்பளத்தை பிரதிநிதிப்படுத்துகின்றது. தேறிய சம்பளமானது ஊழியர் சேமலாப நிதிக்கான ஊழியர்களின் பங்களிப்பினைக் கழித்து கணிக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதிக்கான தொழில் கொள்வோர் மற்றும் ஊழியர்களது பங்களிப்பானது முறையே 15% மற்றும் 10% ஆகும். எனினும் நடைமுறை வருடத்திற்கான தொழில் கொள்வோர் மற்றும் ஊழியர்களது பங்களிப்பானது ஊழியர் சேமலாப நிதியத்துக்கு இன்னும் செலுத்தப்படாதுள்ளதுடன் கணக்கேடுகளிலும் பதியப்படவுமில்லை.
04. நிருவாகச் செலவில் காணப்படும் இயக்குனர்கள் கட்டணங்களும் கணக்காய்வுக் கட்டணமும் முறையே ரூ. 400,000 ம் 50,000ம் ஆகும். செலுத்த வேண்டிய இயக்குனர்கள் கட்டணம் ரூபா 60,000 கணக்காய்வு கட்டணம் ரூ. 30,000 ஆகும்.
05. கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்வதுடன் கடந்த வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் செலுத்திய உத்தரவாதச் செலவுடன் ரூ. 380,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இது நடைமுறை வருடத்தில் விநியோகக் கிரயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.03.2019ல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடு ரூ 560,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
06. நடைமுறை ஆண்டில் பணியில் இருந்து நீக்கப்பட்ட ஊழியன் ஒருவன் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளான். கம்பனியின் சட்டத்தரணியின் அபிப்பிராயப்படி நட்டஈடு ரூ. 150,000 செலுத்த வேண்டிவரும் என எதிர்பாக்கப்படுகிறது.
07. கம்பனியானது 01.04.2019ல் குத்தகை உடன்படிக்கையின் கீழ் மோட்டார் வாகனம் ஒன்றை 4 வருட காலத்திற்கு பயன்படுத்தும் உரிமையை பெற்றுள்ளது. இம் மோட்டார் வாகனம் விநியோக நடவடிக்கைக்கு பயன்படுத்துவதுடன் இதன் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்கள் என்பதுடன் எஞ்சிய பெறுமதி எதுவுமில்லை எனக் கொள்க. வருடாந்தக் குத்தகை தவணைக் கட்டணம் (வட்டி உள்ளடங்களாக) ரூபா. 800,000 ஆகும். இது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் செலுத்தப்படும். இந்நிதியாண்டுக்காக செலுத்தப்பட்ட குத்தகைத் தவணைக்கட்டணம் குத்தகைக் கொடுப்பனவு கணக்கில் பதியப்பட்டதைத் தவிர வேறு எந்தப் பதிவுகளும் ஏடுகளில் இடம்பெறவில்லை. குத்தகைக்கான வட்டி 10% ஆகும். அந்த வட்டி வீதத்தின் கீழ் வருடாந்த கழிவுக்காரணி பின்வருமாறு

வருடம்	1	2	3	4
கழிவுக்காரணி	0.91	0.83	0.75	0.68

08. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும் அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வு

	31..03.2019ல் கிரயம்/பெறுமதி (ரூ.000)	01.04.2019 திரண்ட பெ.தே. (ரூ.000)
காணி	25,000	-----
கட்டிடங்கள்	40,000	8,000
காரியாலய உபகரணங்கள்	15,000	4,500

நடைமுறை வருடத்திற்கான பெறுமானத் தேய்வானது இதுவரை செய்யப்படவில்லை. காரியாலய உபகரணங்களுக்கு கிரயத்தின் மீது வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகின்றது.

09. கட்டடங்கள் இரண்டாவது தடவையாக 01.04.2018 ல் ரூபா 36,000,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 31.03.2014ல் முதல் தடவையாக கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போது ரூ 1,500,000 குறை ஒன்று ஏற்பட்டுள்ளது. இரண்டாவது மீள் மதிப்பீட்டுக்கு பின்னர் கட்டிடத்தின் எஞ்சிய பயன்தரு ஆயுட்காலமானது 10 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கட்டடத்தின் எஞ்சிய பெறுமதி பூச்சியம் எனக்கொண்டு இரண்டாது தடவை மீள்மதிப்பீட்டுக்காக எதுவித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

10. 31.03.2019ல் ரூ 400,000 பெறுமதி கொண்ட கடன்பட்டோர் ஒருவர் 30.04.2019ல் முறிவடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். 15.05.2019 ல் நிதிக்கூற்றுக்களை வெளியிட இயக்குனர்கள் அதிகாரம் அளித்துள்ளனர்.

11. நடைமுறை வருடத்தில் செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்திற்காக செலுத்திய ரூபா 600,000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2019ல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமான வரி பொறுப்பானது ரூபா. 800,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

12. ஒதுக்கங்களை மூலதனமாக்கல் அடிப்படையில் 01.04.2018ல் காணப்பட்ட சாதாரண பங்குகளுக்கு அன்ளூ உடைமையாக இருந்த 20:1 என்ற அடிப்படையில் நிறுத்தி வைத்த வருவாயினைப் பயன்படுத்தி பங்கொன்று ரூ 250 படி வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளல்.

13. செலுத்திய இடைக்கால பங்கிலாபம் ரூ. 1,200,000 விநியோக கிரயங்களில் உள்ளடங்கியுள்ளது.

14. 31.03.2019ல் இயக்குனர்களின் தீர்மானங்கள் ரூ. 500,000 ஐ பொது ஒதுக்கத்திற்கு மாற்றுவதும், இறுதிப்பங்குலாபமா ரூ800,000 பிரேரித்தலும்.

வேண்டப்படுவது

LKAS 1 (நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான சபா **PLC**இன் பின் வரும் நிதிக்கூற்றுக்கள்.

I. 31.03.2019ல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று.

II. 31.03.2019ல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றத்துக்கான கூற்று

III. 31.03.2019ல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று. (குறிப்புக்கள் உட்பட)

பயிற்சி – 04

சண்முகம் PLC ஆனது உள்ளீட்டு VAT க்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இதன் 31.03.2020 இல் உள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	வரவு(ரூ. 000)	செலவு(ரூ. 000)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	89 500	
01.04.2019 இல் ஆத.பொ.உபகரண திரண்ட தேய்வு		14 500
விற்பனைகள்		89 680
விற்ற சரக்கின் கொள்விலை	45 000	
31.03.2020இல் இருப்புக்கள்	4 200	
வியாபார வருமதிகள்	23 300	
வியாபார கொடுமதிகள்		19 000
குத்தகை கொடுப்பனவுகள்	6 300	
காசும் காசுக்கு சமமானவையும்	2 430	
01.04.2019 இல் உத்தரவாத ஏற்பாடு		580
கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனம் (பங்கு ரூ 90படி)		45 000
பொது ஒதுக்கம்		2 250
மீள்மதிப்பு ஒதுக்கம்		800
01.04.2019 இல் நிறுத்தி வைத்த வருவாய்கள்		6 395
நிர்வாகச் செலவுகள்	4 500	
விநியோகச் செலவுகள்	5 200	
நிதிச் செல்வுகள்	750	
ஏனைய செலவுகள்	1800	
செலுத்திய வருமான வரி	1950	
01.04.2019 இல் வருமான வரிக்கான ஏற்பாடு		725
31.03.2020 இல் VAT சென்மதி		6000
	184 930	**184 930**

மேலதிக தகவல்கள் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும்.

01. நிறுவனத்தின் ஆரம்ப இருப்பானது 8950 000 ஆகும். இவ்வாண்டு கொள்வனவின் போது செலுத்தவேண்டிய VAT இனை கொள்வனவுக் கணக்கில் வரவிலும் வியாபார கொடுமதிகள் கணக்கில் செலவிலும் பதிவு செய்ததைத்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை. (VAT 15%) என்பதுடன் இறுதி இருப்பில் VAT உள்ளடங்கவில்லை.

02. கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்தில் விற்பனை செய்வதுடன், கடந்த வருடத்தில் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக நடைமுறை வருடத்தில் செலுத்திய உத்தரவாதச் செலவுகள் ரூ. 470 000 ஆகும். இது நடைமுறை வருடத்தின் விநியோக கிரயங்களில் உள்வாங்கப்பட்டுள்ளது. 31.03.2020 இல் உத்தரவாதத்திற்கான ஏற்பாடானது ரூ. 650 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

03. நிறுவனமானது 01.10.2019 இல் ஒவ்வொரு 20 சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் பொது ஒதுக்கங்களை பங்கு ஒன்று ரூ. 90 படி மூலதனமாக்கியுள்ளது. மேலும் 31.03.2020 இல் ஒவ்வொரு 25 சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் பங்கு ஒன்று ரூ. 80 படி உரிமை வழங்கள் மேற்கொள்ளப்பட்டது. பங்கு வழங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட காசானது காசுக் கணக்கில் வரவிலும் விற்பனைக் கணக்கில் செலவிலும் பதிந்ததைத் தவிர வேறு எப்பதிவும் இக் கொடுக்கள் வாங்கல் தொடர்பில் இடம்பெறவில்லை.

04. கம்பனியானது 01.04.2019 இல் குத்தகை உடன் படிக்கை ஒன்றில் ரூ. 9000 000 நியாயமான பெறுமதியுள்ள விநியோக வாகனம் ஒன்றை கொள்வனவு செய்தது, இதன் குத்தகைப் பெறுமதி 12915 000 ஆகும் குத்தகை ஒப்பந்தத்தின் படி இவ் வாகனத்தை பெற்றுக்கொள்ளும் போது ஆரம்பவைப்புப்பணமாக ரூ. 3000 000 செலுத்தப்பட்டுள்ளதுடன் 1ம் தவணைக் கட்டணமாக ரூ. 3300 000 இனை 31.03.2020 இல் செலுத்தியுள்ளது.
மேலும் 2ம் மற்றும் 3ம் தவணைகள் முறையே 3300 000 , 3315 000 படி அடுத்துள்ள வருடங்களில் செலுத்த வேண்டியுள்ளது. ஆண்டு குத்தகை வட்டடி வீதம் 30% ஆகவும் பெறுமனத் தேய்வு 20% ஆகவும் உள்ளது.

05. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கமும் அவற்றின் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் பின்வருமாறு:

விபரம்	31.03.2020 இல் கிரயம்/பெறுமதி(ரூ.000)	1.04.2019 இல் திரண்ட பெ.தேய்வு (ரூ.000)
காணி	30000	
கட்டடங்கள்	45000	11000
காரியாலய உபகரணங்கள்	14500	3500
	89500	**14500**

06. பரீட்சை மீதியிலுள்ள மீள் மதிப்பீட்டு மிகையானது 31.03.2017 இல் காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டதை பிரதிபலிக்கின்றது. நடைமுறை வருடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பின்வருமாறு:

- 01.07.2019 இல் காணி ரூ. 10 000 000 கிரயத்தில்

இந்த உருப்படிகள் முறையாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

07. 01.04.2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 3 000 0000 கிரயமுள்ள உபகரணம் ஒன்று 30.09.2019 இல் ரூ. 500 000 க்கு பகுதி மாற்றம் செய்யப்பட்டது. பகுதி மாற்றம் செய்யப்பட்ட புதிய உபகரணம் ரூ. 5 000 000 ஆகும். இப் பகுதி மாற்றம் மூலம் செலுத்தப்பட்ட காசு ரூ. 4500 000

உபகரணக் கணக்கில் வரவிலும் காசுக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதைத் தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை. உபகரண வருடாந்த தேய்வு வீதம் 25% ஆகும்.

08. கட்டடங்கள் இரண்டாவது தடவையாக 01.04.2019 இல் ரூ. 38 000 000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. 31.03.2015 இல் முதற்தடவையாக கட்டடங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போது ரூ. 1 500 000 குறை ஒன்று ஏற்பட்டுள்ளது. இரண்டாவது தடவை மீள் மதிப்பீட்டுக்கு பின்னர் கட்டடத்தின் எஞ்சிய பயன்தரு ஆயுட்காலமானது 8 வருடங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கட்டடங்களின் எஞ்சிய பெறுமதி பூச்சியம் எனக்கொள்க. இரண்டாவது தடவையாக மீள்மதிப்பீட்டுக்காக எது வித கணக்கீட்டு பதிவும் இடம்பெறவில்லை.

09. நடைமுறை வருடத்தில் செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்திற்காகச் செலுத்திய ரூ. 600 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான மொத்த வருமானவரிப் பொறுப்பானது ரூ. 1 920 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

10. வாடிக்கையாளர் ஒருவரால் கம்பனிக்கு எதிராக தாக்கள் செய்யப்பட்ட வழக்கொன்று தொடர்பில் 10.06.2020 இல் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி இத்திகதியில் ரூ. 500 000 இற்கான கோரிக்கையானது வாடிக்கையாளருக்கு செலுத்தப்பட்டது. இவ்வழக்கானது 01.01.2020 இல் தாக்கள் செய்யப்பட்டதாகும். எனினும், கம்பனியானது இக்கோரிக்கை மீது 31.03.2020 வரை ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லை. கம்பனியின் நிதிக்கூற்றுக்களை 30.05.2020 இல் வெளியிட இயக்குனர் சபையால் அதிகாரம் அளித்துள்ளது.

11. செலுத்திய இடைக்காலப் பங்கு இலாபம் ரூ. 1 500 000 தொகையானது விநியோகக் கிரயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இயக்குனர்கள் 30.5.2020 இல் பங்குதாரர்களுக்கு ரூ. 1 000 000 இறுதிப்பங்குலாபத்தை பிரேரித்துள்ளனர்.

12. 31.03.2020இல் கம்பனி ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது.
அதன் விபரம் குளிரூட்டி **(Air condition)** உபகரணத்தை விற்பனை செய்தல் அதற்கு இரு வருட பராமரிப்பு சேவையினை மேற்கொள்ளல் குளிரூட்டியின் **விலை ரூ60000** இரு வருட விற்பனையின் பின்னரான பராமரிப்பு சேவை **ரூ 40000** (வருடத்திற்கு ஒரு சேவை என்ற அடிப்படையில்) இவ்விரண்டும் சேர்த்து **ரூ 75000** என்ற அடிப்படையிலேயே ஒப்பந்தம் மேற்கொண்டு அதற்கான முழுத்தொகையினையும் சண்முகம் PLC நிறுவனம் குமரன் PLC யிடம் பெற்றுக் கொண்டது. பெற்றுக்கொண்ட காசு ரூ 75000 காசுக்கணக்கிலும் விற்பனைக்கணக்கில் பதிவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது

LKAS 1 படி பிரசுரிப்பதற்கு தேவையான சண்முகம் PLC இன் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட)

01. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றடங்கிய வருமானக்கூற்று
02. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று
03. 31.03.2020 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று

பயிற்சி - 05

எழுதுபொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வரையறுத்த சுமதி பொதுக்கம்பனியின் 31.3.2016 இல் உள்ளவாறான பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது. இது பெறுமதிசேர் (VAT) பதிவினை கொண்ட கம்பனியாகும்.

விபரம்	வரவு 000	செலவு 000
சம்பளம்	1000	
வாடகை	540	
மின்சாரம்	120	
தொலைபேசி	75	
கொள்வனவு	6000	
VAT கொடுப்பனவு	600	
1.4.2015 ஆதனம்பொறி உபகரணம்	10000	
1.4.2015 சரக்கிருப்பு	1200	
வியாபார வருமதி	7000	
கையிலுள்ளகாசு	730	
நடைமுறையாண்டிற்கு செலுத்தப்பட்ட வரி	535	
விற்பனை		12000
VAT சேகரிப்புக்கள்		1320
கூறப்பட்ட பங்குமூலதனம்		40000
1.4.2015 இல் நிறுத்திவைத்த வருவாய்		2327
மீள்மதிப்புஒதுக்கம் அலுவலக உபகரணம்		600
குத்தகைகடன்கொடுநர்		2353
பொதுஒதுக்கம்		1200
1.4.2015 திரண்டதேய்மானம்		4000
	27800	**27800**

மேதிக தகவல்கள்

31.3.2016 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கமுன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கம்செய்யவேண்டும்.

1. வியாபார முகவருக்கு விற்பனையில் 2% செலுத்தப்பட்ட தரகு சம்பளங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2. 2016 மார்ச் மாத மின்சாரக்கட்டனம் ரூ 15000 இன்னும் செலுத்தப்படவில்லை.
3. 2016 மார்ச் மாதத்திற்கான தொலைபேசிக்கட்டனம் ரூ18000 முற்பனமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மார்ச் மாதத்திற்கான கட்டனம் ரூ 8000
4. கம்பனி சரக்கிருப்பை உருப்படி அடிப்படையில் பெறுமதியிடுகின்றது 31.3.2016 இல் சரக்கிருப்பானது மூன்று வகையான எழுதுகருவி உருப்படிகளை கொண்டுள்ளது இத்தினத்தில் அவற்றின் கிரயம் தேறத்தக்க பெறுமதி பின்வருமாறு இருந்தது.

வகை	கிரயம் 000	தே.தே.பெ 000
A	520	600
B	300	250
C	280	300

5. 31.3.2016 இல் ரூ 750000 மீதியைகொண்ட கடன்பட்டோர் ஒருவர் 30.4.2016 இல் முறிந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார் கம்பனி இயக்குனர் 15.5.2016 இல் நிதிக்கூற்றுக்களுக்கு அதிகாரமளித்துள்ளார்.

6. 1.4.2015 இலுள்ள ஆதனம் பொறி உபகரணங்களினதும் அவற்றினது திரண்ட பெறுமானத்தேய்வினதும் உள்ளடக்கம் வருமாறு.

	கிரயம்/ பெறுமதி 000	தி.பெ.தே	கொண்டுசெல்லும் தொகை
மோட்டார்	6000	2400	3600
அலுவலகஉபகரணம்	2500	1000	1500
தளபாட பொருத்து	1500	600	900
மொத்தம்	**10000**	**4000**	**6000**

எல்லாச் சொத்தும் (குத்தகை சொத்து உட்பட) 1.4.2014 இல் 1.4.2013 இல் பெறப்பட்டதுடன் இத்தினத்தில் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் 5 வருடங்கள் இச்சொத்துக்கள் நேர்கோட்டுமுறையில் தேய்விடப்படுகின்றது.

7. 1.4.2015 இல் தளபாடபொருத்துக்களுக்கு எஞ்சியுள்ள பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்கள் என மீளமைக்கப்பட்டுள்ளது. மேலும் 31.3.2016 இல் அலுவலக உபகரணங்கள் ரூ 1800000 சந்தைப்பெறுமதியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.
8. மோட்டார் வாகனம் பொருட்களை விநியோகம் செய்யப் பயன்படுவதுடன் அவற்றின் குத்தகை காலம் 5 வருடங்கள் வருடாந்த குத்தகைகட்டனம் ரூ 1583000 நடைமுறையாண்டிற்கான குத்தகைகட்டணம் செலுத்தப்பட்டதுடன் இவை முழுமையாக குத்தகை கடன்கொடுநர் கணக்கில் வரவுவைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் வேறுபதிவுகள் இடம்பெறவில்லை குத்தகை வட்டி பின்வருமாறு.

வருடம்	**வட்டி**
2013/2014	600
2014/2015	502
2015/2016	394
2016/2017	275
2017/2018	144

9. 31.3.2016 இல் பொதுஒதுக்கத்தை மூலதனமாக்குவதன்மூலம் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு 40000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ 20 வீதம் வழங்கியது இது தொடர்பான எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளவில்லை.
10. நடைமுறையாண்டிற்கான வருமானவரி ரூ 500000 என மதிப்பீடுசெய்யப்பட்டது.

வேண்டப்படுவது

1. 31.3.2016 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2. 31.3.2016 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மாற்றக் கூற்று
3. 31.3.2016 இல் நிதிநிலைமக்கூற்று